The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XIII. **No. 3**



PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1959. Saka 1881.

Annual Subscription Rs. 4.

The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XIII. **No. 3**

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1959. S'aka 1881.

Annual Subscription Rs. 4.

CONTENTS.

No.		Pages.
1.	Editorial	
2.	Perceptible Experience in Bhāvika — Sri R. C. Dwivēdi, M. A., Sāhityāchārya	1—6
3.	கர்நாடக சங்கீத ஆதார விவரணம் — Sri P. S. Sundararāja Ayyangar	7—15
4.	ஸ்ரீமத்ராமாயணத்தில் — பிராட்டி வைபவம் — Sri R. Tirumalāchāriar, B. A.,	16—22
5.	வேதவிஜ்ஞானம் – IV –" முப்பது சகோதரிகள் " — நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	23—28
6.	वैयाकरणसिद्धान्तकौमुदी – भट्टोजिदीक्षितकृता An Analysis in English by late Sri P. V. Nāganātha Sāstri (continued from Vol. XIII. No. 2.) — Sri N. S. Dēvanāthāchāriar, Meemamsā S'irōmaṇi	139—146
7.	திருச்சோற்றுத்துறை தலபுராணம் — வித்துவான் திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை	57—72
8.	सूक्तिमालिका - श्रीनारोजीपण्डितविरचिता द्राविडानुवादेन सहिता ஸ்ரீ நாரோஜி பண்டிதரால் இயற்றப்பட்ட ஸூக்திமாலிகை தமிழுரையுடன் — நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	17—24
9.	தன்வந்தரி வைத்தியம் — Dr. S. Venkatarājan, L. I. M.	65—80
10.	श्रीमद्भागवत - माधवात्मजकृतमराठीभाषान्तर - प्रथमस्कन्ध — Sri G Nāgarāja Rao	97—112
11.	வள்ளலார் பிரபந்தங்கள் — வித்துவான் திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை	1—44
12.	Our Exchanges	1—2

THE JOURNAL OF
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY.

Vol. XIII. A. C. 1959 S'aka 1881 No. 3

EDITORIAL

ꞅue No. 3 of the 13th Volume of the Journal of The Tanjore Sarasvati Library is placed before the public. In this issue the first article is vika". It explains the meaning of the word "Bhāvika" during different ages of the history of Alaṅkāra Śāstra. The second one is the fundamentals of Karnātaka Saṅgita in Tamil. Greatness of Sīta in Ramayana is the third article justifying her greatness and in the hands of the author, the great Epic becomes Seetāyana.

The fourth article is "30 Sisters", an article based on the Vedic speculation on the dawn. The author of this article explains a mantra in Yajurveda describing the process of the creation of the Day and the "Dawn", which precedes the Day. The "Dawn" is called "Ushahs" in Vedic terminology. 30 Ushahs were created by the Lord of the Universe for dispelling darkness. Their respective functions, according to Vedic concept, form the subject of this article and the author suggests that these thirty Ushahs, who were sisters, were considered responsible for marking the division of time into months. The time-honoured Hindu astronomical factor for dividing time is the entry of the sun in the twelve houses of the zodiac as found in Sūryasiddhānta and other works on astronomy, and the duration of his stay in each sign.

Siddhānta Kaumudi, Tiruchottruturaipurānam, Sūktimālika, Dhanvantri Vaidyam and Marāthi Bhagavatam are serial publications continued from previous issues.

The last but not least is Vallalār Prabhandangal, three minor works of Vallalar, bringing out in a nut-shell the important tenets of Śaivasiddhāntam.

S. Gopalan,
Editor.

PERCEPTLIKE EXPERIENCE IN BHĀVIKA

BY

R. C. DWIVEDI, M. A., Sāhityāchārya.

Assistant Professor, University of Lucknow.

The Poet by virtue of his poetic intuition which is described in mystic language as the third eye of [1] Trilōcana (Three-eyed) directly perceives every form of existence past, present and future. Sometimes the poet delights us by the picturesque presentation of the things gone by; on occasions he paints a vivid and striking picture of the 'shape of things to come.' No doubt, a historian also unfolds the past and a prophet gives the glimpses of the future but matter-of-fact as they are, none presents the past or the future as though it were present. Only a poet can do it.

कोऽन्यः कालमतिक्रान्तं नेतुं प्रत्यक्षतां क्षमः ।
कविप्रजापतींस्त्यक्त्वा रम्यनिर्माणशालिनः ॥ Rājataraṅgiṇi 1·4.

This present-like representation of the past and the future, which is the tangible result of the poet's power of visualisation is technically called Bhāvikālaṅkāra.

अतीतानागतयोः प्रत्यक्षायमाणत्वं भाविकम् । Alaṅkārasarvasva.

Older poeticians like Bhāmaha and Daṇḍin described it as quality pervading a literary work.[2]

भाविकत्वमिति प्राहुः प्रबन्धविषयं गुणम् ।

Here the use of Prāhuḥ suggests that even before Bhāmaha this concept of Bhāvika was well-recognized though probably for the sake of classification the learned poeticians were obliged to include it under Alaṅkāras :—

भाविकत्वं च निजगुरलंकारं सुमेधसः ।

Ūdbhaṭa, however, was the first Ālaṅkārika who assigned to it the status of a definite alaṅkāra of a Vākya, albeit, Pratihārendurāja, his commentator struggled to retain its old concept like Atiśayōkti of Bhāmaha and Śleṣa of Daṇḍin. Bhāvika, in its early development enjoyed a superior status than a mere Alaṅ-

---

१. सा हि चक्षुर्भगवतस्तृतीयमिति गीयते ।
येन साक्षात्करोत्येष भावांस्त्रैलोक्यवर्तिनः ।

2. The commentator on Bhaṭṭi would interpret the word प्रबन्ध as the part of poetic conception and not a literary work.

kāra. It was probably because it is concerned with the presentation of not an aspect of a thing as the Upamā etc; but with the presentation of the whole event past or future. Ruyyaka (1200 A. D) in his exposition of this Alaṅkāra explains the word Bhāvika in two ways. They are as follows :—

१. कविगतो भाव आशयः श्रोतरि प्रतिबिम्बत्वेनास्तीति ।

२. भावो भावना वा पुनः पुनश्चेतसि विनिवेशनं सोऽत्रास्तीति ।

The first idea partly originated in Daṇḍin[1] who said

भावः कवेरभिप्रायः काव्येष्वासिद्धिसंस्थितः ।

And this embodies the well-known theory of poetics that poetry is the representation of the poet's vision (कवित्वं हि कवेर्भावः). In dramaturgy the term Bhāva which Bharata classified into forty-nine types, has a technical sense with which we are not particularly concerned at present though it may be noted in passing that the dramaturgical Bhāvas or mental states which suggest Rasa into being have their origin in the poet's mind.

कवेरन्तर्गतं भावं भावयन् भाव उच्यते । ——अभिनवभारती

The term Bhāva is used here in its more popular sense of a poetic idea. The reader with aesthetic susceptibility throbs with poet's ideas which are reflected in him. Bhāvika is thus a reflection of the poet's vision in the reader's mind,

कविभावस्य श्रोतरि प्रतिबिम्बतापत्तिः ।
स्वरूपं ह्यस्य श्रोतरि कविगतभावप्रतिबिम्बनम् ॥

This reflective unity or the infusion of the spirit of the poet and the reader (कविश्रोतृभावद्वितयसंमेलन - प्रतिहारेन्दुराज) makes it possible for the latter to witness the poet's creation as his own. This accounts for the visualisation of the poet's idea by the reader.

The second explanation of Bhāvika viz.,

भावो भावना वा पुनः पुनश्चेतसि विनिवेशनं सोऽत्रास्तीति ।

1. It is significant to note that Bhōja radically differs from all ālaṅkārikas in his description of Bhāvika. But his definition of it as

स्वाभिप्रायस्य कथनं यदि वाऽप्यन्यभावना ।
अन्यापदेशो वा यस्तु त्रिविधं भाविकं विदुः ॥ ——सरस्वतीकण्ठाभरण ४-८९

clearly follows the etymological meaning of Bhāvika which is otherwise substantially different from its generally admitted concept as the presentation of past and future as if present.

draws attention to the important role that Bhāvanā plays in the present alaṅkāra. In the case of such scriptural texts as रामिमासत and अग्नी प्रादात Mīmāmsaka admits a transformation of the literal meaning the past tense and the third person, etc., used in these sentences are turned into the present tense etc. This change is given the name of Bhāvanā by the followers of Kumārila (Jayaratha in his comment on Tantrālōka 1 p. 177). Bhāvanā involved in the concept of Bhāvika has some affinity with that of Mīmāmsaka in so-far as it means the apprehension of the past or future as if it were present. The meaning and the function of Bhāvanā with reference to Bhāvika will be better understood by the epistemic analysis of the aesthetic cognition of this Alaṅkāra. To begin with Bhāvika is the consciousness of the not-present as present. It is an almost perceptual cognition of the past or future i. e., mediate objects presented in imagination' An act of cognition presupposes the triple form; (त्रिपुटी) the subject who knows, the object that is known and the means of cognition and perception is distinguished by its directness or immediacy (साक्षात्त्व or अपरोक्षत्व). In the first explanation of the term Bhāvika which explained the unification of the thought and feelings of the poet and the aesthete we were given the clue to the subject who knows. It is the सहृदय or aesthete – who in his mirror-like heart receives the reflection of the poet's intention. It is the cogniser or the subject. The events or ideas described in Bhāvika are the objects. And they are mediate since they belong either to the past or the future. What does then make them shine as if immediate? To this Ruyyaka replies that either the theme is inherently charming or even when it is not the poet's pictorial style (Varṇanā) presents it so beautifully that it seems to live before our eyes.. According to Bhāmaha, the contributory causes to this are the presentation of a picturesque, exalted and wonderful idea, the adaptability of the story to being presented on the stage or conveyed by gestures and a harmony of words.[1] To this list Daṇḍin seems to add

(१) परस्परोपकारित्वं सर्वेषां वस्तुपर्वणाम (२) विशेषणानां व्यर्थानामक्रिया

(३) स्थानवर्णना (४) व्यक्तिरुक्तिक्रमबलाद् गम्भीरस्यापि वस्तुनः

(1) Artha or idea should be extremely striking (अत्यद्भुत) and that (2) they should be presented in a perspicuous style (वाचामनाकुल्येन). This emphasis on शब्दानाकुलता or perspicuity of words by Bhāmaha on उक्तिक्रमबलाद् व्यक्तिः by Daṇḍin and on वाचामनाकुल्य by Udbhata has led Ruyyaka to believe that Bhāvika is essentially a description of such characteristics of an object which are given to it by the force of poetic style (Varṇana) though he has not denied that even a

१. चित्रोदात्ताद्भुतार्थत्वं कथायाः स्वभि वि)नीतता।
शब्दानाकुलता चेति तस्य हेतुं प्रचक्षते ॥

—भामहालंकार ३—५४।

'real' theme which is not poet's creation or प्रौढोक्तिनिष्पन्न can come under Bhāvika. From these observations it follows that the extremely striking ideas or events couched in beautiful words help to make the objects as if immediate. Jaya-ratha - a commentator on Ruyyaka has laid a special emphasis on the charm of words and meanings - Vācyavācakaramaṇīyaka. According to him there will be no Bhāvika if either the word or the meaning is not beautiful शब्दार्थसाहित्य or शब्दार्थसौभाग्य to borrow the terminology of Kuntaka and Parāśara Bhaṭṭa are particularly desirable. Strikingness of the idea and the charming effect of the words are the modus operandi for the presentlike representation of the objects So far we have discussed the subject who knows and the objects that are known. Bhāvanā is the means. For normal perception we need the aid of an organ of sense to perceive an object which should be in immediate vicinity of the perceptive sense. In his ordinary perception the cognizer is conditioned by time and space and the law of cause and effect, an aesthete with the help of peculiar poetic power called Bhāvanā raises himself above all these. Like a mystic the poet and aesthete with aesthetic susceptibility visualise as actually present before him a thing of the past or the future. Bhāvanā is the contemplative power innate in the poet and the reader. Perceptuality in Bhāvika is thus the result of this Bhāvanā coming in contact with mediate yet wonderful objects beautifully presented by the poet.

Now we might discuss in what respect the poetic cognition of Bhāvika differs from the conciousness that results from such alaṅkāras as भ्रान्तिमान्, अतिशयोक्ति, प्रतीयमानोत्प्रेक्षा, काव्यलिंग, स्वभावोक्ति and रसवत्. In both भ्रान्तिमान् and भाविक there is a cognition of a thing which is not there but while in the former where one thing is mistaken for another similar to it the cognition is erroneous and based on similarity, in latter the reader gets the vision of a thing exactly as it was or as it would be. Thus भ्रान्तिमान् represents a mistaken identity and consequently the cognition thereof is erroneous; Bhāvika gives immediate vision of mediate and is not erroneous in its cognitive results.

In Atiśayōkti the विषयिन् swallows up the विषय e. g. in चन्द्रोऽयम् the Upamāna moon altogether takes in the उपमेय the face. Hence Atiśayōkti is a consummated into susception or Siddha Adhyavasāya. The process of Bhāvika cognition has no अध्यवसाय when a thing of the past or the future is visualised the reader is conscious of its pastness and the future. The past and future are invariably presented here in their relevant form which avoids the element of अध्यवसाय or आहार्यत्व in the process or resultant cognition of Bhāvika.

When the poet presents to us a past or future thing as though it were present one is likely to mistake it for utprēkṣāgamya of course, because the words इव, मन्ये, शङ्के etc., are absent. But there is a fundamental difference between

the two. Whereas in utprēkṣā there is intro susception in process of completion (साध्य अध्यवसाय) and उत्प्रेक्षा is सम्भावना which like knowledge and the feelings of pleasure and pain is essentially an attribute of the self. But in Bhāvika the immediacy is not the form of सम्भावना and thus it is not the exclusive attribute of the self because it has reference to the objects also which Bhāvanā makes to shine distinctly before the mind's eyes.

Udbhaṭa has put काव्यलिंग and भाविक in one group. Mammaṭa describes काव्यलिंग immediately after Bhāvika. Are they similar in any respect. The हेतु in काव्यलिंग and the ideas in Bhāvika must be striking to be poetical. But strikingness of ideas is not an invariable sign of the signet – the immediacy. Bhāvika-consciousness is essentially characterised by the immediate vision of the mediate. This is like a mystic's visualization of the objects of his own creation. A striking theme and an attractive style present the picture clearly but there is no invariable relation (poetic of course) between the two. Hence the cognition of Bhāvika and Kāvyaliṅga are different.

The distinction of Bhāvika cognition from Svabhāvōkti and Rasavad will be of greater interest. Svabhāvōkti is a penpicture of such actions and dispositions of an object which must be characteristic of it. The theme must be poetically striking and should bear testimony to the poet's power of minute observation. No doubt, Svabhāvōkti is based on 'realism' yet none but a poet can affect it. The matter depicted should be Sūkṣma which Ruyyaka interprets as कावत्वमात्रस्य गम्य. It requires a poet's power of observation to observe it in every detail – small or big. And further, it requires the poet's power of expression to present the object with perfect vividness. Take an example of Svabhāvōkti :

चलापांगां दृष्टिं स्पृशसि बहुशो वेपथुमतीं
रहस्याख्यायीव स्वनसि मृदु कर्णान्तिकचरः ।
करं व्याधून्वत्याः पिबसि रतिसर्वस्वमधरं
वयं तत्त्वान्वेषान्मधुकर हतास्त्वं खलु कृती ॥

Here the picturesque presentation of the actions of a bee seems to dance before our eyes. An aesthetic who has the faculty of self-identification with the events feels that this is so natural of a bee. Ruyyaka calls it वस्तुसंवाद. Now so far as perfect vividness is concerned Svabhāvōkti and Bhāvika resemble one another. But while the former is based on 'realism' the latter has a striking theme as its starting point and thus स्वभावोक्ति is the cognition of लौकिक वस्तु or ordinary objects possessed of subtle characteristics ; the भाविक is essentially the cognition of strikingly wonderful or लोकोत्तर. There is one more important point of difference between the two which we shall take up in the course of distinction of Bhāvika from Rasavad. In both Rasavad and Bhāvika what is described shines

as if dancing before our eyes (पुरःस्फुरत्) and in both there is an element of relish (चमत्कार). Beyond these there is no point of similarity between the two. Rasavad has Rati etc. which are particular mental states as its content and these are evolved by appropriate vibhavas etc. Bhāvika describes events or ideas and does not have the particular mental states as its content This, then is the difference in respect of the context. From Rasavad, Bhāvika differs in respect of the form of cognition too. Rasavad implies the presentation of that Rasa which happens to be subordinate to another Rasa. In this cognition neither there is any reference to the temporal and spatial distinctions nor the cognized is known to be different from the cognition. This is in the words of Ruyyaka साधारण्येन प्रतीति. as distinct from ताटस्थ्यप्रतीति in Bhāvika. This universalised cognition is the result of हृदयसंवाद or the correspondence of heart to the aesthetic object. And the form of cognition can be represented simply as 'I' or अहम्. This is like the experience at the state of परमाद्वैत or supra-monism where 'this' merges into 'I'. Thus while the cognition of Rasavad involves no distinctions, Bhāvika does. Bhāvika cognition refers to the past and the future. Here the cognizer is conscious of the distinctions of the subject, object and the process of knowledge although he regards them essentially non-different. The Bhāvika cognition can be represented as 'I know this' इदमहं जानामि Here also 'I' is the substratum of the 'this' because ultimately 'this' or इदम् is the manifestation of 'I' or अहम्. To be explicit: Bhāvika represents the objective apprehension of the events which are poet's creation and therefore ultimately rest in the poet. Ruyyaka calls it ताटस्थ्येन प्रतीतिः which his commentator Jayaratha explains as इदमहं जानामीति सामानाधिकरण्येन प्रतीतिः'. This cognition resembles the experience of the subjects who belong to the Īśvara category of Śaiva system and who are technically called vidyēśwaras. It follows from this that speaking in philosophical terms of Śaivamonism, Rasavad apprehends or cognises 'I' स्वभावोक्ति vividly represents 'this' and Bhāvika is the cognition of 'I this' or अहमिदम् perhaps evenly balanced. The following example aptly illustrates the Bhāvika

दर्भाङ्कुरेण चरणः क्षत इत्यकाण्डे तन्वी स्थिता कतिचिदेव पदानि गत्वा ।
आसीद्विवृत्तवदना च विमोचयन्ती शाखासु वल्कलमसक्तमपि द्रुमाणाम् ॥

Here Duṣyantha narrates to his companion Vidūṣaka the love-sweets actions of his cherished one, such as, the foot being pricked by Darbha sprouts. The event is past but Duṣyanta's emotionally ornate representation makes them live again. Vidūṣaka's reaction to it is quite appropriate.

किंदं तुए उववणं तपोवणं ति पेक्खामि ।

Here the use of पेक्खामि (I perceive) is very significant. It represents the form of cognition that arises from the vivid description of the past and the future.

கர்னாடக சங்கீத ஆதார விவரணம்.

BY

P. S. SUNDARARAJA AYYANGAR.

காப்பு

ஆதரவாம் உயிர்க்கெல்லாம், திரு ஸரோஜாதேவியுடன்,
ஆநந்தமய ஞானஹயவதனனென்னும்,
ஆதிபுருடோத்தமன், நல்லுலக மெய் ஆசிரியன்,
அருள்திரு அயிந்தைமாபுரி சீர்க்கிரி வாசன்தானும்,
ஓதுமொழிற் கலைமகளும், பூமகள் தன்தனயன்,
ஒருபோதும் பிறப்பிறப்பில்லாத் தும்புருவுடன்,
சாதுக்களை ரக்ஷிக்கும் குலபதியும் (கணபதியும்)
அடியேன் சங்கீத ஆதாரவிவரணத்தின் காப்பாம்.

கர்னாடக சங்கீதம், கலைகளில் சிறந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இக்கலையை ப்ராசீனகாலத்தில் முன்ஜன்மபாக்கியத்தால், நாரத பகவானுடையவும், மற்ற அபிமானி தேவதைகளினுடையவும் உபதேசத்தினால், பக்திமான்களின் பக்தி அதிகமாகி, விசேஷ ஞானப்பிராப்தியால், சாஸ்திரத்தை அநுசரித்துப் பாடக்கூடிய சக்தியைப் பெற்றும், ஸ்வரங்கள், கீதங்கள், வர்ண மெட்டுக்கள், கீர்த்தனங்களென்கிற பலவகை ஸாஹித்யங்களை, அவரவர்களின் லக்ஷியத்துக்குத் தகுந்தவாறு பாடி மிகவும் அநுபவித்து நமக்கும் அந்த வழியைச் சாஸ்திரங்களின் மூலம் நன்கு காண்பித்திருக்கிறார்கள்.

அந்தச் சம்பிரதாய முறையிலேயே, முன்காலம் தொட்டு, சத்சிஷ்யர்கள் குருகுலவாசம் செய்து, தாங்கள் சங்கீதத்தின் உண்மைகளைச் சரியாக அறிந்தும், ஆராய்ந்தும், கலையை விருத்திசெய்து வைத்திருக்கிறார்கள்.

இந்தக்கலையைப்பற்றி அவ்வப்போது ஒவ்வொருவரும் இயற்றிய சாஸ்திர ஆராய்ச்சிகள் அடங்கிய நூல்கள் பலவாயும், மற்றும் கிரந்தங்கள் அநேகம் இருக்கின்றனவே என்றாலும் அவைகள் சங்கீதம் என்கிறதை பொதுவாகச் சரிவர விளக்கி எல்லோரும் சுலபமாக அறிந்து கொள்ளக்கூடிய தன்மையில் இருக்கின்றனவென்று சொல்ல இயலாது.

ஆகவே, நானும் கர்நாடகசங்கீதத்தைச் சரியானமுறையில் சிகரம்போன்ற பல்லவி வித்வானான காலஞ்சென்ற நாமக்கல் பிர்ம்மஸ்ரீ நரசிம்ம அய்யங்கார்

ஸ்வாமியிடம் குருகுலவாசம்செய்து அப்பசித்தவரிடம் தொடர்ச்சியாகப் பயின்றதின் காரணத்தினுல் சர்ச்சையின் மூலமாகவும், அநுபவத்தினுலும், ' கர்னுடக சங்கீத ஆதார விவரணம்" என்கிற ஒரு விளக்கத்தை என் சிற்றறிவுக்குத் தெரிந்த வரையிலும், யாவரும் கர்னுடக சங்கீதம் என்கிறதை சுலபமாக அறியுமாறு எழுதி உள்ளேன். அதன் சாராம்சமான சுருக்கத்தை இப்பத்திரிகையின் மூலம் அறிவிக்க மிக விரும்புகிறேன்.

அதாவது:— சங்கீதம் என்பது தானுகவே ஒரு தனிப்பட்ட விஷயமல்ல. ஆனுல் ச்ருதி, லயம், பாவம், ஜீவன் மற்றும் தேவையான ஸ்வரங்களின் சேர்க்கை ஆகிய இவைகளால் உண்டாக்குகிற தொனியின் மூலமாக ஸாஹித்யத்தை நன்ருகக் கலந்தும், வர்ணமெட்டுக்களோடு வெளிப்படுத்துகிறதையே சங்கீதமென்கிறேம்.

என்ருலும், ச்ருதியானது தானுகவே நாதம் பொருந்தியதில்லையாகையால், அது தொனிக்க முக்கியமான ஆதாரம் அத்யாவச்யமாகவே இருக்கிறது. அந்த ஆதாரம்தான் பிரணவநாதமாகிற "ஓம்" காரவாச்யமெனப்படுகிறது. ஏனென்ருல், பிரணவம்தானே நாதரூபமாகவே இருக்கிற தன்மையது, ஆகவே, ச்ருதி அந்த நாதத்திலிருந்தும் ஜனிக்கிற மிகவும்நுட்பமான ஆரம்ப தொனி (Beginning Sound) ஆகிறது.

ஆனுல், "ச்ரு", என்கிற வடமொழிச் சொல் காதால் கேட்கிற சப்தம் யாவற்றையுமே சாதாரணமாகக் குறித்தாலும், சங்கீதத்தில் "ச்ருதி"யானது மிகவும் ஆச்சரியகரமான பொருளாகிறது.

எவ்விதமென்ருல், நமது காதுகளுக்கு நாதத்தை கேட்கும் தன்மையை ஈதரோடு கலந்து செய்கிற ஆகாயமும், காற்றும் எங்கெல்லாம் பரவி நிறைந்திருக்கிறதோ அவ்வளவு பரந்த தொன்ருகும். எவ்விதமெனில், ஆகாயமே சப்தத்தைக் கேட்கும்படியான தன்மையைச் செய்கிறதாகையினுல், ஆகாயம்போல் அவ்வளவு பெரியது என்று கூறினேம்.

ஆனுல் சங்கீதத்தில் "ச்ருதி"யை மனதினுல் அறிவது மிகவும் அசாத்தியமானது. அதை ஞானத்தினுலேயேதான் அறியமுடியும். எவ்விதம் ஆலம் வித்தானது மிகவும் நுட்பமாக இருந்தாலும் அதன் மரமானது மிகவும் விசாலமாக வளர்கிறதோ, அவ்விதமே ச்ருதியானது ஆரம்பகாலத்தில் மிகவும் நுட்பமாக இருந்தாலும், வரவர ஆகாசம்போல் விரிந்து பரவுகிறது. ஆகையினுல் "ச்ருதி" ஆகாசம்போல் பெரியது என்பது இதன் தாத்பர்யம், என்ருலும், சங்கீதத்திற்குத் தேவையான ச்ருதியைக் கொடுக்கிற துணைக்கருவி தம்பூரே யாகிறது. அதன் ச்ருதிக்குவேண்டிய காற்றும் தம்பூரிலியே அடங்கி இருக்கிறது.

ஆகையால், எந்த நாதமானது ஜனிக்கும் காலத்திலேயே காதுகளுக்குக் கேட்கும்படியான தன்மையைச் செய்து மறுபடியும் ஜனித்த இடத்திலேயே, அதாவது "ஓம்" கார வாச்சியத்திலேயே லயமாகிறதோ, அந்த ஆரம்ப நாதத்திற்கே சங்கீதத்தில் "ச்ருதி" எனப்பெயர் வழங்கப்படுகிறது. (The Sound that ends where it begins is Sruthi in Music)

மேலும் மிகவும் நுட்பமான ஆரம்பதொனியாகிற "ச்ருதி"யை விரிவாக்கி காதுகளுக்கும், மனதிற்கும் அதன்மூலமாக ஆன்மாவிற்கும் ஒருவிதமான சாந்தியையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணுகிற இன்பரஸமான நாதத்திற்குச் "ஸ்வரம்" என்று பெயர். அதேநாத பிரணவமாகிற தொனியையே மேன்மேலும் அவரவருடைய மனோபாவத்திற்குத் தகுந்தவாறு விருத்திசெய்கிறதையே சங்கீதத்தில் "ராகம் என்கிறோம்.

அவ்விதம் விருத்திசெய்கிற நாதத்தில் நாம் உட்கொண்டும் வெளியே விடுகிற மூச்சுக்காற்றில் மேற்சொன்ன மிகவும் இன்பரசமான "ச்ருதி" யாகிற ஆரம்பதொனியை விசாலமாக்கி, அதில் தனித்தனியாக ஸ்வரங்களாகிற அக்ஷரங்களையோ, அல்லது சாஹித்யங்களையோ பொருத்தமாகக் கலந்து பேதமில்லாமல் பாடுகிறதே சாஸ்திரத்தை அநுசரித்த அதாவது சம்பிரதாய சங்கீதமென்று வழங்கப்படுகிறது.

இதற்காகவேதான் சங்கீதத்தில் ஸப்த ஸ்வரங்களைத் தொனியின் அளவுகளைக் குறிக்கும் பிரமாணங்களாகவும், ஆதாரங்களாகவும் ஏற்படுத்தி, அவைகளின் மூலமாக எந்தெந்த ஸ்வரத்தின் தொனியை எந்தெந்த சமயங்களில், தனிமையாகவோ நேராகவோ, வளைவாகவோ, ஒன்றோடொன்று சேர்த்தோ அல்லது இவைகளின் மாறுதல்களையோ வெளியில் நிரூபிக்கக்கூடுமோ, அத்தகைய முறையில், ஒரே தொனியாகிற ஏழு ஸ்வரங்களில் ஒன்றுக்கொன்று வித்யாசங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பேதங்களை வேறு எவ்விதத்திலும் சுலபமாக நிர்ணயிக்குமாறு காண்பிக்க முடியாது. ஆகையினால் அவைகளை ஸ்வரங்களென்கிற அக்ஷர ரூபமாகவேதான் காண்பிக்கவேண்டியிருக்கிறது. அந்தத் தொனிகளையே மேன்மேலும் அக்ஷரங்களின் உதவியோடு விருத்தி பண்ணுகிறதே ராகபாவமாகும். ஆகையால் அக்ஷரங்களின்றி ஸ்வரங்களின் ஸ்தானங்களையோ, அல்லது ராகபாவங்களின் ஏற்றக்குறைவையோ, அல்லது மாறுதல்களையோ விளக்குவது அசாத்தியமேயாகும். ஆகவே 'ச்ருதி" இல்லாமல் "சப்தமோ" அல்லது சங்கீதம் மாத்திரமோ தனிமையாகக் கிடையாது.

இதனாலேயே, ஆகாயத்தில் உண்டாகிற தொனிகளுக்கெல்லாம் அததற்குத் தகுந்தவாறு "ச்ருதி" இருக்கிறது. மிருகங்களின் சப்தம், பக்ஷிகளின் தொனி,

மனிதர்களின் வார்த்தை, சங்கீதம், உலோகங்களின் நாதம், நீர் வீழ்ச்சியின் ஓசை, வாத்தியங்களின் கோஷங்கள், சமுத்திர அலையின் ஓசை முதலிய மற்றும் ஏற்படுகிற தொனிகளுக்குத் தகுந்தவாறு, தனித்தனியே "ச்ருதி" இருக்கிறது. அவைகளை ஊகித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

தகுதியான "ச்ருதி" இல்லாமலும் "ச்ருதி"யின் கலப்பு இல்லாமலும் எவ்வளவு இன்பமாகப் பாடினாலும் "ச்ருதி" கலப்பு இருக்கிற பாட்டைப்போல் ரஸிக்காது.

ஆகவே, "ச்ருதி" என்பதை விவரித்தால் "சங்கீதமாகிறது". "சங்கீதம்" என்பதைச் சுருக்கினால் "ச்ருதி"யாகிறது. "ச்ருதி"யே "சங்கீதமாக" இருக்கிற படியால் "ச்ருதி" இல்லாமல் "சங்கீதம்" பாட முடியாது.

ச்ருதியையே அநுசரித்து சங்கீதமுமிருக்கிறபடியால், "ரி, க, ம" ஆகிய ஸ்வரங்களில் ஒன்றைப் பஞ்சமமாகப் பாவித்தும், தம்பூரின் மற்ற தந்திகளையும் அததற்குத் தகுந்தவாறு ச்ருதி செய்து, அததினின்றும் தொனிக்கிற நாதத்தோடு பாடினால், அந்தந்த நாதத்தை அநுசரித்தேதான் சங்கீதமுமிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அவ்விதங்களான ச்ருதியின் ஒத்தாசையினால் பாடுகிற ராகங்களும், மற்றும் பாட்டுக்களும், அதையேதான் ஆரம்பம் முதற் கொண்டு, முடிவாகிற வரையில் அநுசரித்திருக்கும் என்றாலும் மற்ற ஸ்வரங்களின் சரியான தொனியைக் காண்பிப்பதும் அசாத்யமேயாகுமென்பதில் சந்தேகமில்லை. தவிர, ச்ருதியின் கலப்பும் ஏற்படாது. அதற்காகப் "பஞ்சம" ஸ்வரத்தின் தொனியுடன் கூடின ச்ருதியாகிற தொனியுடன் பாடுகிறதில் ஏற்படுகிற எல்லா ஸ்வரங்களினுடையவும் நிஜமான தொனியைப்போலவும், பாடுகிற காலத்தில் ஏற்படுகிற ச்ருதி கலப்பும், மெய்ம்மறக்கக்கூடிய ஆநந்தமும் இருக்கவே இருக்காது.

எவ்விதமெனில், உலகில் தாயைப்போல் குழந்தைகள் ரூப குணம்சங்களில் ஒத்திருக்கிறதைப்போலவே, "தாயாகிய ச்ருதி"யை அநுசரித்து "குழந்தையாகிற சங்கீத"முமிருக்கும். ஆகவே, சரியான "பஞ்சம ச்ருதி"யையே ஆதாரமாகக் கொண்டு பாடுகிறதே சாஸ்திர உசிதமான சங்கீதமெனலாம். ஆனது பற்றியே தான் "ச்ருதி"யைச் சங்கீதத்திற்கு "மாதா" என்றும் கூறப்படுகிறது.

லயம்

சங்கீதத்தில் "லயம்" என்கிற தாளத்தை "பிதா," வென்றும் சொல்லப் படுகிறது. "பிதா" என்றால் பெற்றவர் என்பது பொருளானாலும், போஷிக் கிறவர் என்ற பொருளும் சொல்லலாம். அதாவது பிதா தன் குழந்தையைப் போஷிக்க முக்கிய காரணகர்த்தாவாக இருக்கிறமாதிரியே "தாளம்,"

சங்கீதத்தில் பாடுகிற ஸ்வரங்கள், ஸாஹித்யங்களைப் போஷிக்க, அதாவது தகுந்த ஒருவித காலப்ரமாணத்தில் ஆரம்பிக்கிறதைச் சரியாகமுடிக்க காரண கர்த்தாவாக இருக்கிறது.

லயம், சாதாரணமாகக் காலப்ரமாணத்தைக் குறிக்கிறதாக இருந்தாலும் சங்கீதத்தில் இவை திஸ்ரம், சதுரஸ்ரம், கண்டம், மிச்ரம், சங்கீர்ணம் என்கிற ஐந்து ஜாதிகளாகின்றன. இவையே முக்கியமான ஏழு தாளப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டும், சங்கீதசாஸ்திரத்தில் உள்ள தசவிதகமகங்களில் ஒரு ஸ்வரத்திற்கும், மற்றொருஸ்வரத்திற்கும், மத்தியிலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையில் நேராகவும், குறுக்காகவும், மேலும், கீழும் (அதாவது ஆரோஹண, அவரோஹணக் கிரமங்களில்) செல்லுகிற ஸ்வரங்களிலோ, வளைவாகச் செல்லுகிற ஸ்வரங்களிலோ அல்லது ஸாஹித்யங்களிலோ, இடைகளில் ஒரேவித காலப்ரமாணத்தைத் தகுந்தவாறு, அல்லது சமயோசிதமாகவோ நன்ருகக் காண்பிப்பதற்கு முக்கிய சாதனமாக இருக்கிறது.

தவிர, லயமே ஸ்வரங்களையோ, ஸாஹித்யங்களையோ முதலில் ஆரம்பிக்க வேண்டிய, மேற்சொன்ன ஐந்து ஜாதிகளான, ஏழு பிரிவுகளில், ஒருவிதக் காலத்தையும், அவைகள் முடிவாகிற காலத்தையும், மறுபடியும் அவைகளைக் கிரமமாக ஆரம்பிக்கவேண்டியவும், முடிக்கவேண்டியவுமான சரியான கால அளவுகளையும் குறிப்பிட முக்கியகாரணமாகவுமிருக்கிறது. சங்கீதத்திற்குத் தாளம் இல்லாவிட்டால் இவைகளை சம்பிரதாயமான முறையில் அநுசரிக்க முடியாது. ஆகவே, சங்கீதத்தோடேயே தாளமும், வஸ்துக்களுக்கு நிழலைப் போல ஜனித்ததாகச் சொல்லவேண்டும்.

அதற்காகவே, அநேகவிதத் தாளவாத்யங்கள் சங்கீதத்திற்கு, அல்லது இசை வாத்யங்களுக்குத் தகுந்தவாறு, உபகரணங்களாக உபயோகிக்கிருர்கள்.

ஆகையால், தாயாகிய ச்ருதியும், தகப்பனுகிய தாளமும் (லயமும்) எப்படி இருக்கின்றனவோ, அவைகளை அநுசரித்தே, குழந்தையாகிற சங்கீதமுமிருக்கும்.

இரண்டும் சரியாக இருந்தால் பாவத்தோடும் பரிபூரண ஆனந்தத்தை நன்கு ஊட்டும்.

"பாவம்"

சங்கீதத்தில் "பாவம்" என்கிற சொல்லுக்கு "ரசம்" என்பது பொருளாகிறது. அதாவது ஒரு ஸாஹித்யத்தின் உண்மைப் பொருளை, கீர்த்தனகர்த்தா சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு எவ்விதம் அநுபவித்து அந்த ஸாஹித்யத்தைப் பாடியிருக்கிருர் என்கிறதை உணர்ந்து, பாடுகிறவரும் அதே உணர்ச்சியோடு பாடுவதேயாகும்.

Sruthi," எனப்படுகிறது. இதில் எல்லாவிதங்களான சப்தங்களும், நாதங்களும் அடங்குகின்றன என்கிறதில் சந்தேகமில்லை.

இவ்விதமான ச்ருதியுடன் பாடி பாடுகிற ராகங்களுக்கேற்றவாறு, ஸ்வரங்கள் குறையாமல், தசவித கமகங்களிலும், ஸ்வரசஞ்சாரம் செய்தால், ஸ்வரங்கள் அங்குமிங்கும், மேலும், கீழும், நடமாடுகிறவைகளைப்போல் இருக்கும். ஏனென்றால், தம்பூரில் ஜீவன் நன்றாக த்வனிக்கிறதினாலே, ஸ்வரங்கள் ஜீவனுள்ள பிராணிகள் நடமாடுவதைப்போல் நடமாடி அதனதன் ஸ்தானத்தை அடைந்ததும் எவ்வித மாறுதலுமில்லாமல் இருக்கும். இதையேதான் சங்கீத சாஸ்திரத்தில் Permutation and Combination of Music என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதமான ச்ருதியுடன் பாடுகிறதை யோகத்தைச் சார்ந்த சங்கீதமென்று சொல்லலாம்.

"பாடுகிறது எவ்விதம்"

சங்கீத சாஸ்திரத்தில் ஏற்கனவே ஏற்படுத்தி இருக்கிற மேளகர்த்தா ராகங்கள் 72ல் சுத்த மத்திம ராகங்கள் 36, ப்ரதி மத்திம ராகங்கள் 36, இவைகளின் ஒவ்வொன்றிலிருந்தும் தனித்தனிப் பெயர்களுடன் உண்டாயிருக்கிற எண்ணிறந்த அபூர்வகளை அல்லது ஜன்ய ராகங்கள் சாதாரணமாக கணக்கில் அடங்காதவைகள் என்றே சொல்லவேண்டும், என்றாலும் ஒரு கர்த்தா ராகத்திலிருந்து அநேகம் ஜன்ய ராகங்கள் உண்டாயிருக்கிறதானாலும், கர்த்தா ராகத்தின் லக்ஷணம் அவைகளுக்கு ஏகதேச சம்பந்தம் அந்த ஜன்ய ராகங்களுக்கு இருக்கிறதானாலும், பாவமும், கமகங்களினால் ஏற்படுகிற இதர லக்ஷணங்கள் ஒவ்வொன்றுக்கும் வித்தியாசப்படுகின்றன. ஏனென்றால் மூர்ச்சனம் என்கிற பொதுவான கமகம் ராகத்திற்கேற்றவாறு வித்யாசப்படாவிட்டால் சங்கீதம் பாடவே முடியாது, ஸ்வரப்ரஸ்தாரங்களும் செய்யவே முடியாது.

ஆகவே ராகம் பாடுகிறதென்கிறது தேவையான உயிரெழுத்து அக்ஷரங்களையும், பாடுகிற ராகத்தின் ஸ்வரஸ்தானங்களை லக்ஷியங்களாக்கியும், ஆரோஹண, அவரோஹண, கிரமங்களில் ஜீவனோடும் கலந்து, கமகங்களுடன் சேர்த்து ராகத்தைப் பாடுவதோடும், சங்கீத சாஸ்திரத்தின் முறையே, நமது ச்வாசக்குழாய்களின் வழியாகத் தொனியின் மூலம், மேலே விவரித்திருக்கிற தம்பூர் நாதத்துடன் விஸ்தரிக்கிறதையே ராகம் பாடுகிறதென்கிறோம்.

இவ்விதம் செய்தால், பாடுகிற ராகங்கள், கீர்த்தனங்கள் முதலியவைகளெல்லாம், சுத்தமாகவும், ஆநந்தகரமாகவும் இருக்கும். இம் முறையில் பாடுகிறதையே கர்நாடக சங்கீதமென்கிறோம்.

"கமகம்"

வடமொழியில் "கமகம்", என்றால் "அசைவு", அல்லது இடத்தைவிட்டு இடம் நகருகிறது என்பது பொருள். கமகங்கள் பாடுகிற ராகங்களுக்கேற்றவாறு, நேராகவோ, அல்லது குறுக்கில் வளைவாகவோ தொடர்ச்சியோடும், ஸ்வரங்களைச் சுத்தமாகப் பாடினால், அந்தந்த ராகங்களின் அழகையும், பெருமையையும், மூர்ச்சனையையும், பரப்பையும், பாவம் என்கிற ரசத்தையும் சரியாகக் காண்பிக்கிற ஒரே வழியாகிறது. இவ்விதம் அநுசரிக்கிறதையே "கமகம்" என்கிறோம். கமகங்களோடு பாடுகிறதே சிறந்த சங்கீதமாகிறது. ஆகவே கமகங்கள், ராகங்கள், ஸாஹித்யங்கள் பாடுவதற்கும், ஸ்வரப்ரஸ்தாரங்களுக்கும் அதிக உபயோகமாகின்றன.

श्रीः

ஸ்ரீமத் ராமாயணத்தில் – பிராட்டி வைபவம்

R. TIRUMALACHARIAR, B. A.

ஸ்ரீ ராமாயணத்தின் சீர்மை பிராட்டியின் வைபவமே. வால்மீகி முனிவர்

'काव्यं रामायणं कृत्स्नं सीतायाश्चरितं महत् ॥'

என்று சொல்லுகிறார். 'महत्' என்ற சப்தமானது மஹாவிஷ்ணுவான ராமனுடைய கதையை அபேக்ஷித்து லக்ஷ்மீதேவியான ஸீதாப் பிராட்டியினுடைய கதை ரொம்பவும் மேலானது என்ற தாத்பர்யத்தை வெளிப்படுத்துகிறது. 'இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது'. தேவமாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத்தான் ராவண பவனத்தில் சிறையிருந்த க்ருபாபரவசையான பிராட்டியின் ஏற்றம் சொல்லப் படுகிறது. குற்றமே வடிவான சேதநர்களை எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காக்கி அங்கீகரிப்பிக்கின்ற புருஷகார பூதையான பிராட்டியின் வைபவமும் அப்பிராட்டியால் சேர்விக்கப்பட்ட சேதநர்களை ரக்ஷிக்கும் உபாய பூதனான எம்பெருமானுடைய வைபவமும் ஸ்ரீ ராமாயணத்தில் சொல்லப்படுகிறது. ஸகல கார்யத்திற்கும் உபாயம், புருஷகாரம் இவ்விரண்டும் அந்தரங்க ஸாதனங்கள். உபாயம் என்றால் புருஷன் என்றும் புருஷகாரம் என்றால் சக்தி என்றும் ஏற்படுகிறது. ராமாயணம் என்ற இதிஹாஸத்தில் ஸ்த்ரீ ரூபமான புருஷகார ஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸீதை என்ற மஹா பதிவ்ரதையான ஸ்த்ரீக்கு ப்ராதான்யம் கொடுத்தே ராமாயணகதை முடிவடைகிறது. ஸீதைக்குப் ப்ராதான்யம் கொடுத்து அந்த தேவியின் சரித்திரத்தை வர்ணிப்பதற்கு ராமன் உபாய ஸ்வரூபமானதால் ராமனுடைய சரித்ரமும் அதற்கு அங்கமாகச் சொல்ல வேண்டியிருப்பதால் ராமனுடைய சரித்ரமும் ப்ரதிபாதனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ராமனுடைய சரித்ரத்தைச் சொல்லுவதற்காக ஸ்ரீ ராமாயணம் ஏற்பட்டதல்ல என்று தெரிகிறது. தவிரவும் ஸ்ரீ ராமனும் குசலவர்கள் மூலமாக ராமாயணகதையை ச்ரவணம்செய்தார் என்று சொல்லப் படுகிறது.

ममापि तद्भूतिकरं प्रवक्ष्यते महानुभावं चरितं निबोधत ॥ [பா-4-35]

ஸ்ரீ ராமன் இக்கதையைக் கேட்டதனாலேயே அவருடைய சரித்ரம் ப்ரதானமில்லை என்பதும் ஸீதையின் சரித்ரம்தான் முக்யமானதென்றும் வெளியாகிறது.

துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்ய அவதாரம் ஏற்பட்டதால் சேதநர்களை ரக்ஷிக்க புருஷகாரம் வேண்டும். திருவஷ்டாக்ஷரத்தில் முதல் பதமான 'अ'காரத்துக்குப் பொருள் கூறுங்கால் 'ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே இதிலே ஸ்ரீ ஸம்பந்தமும் அநுஸந்தேயம்' என்று ஆசாரியன் அருளிச்செய்தார்.

लक्ष्मीः पुरुषकारत्वे निर्दिष्टा परमर्षिभिः ।
अहं मत्प्राप्त्युपायो वै साक्षाल्लक्ष्मीपतिः स्वयम् ॥

ஆகையால் லக்ஷ்மீபதியின் ரக்ஷகத்வம் லக்ஷ்மியின் புருஷகாரத்தாலேதான் ஏற்படுகிறது.

श्रीः என்று லக்ஷ்மிக்குத் திருநாமம். श्रीरिति प्रथमं नाम लक्ष्म्याः என்று ப்ரமாணவசனம். ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் ஸ்ரீ சப்தத்துக்கு ஆறுவிதமான அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

1. श्रीयते – மோக்ஷத்தை விரும்பும் எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுகிறாள். எம்பெருமானுடைய கட்டளையை மீறி நடந்து அதனால் குற்றவாளிகளான சேதநர்கள் எம்பெருமானை அணுகுவதற்குப் பயந்து அநுக்ரஹமே ஸ்வபாவமாயிருக்கும் லக்ஷ்மியைச் சரணமாக அடைகிறபடியால் அவளுக்கு श्रीः என்று பெயர்.

2. श्रयते – எம்பெருமானை ஆச்ரயித்திருக்கிறாள். அப்படித் தன்னை ஆச்ரயிக்கும் தீனர்களான சேதநர்களைப் பார்த்து நெஞ்சுருகி 'இவர்களைத் தண்டிக்காமல் ரக்ஷிக்கவேண்டும்' என்று எம்பெருமானை அணுகிப் ப்ரார்த்திக்கிறபடியால் அவளுக்கு ஸ்ரீ என்று திருநாமம்.

3. शृणोति – சேதனர்களின் அபயக்குரலைச் செவிசாய்த்துக் கேட்கிறவள்.

4. श्रावयति - அவர்கள் ப்ரார்த்தனையை பகவான் கேட்கும்படி செய்பவள். ஸர்வேச்வரன் 'சரணமடைந்தவர்களை ரக்ஷிப்பேன்' என்று சொன்னதை அவன் பக்கலிலே கேட்கிறவள்; ஸமயம் வந்தபோது அந்த வார்த்தையைச் சொல்லி எம்பெருமானைக் கேட்பிப்பவள். உலகத்தாருக்கு எது ஹிதம் என்று எம்பெருமான் பக்கலிலே கேட்பவள். அதை ராவணன் போன்ற விபரீதரையும் கேட்பிக்கிறவள் 'ஏ ராவணா! நீ மரணமடையாமல் இலங்கையில் வாழ விரும்பினால் புருஷோத்தமனான ஸ்ரீராமனை நண்பனாகப் பண்ணிக்கொள்வது தகுந்தது' என்று ஸீதாப்பிராட்டி ராவணனைக் குறித்துச் சொன்னாள்.

विदितस्सहि धर्मज्ञः शरणागतवत्सलः । [ஸு 21-20]
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि ॥ [ஸு 21-21]

5. **शृणाति** – ப்ரபத்தி செய்யவொட்டாமல் செய்யும் உபாய விரோதியையும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை அடையவொட்டாமல் தடுக்கிற ப்ராப்ய விரோதியையும், நாசமடையச் செய்பவள்.

6. **श्रीणाति** – தன்னுடைய வாத்ஸல்யம், கருணை முதலிய குணங்களை ஆச்ரிதர்களுக்கு நித்ய கைங்கரியமான குணபரிபாகத்தை யுண்டாக்குமவள்.

எம்பெருமானுக்கு உபாயத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுண்டானாற்போலே இவளுக்கும் புருஷகாரத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகள், உண்டு. புருஷகாரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் வேண்டும். எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்யவேண்டுமோ அவரிடத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்கவேண்டும். யாரிடத்தில் புருஷகாரம் செய்ய வேண்டுமோ அவரிடத்தில் தன் வாக்கு வெற்றி பெற்றே தீரும்படியான வாக் சாதுர்யம் இருக்கவேண்டும். இவ்விரண்டும் பிராட்டியிடத்தில் புஷ்கலம் என்று 'இவள் தாயாய் இவர்கள் க்லேசம் பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்நியாய் இனிய விஷயமாயிருக்கையாலே கண்ணழிவற்ற புருஷகாரம்', ஆசாரியன் சொல்லுகிறார்.

இப்புருஷகாரம் ஸம்ச்லேஷ, விச்லேஷ தசைகளில் விளங்குகிறது. ஸ்ரீ ராகவனோடு பிராட்டி ஸம்ச்லேஷ தசையிலிருந்த காலம் காகாஸுரன் தேவியிடத்தில் அபராதம் செய்தான். அவன் தண்டிக்கப்பட வேண்டியவனாக யிருந்தாலும் போக்கற்று தாமிருந்த இடத்திலே வந்து விழுந்தமாத்ரமே சரணாகதியாகக்கொண்டு ஸ்ரீ ராமன் தன் பரமகருணையாலும் பிராட்டியின் ஸம்ச்லேஷ பலத்தாலும் அவனைக் காப்பாற்றினார். 'இவள் ஸன்னதியாலே காகம் தலை பெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்' என்று ஆசார்யன் சொல்லுகிறார். பிராட்டி ராமனைவிட்டுப் பிரிந்திருந்த காலத்தில் ராவணவதம் ஏற்பட்டது.

ஸம்ச்லேஷ தசையில் ஈச்வரனிடத்தில் சேதநனுடைய குற்றங்களைப் போக்கி ரக்ஷிக்க வேண்டுமென்று உபதேசம் செய்வாள். அவள் உபதேசத்தைக் கேளாமல் ஈச்வரன் உபேக்ஷித்தால் பிராட்டி தன் அழகாலே அவனை வழிப் படுத்துவாள். பிராட்டி தன் கண்ணைப் புரட்டிக்கச்சை நெகிழ்த்தித் தன் அழகாலே ஈச்வரனை மயக்கிப் பித்தனாக்கித் தான் சொன்னபடி செய்தன்றி நிற்க மாட்டாதபடி பண்ணி அங்கீகரிக்கச் செய்வாள். இதேபோல் சேதநனை 'உனக்கு எங்கும் கால்ஊன்ற இடமில்லை. ஈச்வரன் ஸ்வதந்த்ரனாகையால் உன் குற்றங்களை ஒன்றுவிடாமற் கணக்கிட்டு குற்றங்களுக்குத் தக்கபடி தண்டிப்பான். நீ இந்த அநர்த்தத்தைத் தப்பவேண்டில் அவனைச் சரணமடைவாய்'

என்று உபதேசம் செய்வாள். உபதேசத்தால் சேதனன் திருந்தாவிட்டால் அவள் தன் க்ருபையாலே அவனைத் தீமனங்கெடுத்து வழிபடுத்த முயற்சிப்பாள்.

புருஷகாரமாம்போது க்ருபையும் பாரதந்த்ர்யமும் அநந்யார்ஹத்வமும் வேண்டும். க்ருபையாவது – பிறர்படும் துக்கத்தைப் பொறுக்கமாட்டாமை. சேதநர் ஸம்ஸாரத்திற் படுகிற துக்கத்தைக் கண்டு ஸகியாமல் எம்பெருமானோடு இவர்களைச் சேர்ப்பதற்கு உறுப்பான முயற்சி பண்ணுவதற்கு கிருபை வேணும். பரமபுருஷன் ஸ்வதந்த்ரன். அவனை அநுவர்த்தித்து வசப்படுத்த பாரதந்த்ர்யம்–அதாவது அவனிடம் உரிமைப்படுகை பாத்யத்துடன் அவனிடம் செல்வது அநந்யார்ஹசேஷத்வமாவது – அவனுக்கன்றி மற்றொருவனுக்கு உரிமைப்படா தொழிகை; பிராட்டி எம்பெருமானிடம் சென்று ' இந்த சேதநனை நீர் அங்கீகரிக்கவேணும்" என்றால் அவன் ' இவள் நம்மைத்தவிர வேறொரு விஷயத்தையும் நினையாதவளாய் நமக்கே சேஷப்பட்டவளாய் நமக்கே அதிசயத்தை விளைவிக்குமவளாகையாலே நம்முடைய கார்யத்தையன்றோ இவள் சொல்லுகிறாள் ' என்று அவன் நினைத்து அவள் விருப்பத்தையே பூர்த்தி செய்வதற்கு உறுப்பாக அநந்யார்ஹத்வமும் வேண்டும்.

புருஷகாரபூதையான ஸீதாப்பிராட்டியின் க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் ஆக மூன்று குணங்களும் ஸ்ரீமத் ராமாயணத்தில் மூன்று இடங்களில் ப்ரகாசப்படுத்தப்பட்டிருக்கிறது.

'பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய கிருபையை வெளியிடுகைக்காக, நடுவிற் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக, அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக. ராவணன் அபகரித்தான் என்ற வியாஜத்தாலே முதலில் பெருமானை விட்டுப்பிரிந்து வனவாஸமாக இலங்கையிலிருந்த காலத்தில் பிராட்டியின் கிருபையானது வெளியாகிறது. ராவணனால் சிறையிடப்பட்ட தேவமாதர்களை விடுவிக்கத்தானே அவர்களைப்போல ராவண பவனத்தில் பிராட்டி சிறைபுகுந்து தன் ப்ரஜைகளான தேவமாதர்களின் கஷ்டத்தைப் போக்கத் தன் பர்த்தாவான ஸ்ரீ ராமனால் ராவணவதத்திற்காக தன் பரமகிருபையாலே தானே சிறைவாஸ கஷ்டத்தை அனுபவித்தாள். சிறையிலகப்பட்ட தேவியை ராக்ஷஸிகள் பலவிதத்திலும் உபத்ரவம் செய்தார்கள். அக்கூட்டத்தில் விபீஷணாழ்வானின் புத்ரியான திரிஜடை என்பவள் தான்கண்ட ஸ்வப்பனத்தையும் அதன் பயனாக ராவணனுக்கு நேரப்போகும் அபஜயத்தையும் ராமனுடைய கோஷ்டிக்கு மேலான ஜயத்தையும் ஸீதாதேவிக்கு ஸௌபாக்யாதிசயத்தையும் சொல்லி அந்த ராக்ஷஸிகளைக் கண்டித்தாள். அதைக் கேட்ட ராக்ஷஸிகள் பயந்துவிட்டார்கள். தேவி அவர்களை நோக்கி 'நானிருக்க நீங்கள் அஞ்சவேண்டாம்' என்று தைரியம் சொன்னாள். இதனால் பிராட்டியின்

கிருபை விளங்குகிறது. பின்பு ராவணவதமானதும் ஆஞ்சனேயஸ்வாமியானவர் அந்த சுபசெய்தியைப் பிராட்டியிடம் சென்று சொல்லி 'தாயே! உம்மை இம்ஸித்த ராக்ஷஸ ஸ்த்ரீகளை வதைசெய்யும்படி உத்தரவு கொடுக்கவேண்டும்' என்றார். அதற்கு தேவி—

पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम ।
कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति ॥

என்றாள். 'ஆஞ்சனேயரே, யார்தான் லோகத்தில் தோஷமில்லாதவர்கள்? உத்தமபுருஷனால் தோஷம் குணம் என்பதை எதிர்பார்க்காமல் எல்லா ஜனங்களையும் கருணையுடன் ரக்ஷிக்கவேண்டும். இதுதான் பரமதர்மமாகும். இந்த ராக்ஷஸ ஸ்த்ரீகள் என்னை எவ்விதம் ஹிம்ஸித்தாலும் அதற்கு மன்னிப்பும் கேட்டுக்கொள்ளாவிட்டாலும் அவர்களை ரக்ஷிப்பதே என் ஸ்வபாவம். சரணாகதி செய்துவிட்டால் நாம் என்ன ரக்ஷிப்பது? அந்த சரணாகதி என்ற புண்ய விசேஷமே அவர்களை ரக்ஷிக்கிறது. நாம் ரக்ஷித்தோம் என்று எப்படிச் சொல்ல முடியும்' என்று திருவடிக்குச் சொன்னாள்.

'मातर्मैथिलि राक्षसीस्त्वयि तदैवार्द्रापराधास्त्वया
रक्षन्त्या पवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठी कृता ।
काकं तं च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सा नस्सान्द्रमहागसः सुखयतु क्षान्तिस्तवाकस्मिकी' ॥

என்று பரமாச்சாரியன் பட்டர் சொல்கிறார். ஸ்ரீ ராமன் காகாஸுரன், விபீஷணன் முதலானவர்கள் சரணாகதி செய்தபிறகுதான் அவர்களுக்கு அபய ப்ரதானம் செய்தார். ராமனுடைய கருணையைக்காட்டிலும் ஸீதையின் கருணை மேலானது என்று மேல் சொல்லிய ச்லோகத்தால் விளங்குகிறது.

ராவணவதத்திற்குப்பின் ராமன் பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளி பட்டாபிஷேகம் செய்துகொண்டு பிராட்டியோடு கூடிக் களித்திருக்கையில் பிராட்டிக்கு ராமனிடமிருந்து இரண்டாவது பிரிவு ஏற்படுகிறது. அதாவது லோகாபவாதபரிஹாரத்துக்காக பெருமாள் அவளைக் காட்டுக்குப்போகவிட இளையபெருமாள் பிராட்டியை பெருமாள் நியமனப்படி தேரிலேற்றிக்கொண்டு போய் கங்கைக்கரை ஏறினபின் பிராட்டியை விட்டுவர மனந்தாளாமல் கதறினார். பிராட்டி லக்ஷ்மணனிடம் 'நான் இவ்வுலகில் துக்கப்படவே பிறந்தேன். முன் ஜன்மத்தில் பர்த்தாவை விட்டு எந்த பார்யையைபோ நான் பிரித்தபாபம் தான் எனக்கு இக்கதி வந்திருக்கவேண்டும். இங்கு ஆச்ரமங்களில் வஸிக்கும் ரிஷிகளுக்கு நான் தனிமையில் வந்ததற்கு என்ன பதில் சொல்வேன். அவர்கள் என் பேரில் சந்தேகப்படுவார்கள். இப்போது எனக்கு உயிர்வாழ ஆசையில்லை. இக்

கங்கையில் விழுந்து உயிரை ஒழித்துவிடலாம். அப்படிச் செய்தால் அது மஹா குலத்தில் பிறந்த ஸ்ரீராமனுக்கு ஒரு பெரும் பழியாகும். இக்ஷ்வாகு வம்சம், கர்ப்பிணியான நான் உயிரை விட்டால் பாழ்த்துப் போய்விடும். அதனுல் லோகாபவாதம் ஏற்படும். பெருமாளும் ஸ்த்ரீஹத்தி செய்தார் என்று அவருக்கு இழிவு உண்டாகும்' என்ருள். இதனுலே தேவியின் பாரதந்த்ர்யம் நன்ருய் விளங்குகிறது. பிருட்டிக்கு பெருமாளை விட்டு பிரிவில்லே. அவனேத்தவிர யாதொன்றும் வேண்டாள், நினையாள். திருவடி லங்காப்ரவேசம் செய்து பிராட்டியை அசோகவனத்தில் பார்த்த மாத்ரமே:—

'अस्या देव्या मनस्तस्मिन् तस्य चास्यां प्रतिष्ठितम् । [ஸு 15–52]

दुष्करं कृतवान् रामो हीनो यदनया प्रभुः ॥ [ஸு 15–53]

பிராட்டியை விட்டுப்பிரிந்து ராமன் எப்படி உயிர் தரித்திருப்பான்' என்கிருர். பிராட்டியும் ராமனேப்பற்றி ராவணனிடம்

'शक्या लोभयितुं नाहमैश्वर्येण धनेन वा ।

अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा ॥'

'ராவணு ராமனேவிட்டு என்னே ஒருகாலும் பிரிக்கமுடியாது. ப்ரபையையும் ப்ரபாவானேயும் எப்படிப் பிரிக்கமுடியாதோ அதேபோல் என்னேயும் என் பர்த்தாவை விட்டுப் பிரிக்கமுடியாது' என்று சொல்லுகிருள். ஸ்ரீராமனேச் சரணமடைந்தால்தான் உனக்கு க்ஷேமம் என்கிருள் ராவணனிடம். ராமனே விட்டுப்பிரிந்திருக்கும் தன்னிலேயை நினேத்து துக்கப்படுகிருள்.

न हि मे जीवितेनार्थो नैवार्थैः न च भूषणैः । [ஸு 26–5]

தன்னேயே மாய்த்துக்கொள்ளவும் துணிகிருள்.

सा जीवितं क्षिप्रमहं त्यजेयं विषेण शस्त्रेण शितेन वापि । [ஸு 28–1]

असन्देशात्तु रामस्य तपसश्चानुपालनात् । [ஸு 22–20]

यद्यस्ति पतिशुश्रूषा शीतो भव हनूमतः [ஸு 53–29]

ராவணனே பஸ்மமாக்க சக்தியிருந்தும், திருவடியில் வாலேப்பற்றின அக்னியை நீராக்க சக்தியிருந்தும், பிராட்டி 'நாயகரான ஸ்ரீராமன் ரக்ஷிக்கவேணுமேயன்றி நாம் நம்மை ரக்ஷித்துக்கொள்ளுகை பாரதந்த்ர்யத்துக்குக் கெடுதியை விளேவிக்குமென்று தன் சக்தியைக்கொண்டு காரியங்கொள்ளாதொழிந்தாள்'

பிராட்டி வால்மீகி ஆச்ரமத்தில் வசித்து குசலவர்கள் பெரியவர்களாகி அயோத்திக்கு வந்து ஸ்ரீராமனுல் அங்கீகரிக்கப்பட்டதும் வால்மீகி முனிவர் பெருமாள் முன்பு தேவியை அழைத்துவந்து அங்கீகரிக்கும்படி ப்ரார்த்திக்கிருர்.

ஸ்ரீராமன் அவளைப் பரிசுத்தையாக அங்கீகரிக்க நிபந்தனை கூறியதும் பிராட்டி கையுபஞ்சலியுமாய்க் கவிழ்தலையிட்டுக்கொண்டு நின்று

'यथाहं राघवादन्यं मनसापि न चिन्तये'

'मनसा कर्मणा वाचा यथा रामं समर्चये'

'यथैतत् सत्यमुक्तं मे वेद्मि रामात् परं न च'

तथा मे माधवी देवी विवरं दातुमर्हति ॥

'அடியேன் பெருமாளையன்றி மற்றெவரையும் மனத்தினாலுஞ்சிந்தியாதவளாயின் இப்பூமிப் பிராட்டி எனக்கு இடங்கொடுக்கக்கடவள்' என்று சொல்லி சபதம் பண்ண, அப்போது பூமியிலிருந்து ஓர் திவ்ய ஸிம்ஹாஸநம் தோன்றி அதிலே ஸ்ரீ பூமிப்பிராட்டி இவளை இரண்டு கையாலுமெடுத்துக்கொண்டுபோய் வைக்க, அவ்வாஸநத்தில் வீற்றிருந்தவாறே பிராட்டி பூதலத்தினுள் பிரவேசிக்க அதுகண்டு தேவர்கள் தேவியின்மீது பூமாரி பொழிந்து புகழ்ந்தனர் என்று உத்தர ராமாயணத்தில் சொல்லுகையாலே இப்பிரிவில் அநந்யார்ஹத்வம் பிரகாசமாயிற்று.

"முப்பது சகோதரிகள்"

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்,
வித்வான், ஸரஸ்வதி மஹால், தஞ்சை.

கிருஷ்ணயஜுர்வேதம், தைத்திரீயஸம்ஹிதை, நாலாவது காண்டம், மூன்றாவது பிரச்னம், 11வது அனுவாகத்தில் :—

त्रिँशत्स्वसार उपयन्ति निष्कृतँ समानं केतुं प्रतिमुञ्चमानाः ।
ऋतूँस्तन्वते कवयः प्रजानती मध्येछन्दसः परियन्ति भास्वतीः ॥

என்னும் சொற்றொடர் காணப்படுகின்றது. "முப்பது சகோதரிகள், நித்தமும் பண்ணப்படுகின்ற சடங்குகளை வந்தடைகின்றனர். அவர்கள் அனைவரும் ஒரே விதமான அடையாளத்தை (ஒளிமயமான சட்டையை) அணிந்தவர்கள். சிறந்த அறிவு படைத்தவர்கள். தினந்தோறும் அவசியமான பொருள்களை அறிந்து "ருது"க்களை (பருவகாலங்களை) உண்டுபண்ணுகிறார்கள். வேதங்களின் மத்தியிலேயே இருப்பவனாகிய சூரியனுடைய பக்கங்களில் பளபளப்பான ஒளியுடையவர்களாகச் செல்கின்றனர்" என்பது இதன் கருத்து.

யஜுர்வேதத்தில் நாலாவது காண்டம் "அக்னி காண்டம்" எனப்படும். [1] அக்னிசயனம் (अग्निचयनं) பண்ணுவதற்காக ஓதவேண்டிய மந்திரங்கள் இதில் அடங்கியுள்ளன. "வ்யுஷ்டி" என்னும் பெயரால் வழங்கப்படும் [2] இஷ்டகைகளை [3] உபதானம் பண்ணுவதற்கான மந்திரங்கள் பதினாறு. அவற்றுள் பதினைந்து மந்திரங்கள் வரிசையாக இங்கு ஓதப்படுகின்றன. அவைகளில் ஆறாவது மந்திரம் இது.

"வ்யுஷ்டி" என்னும் சொல், இருளை விரட்டியடிக்கும் "சிறந்த ஒளி" எனப் பொருள்படும். "சிறந்த ஒளி" என்னும்போது ஈண்டு, ஊழியில் முதன் முதலாகப் பொழுது விடிவதற்கு முன்பு தோன்றின 'உஷஸ்' (பின்மாலை வேளை) தான் குறிப்பிடப்படுகின்றது. இம்மந்திரங்களின் உரைப்பகுதி (ப்ராம்மணம்) வருமாறு :—

---

1. ஹோமம் பண்ணுவதற்கான குண்டத்தை முறைப்படி அமைத்தல்.
2. அவ்வாறு செய்வதற்கேற்ற சிறு மண்கட்டிகள்.
3. இஷ்டகைகளைப் பொருத்தமாக வைத்தல்.

"न वा इदं दिवा न नक्त मासी दव्यावृत्तं ते देवा एता व्युष्टी रपश्य न्ता उपादधत ततो वा इदं व्यौच्छ द्यस्यैता उपधीयन्ते व्येवास्मा उच्छ त्यथो तम एवा पहते" *(தைத்-ஸம்-5.3-4)*

*"இந்தக் காலமானது, பகல்–இரவு எனப் பிரித்தறிந்துகொள்ள முடியாத வாறு இருந்தது. பகலுமில்லை இரவுமில்லை என்றபடி. அப்பொழுது அந்தத்தேவர்கள் "வ்யுஷ்டி" எனப்படும் இந்த *இஷ்டகைகளைக் கண்டனர். அவைகளை (இம்மந்திரங்களைச் சொல்லி) உபதானம் பண்ணினார்கள். அதன் பிறகுதான் இந்தக் காலமானது இரவு-பகல் எனப் பிரிந்தது, "உஷஸ்" எனப்படும் பின்மாலை வேளையினால். இவ்வாறு இம்மந்திரங்களைச் சொல்லி இவ்விஷ்டகைகளை உபதானம் செய்வதனால் பரலோகம் – அபரலோகம் இவை தனித்தனியாகப் பிரிந்து பிரகாசிப்பதுடன் இருளும் அகலும்" என்பது இதன் பொருள்.*

வேதத்தில் "உஷஸ்" சுவைமிக்க வருணனைகளால் போற்றப்படுகிறாள். அழகிய கன்னிப்பெண்ணாகவும், கணவன் வீட்டுக்குச் செல்லும் மணப்பெண்ணாகவும், சூரியனுடைய சகோதரியாகவும், மற்றும் பலவாறாகவும் பெண் தெய்வமான இவள் கொண்டாடப்படுகின்றாள். உஷஸ் என்னும் பின்மாலைவேளை தோன்றாமல் காலம் முழுதும் ஒரே தண்டாகாரமாய் இருந்த நிலைமை இக்காலத்துப் பிரஜைகளாகிய நமக்குத் தெரியாது. ஆனால் அவ்வாறு 'பொழுது விடியாமலே' காலத்தின் அளவுகோலாகிய இரவு – பகல் – மாதம் – வருஷம் முதலியன இல்லாமலே இருந்த காலம் ஒன்றுண்டு. அந்நிலைமையில் அகப்பட்டுத் தவித்தவர்களுக்கு, திடீரென ஒருநாள் பொழுது விடிந்தால், அதன் அருமை வாயினால் சொல்லியளவிடக் கூடியதாக இருக்குமோ? முடிவில்லாத நீண்ட இருளை விரட்டிக்கொண்டு உஷஸ் தேவதை ஆகாயத்தில் பறந்துவருவதையும், தொடர்ந்து பிரகாசமான பகல் வருவதையும் பிரத்யக்ஷமாகக் கண்டவுடன், கட்டுக்கடங்காமல் மனதில் கிளர்ந்தெழும் கற்பனைகள் எண்ணற்றவையாக விரிந்தன. அவைகளையே "உஷஸ்" விஷயமான வேதமந்திரங்களில் நாம் கண்டு அனுபவிக்கிறோம்.

இங்கு "முப்பது சகோதரிக"ளாகப் போற்றப்படுகின்றவள், ஊழி முதலில் தோன்றிய உஷஸ் தேவதையே. அவள் ஒருவளே, தன்னை முப்பது பெயர்களாகப் பண்ணிக்கொண்டு விளங்குகிறாள். ஒரே உஷஸ் தேவதை முப்பது பெயர்களானதெவ்வாறு? என்னும் கேள்வி எழுகின்றதல்லவா? இம் மந்திரத்தின் முன்புள்ள ஐந்து மந்திரங்கள் இதற்கு விடையளிக்கின்றன. அவற்றின் கருத்தை மட்டும் சுருக்கமாகத் தருகிறோம்:—

**வ்யுஷ்டி–என்பது உஷஸ்ஸுக்குப் பெயர். அதன் மந்திரங்களைச் சொல்லி உபதானம் பண்ணப்படும் இஷ்டகைகளுக்கும் அதுவே பெயராயிற்று.*

1. (ஊழி முதலில் ஒருநாள்) முதன்முதலாகக் கீழ் வானம் வெளுத்த தல்லவா? அவளேதான் இந்த இஷ்டகை. அந்த ஆதி உஷஸ் தேவதை, சூரியனைத் தன்னுள் வைத்துக்கொண்டு இந்தப் பூமியில் சஞ்சரிக்கிருள், புதிதாக மணம் புரிந்த மணமகன் வீட்டுக்குப் பல குழந்தைகளைப் பெறுவதற்காகச் செல்லும் புது மாட்டுப் பெண்போல் (இவளும் அடுத்து வரும் பல உஷஸ்ஸுக் களைத் தோற்றுவிப்பாள் என்றவாறு). பெருமையுள்ள மூவர் (அக்னி-சந்திரன்-ஸூர்யன்), இவளைச் சூழ்ந்திருக்கின்றனர்.

2. இரண்டு உஷஸ்ஸுக்கள். ஒன்று ஊழி முதலில் தோன்றிப் பிரளய காலத்திய நெடிய இருளைப் போக்கியது. மற்றொன்று அன்றாடம் இரவின் இருளைப்போக்குகின்றது......

3. மூன்று உஷஸ்ஸுக்கள், யாகத்தின் வழியைக் காக்கின்றனர். ஒருத்தி (யஜமானனுடைய) மக்களைக் காப்பவள். அவனுடைய வலிமையைக் காப்பவள் மற்றவள். அவனுடைய விரதத்தை (சடங்குகளைக்) காப்பவள் மூன்றாமவள்.

4. நான்கு உஷஸ்ஸுக்கள். (மூவருடைய உபயோகம் முன் மந்திரத்தில் சொல்லியாயிற்று) நான்காமவள், நான்கு ஸ்தோத்திரங்களையுடைய அக்னிஷ் டோமயாகமாகிவிட்டாள். யாகத்தின் முன்-பின் சடங்குகள் யாவற்றையும், அவற்றைப் பண்ணுவதற்கான ருத்விக்குகளையும், காயத்ரீ முதலிய நான்கு சந்தங்களையும், இந்த யாகத்தையும், இதன் பயனுகிய ஸ்வர்கத்தையும் இவள் தோற்றுவித்துக் காப்பாற்றுகிருள்.

5. ஐந்து உஷஸ்ஸுக்கள். இந்த உலகம் முழுவதையும், இறைவன் ஐந்து உஷஸ்ஸுக்களில் படைத்தான். **முக்கியமான இந்த ஐந்து உஷஸ்ஸுக் களுக்கும் தனித்தனியாக ஐயைந்து சகோதரிகளையும் (அவன்) உண்டு பண்ணினுன்.** முதன்மையான ஐந்து உஷஸ்ஸுக்களும் மூத்த சகோதரிகள். உலகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களல்லவா? அவ்வைவரும் தத்தமது இளைய சகோதரிகளான ஐயைந்து உஷஸ்ஸுக்களுடன் கூடி **முப்பது சகோதரிகளாகின்றனர்.** இவ்வாறு முப்பது உஷஸ் சகோதரிகள் ஒருதரம் வருவதனுலேயே ஒரு **மாதம்** உருவாகின்றது. இந்த முப்பது சகோதரிகளும் பலவிதமான மனிதனுடைய நன்முயற்சிகளுக்கும் ஆக்கமளித்து வருகின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத ருதுக்களை (பருவ காலங்களை)த் தோற்றுவிக் கின்றனர். ஒரேவிதமான (செந்நிறமான) ஒளியை உடுத்திருப்பர் (சட்டை போல் அணிந்திருப்பர்). வேதமயமான சூரியனுடைய அண்மையிலேயே அவனை நாற்புறமும் சூழ்ந்துகொண்டு பளபளப்பாகச் சென்றுகொண்டிருப்பர். இந்த முப்பதின்மருள் முதன்மையான ஐவர், பல வடிவங்களை எடுத்துக்கொண்டு

ஐந்து காரியங்களை நடத்துகின்றனர் :— (1) தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நடைபெறுகின்ற அக்நிஹோத்திரம். (2–3) அமாவாசையிலும் பௌர்ணமியிலும் நடைபெறும் யாகங்கள். (4) ஔபவஸத்ய (ஸோமயாகத்தின் நான்காம் நாள்) தினத்தில் நடைபெறும் சடங்குகள். (5) பிரதான யாக தினத்தின் (ஸோமயாகத்தின் ஐந்தாம் நாள்) சடங்குகள்.

(1) இருள், (2) நிலவு, (3) காலை, (4) மாலை, (5) பகல்வேளை எனப்படும் "பஞ்சதோஹங்"களும் ;

வஸந்தகாலத்தில் * "புஷ்பவதீ" என்றும், க்ரீஷ்மகாலத்தில் † "தாபவதீ" என்றும், வருஷாகாலத்தில் ¶ 'வ்ருஷ்டிமதீ' என்றும், சரத்காலத்தில் ‡ "ஜலப்ரஸாதவதீ" என்றும், ஹேமந்தசிசிரகாலங்களில் § "சைத்யவதீ" என்றும் பெயர் பெற்றுள்ள இந்தப் பூமியும்;

(1) வஸந்தம், (2) க்ரீஷ்மம், (3) வர்ஷா, (4) சரத், (5) ஹேமந்த சிசிரங்கள் எனப்படும் ஐந்து பருவகாலங்களும்;

(1) கிழக்கு, (2) தெற்கு, (3) மேற்கு, (4) வடக்கு, (5) மேல் என வழங்கப்படும் ஐந்து திசைகளும்;

ஸோமயாகம் முதலியவற்றில் ஐந்துவிதமாகப் பண்ணப்படும் தோத்திரங்களும், இவையெல்லாம் முதன்மையான ஐந்து உஷஸ்ஸுக்களைத் தொடர்ந்தே தோன்றின.

(இவ்வைந்து உஷஸ்ஸுக்களில், ஊழிமுதலில் தோன்றிய உஷஸ் சூரியனுடைய கர்ப்பம்போன்றவள். (ஆதலால் அவனுடனே இருப்பாள்) மற்றொருவள் ஜலத்தின் மகிமையை வகிப்பவள். (பூமியிலுள் நீரை இழுத்து மேகங்களின் கர்ப்பத்தில் வைப்பவள்). மற்றொருவள் சூரியனுடையதான பண்பட்ட இடங்களில் சஞ்சரிப்பாள். ஒளிவீசும் அக்நியின் பக்கலில் பிரகாசத்தைச் செய்பவள் இன்னுமொருத்தி. ஐந்தாவது உஷஸ்ஸைத் தினந்தோறும் இருளை அகற்றி வெளிச்சத்தைக் கொடுக்குமாறு சூரியன் நியமிக்கிறான்.)

முதன்முதலில் தோன்றிய இந்த உஷஸ் ருதுக்களின் (பருவகாலங்களின்) பத்தினி (காப்பாற்றுபவள்). பகல்வேளைகளை உருவாக்குகிறவள் மக்களை உண்டுபண்ணுகிறவள். ஏ உஷஸ் தேவியே! நீ உண்மையில் ஒருத்தியேதான். ஆயினும் (தினந்தோறும்) பல வடிவங்களுடன் தோன்றி இருளை அகற்றுகிறாய். உனக்கு நரை–திரை–மூப்பு இதெல்லாம் இல்லை. ஆனால் மற்ற பொருள்கள் யாவற்றையும் நீ ஜீர்ணமாக்கிவிடுகின்றாய். (நரை – திரை – மூப்பு இவற்றை அடையுமாறு செய்துவிடுகின்றாய்.) இதெல்லாம் தொடர்ந்துவரும் மந்திரங்களின் கருத்து. ருக்வேதம் 1-123 ; 8வது மந்திரம் :—

---

* மலர்களையுடையது. † வெப்பமுள்ளது. ¶ மழையுள்ளது.
‡ தெளிந்த நீருள்ளது. § குளிருள்ளது.

"இன்றும், நாளையும் ஒரேவிதமாக (இந்த உஷஸ்–சகோதரிகள்) வருணனுடைய (தன் ஒளியினுல் உலகமுழுதும் சூழ்ந்துகொள்ளும் சூரியனுடைய), நீண்ட வழியை வந்தடைகின்றனர். (இவர்கள்) குற்றமற்றவர்கள். சூரியனுக்கு முன்பு முப்பது [1] யோஜனம் தூரத்தில் செல்வர். (இவர்களில்) ஒவ்வொருவரும் (அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய) அறிவையும் முயற்சியையும் வளர்க்கின்றனர்" என்று கூறுகின்றது.

நக்ஷத்திரங்கள் புலப்படாமலும் சூரியனும் உதயமாகாமலும் இருக்கும் சமயத்திற்கே "உஷஸ்" என்று பெயர். 21-லிருந்து 26 விநாடிவரை இவ்வாறு இருக்கும். சூரியன் உதயமாவதற்கு முன்பு இவள் தோன்றுவாள், முப்பது யோஜனங்களுக்கப்பால். அதாவது சூரியன் உதயமாகிற சந்தர்ப்பத்தில் மேற்கே முப்பது யோஜனம் தூரம்வரை உள்ளவர்களுக்குத்தான் சூரியன் தெரியும். அதற்குமேல் உஷஸ் தான். சூரியோதயம் ஒவ்வொரிடமாக நகர்ந்து கொண்டே செல்வதற்கேற்ப உஷஸ்ஸும் நகர்ந்துகொண்டேயிருக்கும். ஆனுல் பூமியின் எந்தப்பகுதியில் இருந்தாலும் உஷஸ் ஒரேவகைதான். ஒரேநாளில் ஒரேவிதமாகப் பூமியின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றும் இந்த உஷஸ், நாளைக்கும் இப்படியே தோன்றுவாள். இவர்கள் குற்றமற்றவர்கள். எல்லோருடையவும் அறிவையும் முயற்சியையும் வளர்ப்பவர்கள் என்கிறது வேதம் உறக்கத்திலிருந்து எழுந்ததும் எல்லோருக்கும் தெளிந்த மனமும் தூய்மையான சிந்தனைகளும் நன்முயற்சிகளும் காணப்படுகின்றனவல்லவா? அக்காலத்தின் தேவதையாகிய உஷஸ்ஸின் தன்மைதான் அதற்குக் காரணமாம்.

இவ்வாறு சூரியனுக்கு முன்னே திட்டமாக முப்பது யோஜனம் தூரத்தில் இருளைத் துரத்திக்கொண்டு கன்னிப்பெண் வடிவமாக, உஷஸ் ஓய்வில்லாமல் மேற்கு நோக்கிச் சென்றுகொண்டேயிருக்கிறுள். குதிரைகள் தன்பின்னே தேரை இழுத்துவருவதைப்போல் சூரியனை இவர்கள் அழைத்து வருகிறுர்கள். கிழக்கே தோன்றும் சோதி, மேற்கில் உள்ள இருளை அடித்து விரட்டி நல்ல ஒளியையும் அறிவையும் பரப்புகின்றது. இயற்கையான இந்த உண்மையைப்பல உதாகரணங்களால் அறியலாம். ஐந்து உஷஸ்ஸுக்களில் இறைவன் உலகையெல்லாம் படைத்த விஷயம் அப்படியே மேனுட்டாரின் புனிதநூலாகிய பைபிளிலும் தொடக்கத்தில் பேசப்படுகின்றது.

"भगस्य स्वसा वरुणस्य जामिः"

ருக்வேதம் 1–123–5.

---

1. நாலு கைகள் (முழம்) ஒரு தண்டம். இரண்டாயிரம் தண்டம் ஒரு க்ரோசம், நாலு க்ரோசம் ஒரு யோஜனம்.

என்னும் மந்திரம் உஷஸ் தேவதையை, பகனுடைய மூத்த சகோதரி என்றும், வருணனுடைய இளைய சகோதரி என்றும் கூறுகின்றது. "பகன்" என்பது காலைவேளையில் சூரியனுக்குப் பெயர். "வருணன்" என்பது மாலை வேளையில் சூரியனுக்குப் பெயர் காலையில் சூரியன் தோன்றுவதற்கு முன்பே 'உஷஸ்" தோன்றிவிடுவதால் இவள் அவனுக்கு மூத்தவளாகிறாள் மாலையில் அவ்வாறில்லை. சூரியன் மறைந்த பிறகே மேற்றிசையில் அடிவானத்தில் செந்நிறமான தோற்றம் (உஷஸ்) காணப்படுவதால் சூரியனுக்குத் தங்கையாக இவள் வருணிக்கப்படுகின்றாள்.

ताः प्रत्नवन्नव्यसीर्नूनमस्मे रेवदुच्छन्तु सुदिना उषासः । (ऋ 1-124-9)

'புதிய உஷஸ்ஸுக்களும் பழையனபோல் செல்வம் நிறைந்த நன்னாட்களாக விடியவேண்டும்" என்று வேதமந்திரம் ஆசி கூறுகின்றது.

Translation :— "सु" is singular, औ is dual and जस् is plural of the Nominative case. Similarly for the triplet of the other Vibhaktis. By :—

S 231. विभक्तिश्च 1-4-104 (S. K. 184) सुप्तिङौ विभक्तिसंज्ञौ स्तः ।

So we get प्रथमाविभक्तिः – द्वितीयाविभक्तिः etc.

Note :— These names upto सप्तमी were (according to the preceding commentators) in use before Pāṇini's time and were adopted by him.

The meanings of the Terminations.

S 232. द्व्येकयोर्द्विवचनैकवचने 1-4-22 (S. K. 186) द्वित्वैकत्वयोः एते स्तः ।

The dual is employed when two objects are meant, and the singular (एकवचनम्) is employed when one object is meant.

S 233. बहुषु बहुवचनम् 1-4-21 (S. K. 187). When a plurality is meant apply Bahuvacanam.

The above Sūtrās lead to the following result. When two objects are meant, as Rama and Lakṣmaṇa, we form a compound of both names, to which we add औ, nominative dual affix, and get रामलक्ष्मणौ. Suppose we want to compound two similar names of two persons राम and राम. Are we to say रामरामौ? If so, then the औ is redundant, for we get at the idea of duality, by the number of names in the base. To this it is provided:—

S 234. सरूपाणामेकशेष एकविभक्तौ 1-2-64. (S. K. 188) एकविभक्तौ यानि सरूपाण्येव दृष्टानि, तेषां एक एव शिष्यते ।

When words similar to each other are compounded and they are of the same विभक्तिः, only one of such names is retained, thus रामश्च रामश्च = रामौ ।

Special names for Group of Terminations.

In addition to the above names, some other names are given to groups of terminations. They are purely technical and as certain changes are ordained for particular groups, these groups are set out below.

(a) *Sambuddhi.* The first name is Sambuddhi, given to the single termination सु् Nominative singularby :—

s 235. एकवचनं संबुद्धिः 2-3-49. (S. K. 192) संबोधने प्रथमायाः एकवचनं संबुद्धिसंज्ञं स्यात् ।

It is only when calling a person that this सु् gets the name of Sambuddhi.

(b) *Sarvanāmasthānas' Introductory.*

In the table of terminations given above the Nominative plural is जस्, and the Accusative plural is अस् (शस्). It will be noticed when we come to the Declension of Neuter Bases that these two are displaced by शि (=इ). This (शि) = इ is the first Sarvanāmasthāna defined by the Sūtra :—

s 236. शि सर्वनामस्थानम् 1-1-42 (S. K. 313).

Introductory.

The other Sarvanāmasthānas are five in number. The three numbers of the Nominative and the singular and dual of the Accusative but only after a base which is not neuter, (i. e.) after Masculine and feminine bases only by :—

s 237. सुडनपुंसकस्य 1-1-43. (S. K. 229) सुडिति प्रत्याहारः । स्वादिपञ्चवचनानि सर्वनामस्थानसंज्ञानि स्युः अक्लीबस्य ।

Introductory.

When certain terminations other than a Sarvanāmasthāna follow, the base is called a *Pada.*

(c) s 238. स्वादिष्वसर्वनामस्थाने । 1-4-17 (S. K. 230) कप्प्रत्ययावधिषु स्वादिषु असर्वनामस्थानेषु परतः पूर्वं "पद"संज्ञं स्यात् ।

The word 'Pada' is applied to a base when any termination coming between सु (of 4-1-2) and कप् (5-4-151) follows excepting Sarvanāmasthānas.

Note :— Thus all terminations from Accusative plural शस् upto the locative plural सुप् confer the title of 'Pada' on the preceding base.

(d) 'Bha' bases. Again by :

S 239. यचि भम् । 1-4-18 (S. K. 231) यकारादिषु अजादिषु च कप्प्रत्ययावधिषु स्वादिषु असर्वनामस्थानेषु परतः पूर्वं "भ" संज्ञं स्यात् ।

When any termination (enumerated within the limits mentioned in the previous Sūtra) which begins with य or a vowel follows, the preceding base is called 'Bha'.

Note:— For the present purpose, it is enough to note that the terminations beginning with Vowels from शस् to सुप् confer this designation of भ on the base.

Introductory.

Now we get therefore two names, 'Pada' and 'Bha' for the bases that precede the terminations from the Accusative plural upto the locative plural.

The doubt arises if the consequences of both designations follow. This is answered by :

S 240. आकडारादेका संज्ञा । 1-4-1 (S. K. 232) इत ऊर्ध्वं, 'कडाराः कर्मधारये' इत्यतः प्राक् एकस्य एकैव संज्ञा ज्ञेया, या परा अनवकाशा च । तेन शसादावचि 'भ' संज्ञेव । न 'पद' त्वम् ।

Translation :— From this Sūtra, down to the Sūtra 'कडाराः कर्मधारये (2-2-38) there is only one name (i. e.) that name which is subsequent and which is without scope when compared without another name. Therefore the Designation 'भ' observes (in all the terminations beginning with शस्, which begin in a vowel) when a declensional termination beginning with a vowel follows. The net result is that from the Accusative plural downwards the base is called 'Bha' when a termination beginning with a vowel follows, and 'Pada' when one beginning with a consonant follows.

Note:— The peculiarities of each of these bases cannot be mentioned without examples, and to state them here along with examples will be anticipating a good deal. They will be mentioned therefore only when the occasions arise.

Mutations of these Terminations.

These terminations individually and by groups have special peculiarities, when they enter into combination. Some of these peculiarities are of a general character and may be noticed before taking up the declension of particular types. What is special is relegated to the occasion when it arises. Again the terminations set out in the Sūtra 'स्वौजसमौट्' 4-1-2, exist in fact only after basss ending in consonants. After bases ending in vowels, other terminations are substituted in some of the Vibhaktis. The proper course will therefore be to take consonantal bases first, for, after these the terminations are unchanged But as the time-honoured practice is to take vowel bases first, the procedure is followed here.

Even after vowel bases the change of terminations is not uniform in the sense, that a particular vowel or a set of vowels is invariably followed by a particular termination. The chief changes occur after bases ending in short अ; but before referring to them it is necessary to notice an important group of sandhi changes, for, the modification of one termination at least viz., that of the accusative plural depends upon that sandhi change.

Pūrvasavarṇa Dīrgha.

Note:— This expression means that a long vowel similar to the preceding vowel is the substitute. As the Sūtra ordaining such substitution comes under the Adhikāra Sūtra "एकः पूर्वपरयोः" 6-1-84, the lengthened vowel is the single substitute for the prior and subsequent vowel – in other words the prior vowel is lengthened and the subsequent suppressed. The Sūtra on the point is:—

S 211. प्रथमयोः पूर्वसवर्णः । 6-1-102 (S. K. 164) अकः प्रथमाद्वितीययोः अचि परे पूर्वसवर्णदीर्घः एकादेशः स्यात् ।

The word "Prathamā" although strictly speaking is confined to the Nominative case, is here extended to the Accusative because of the use of the dual प्रथमयोः.

The word अकः is got from the previous Sūtra अकस्सवर्णे दीर्घः (6-1-101). The scope of the rule may be exhibited thus:—

Bases ending in अक् (i. e.) अ, इ, उ or ऋ	Followed by a vowel termination of Nom. and Acc. (i e.) The duals औ The Plurals अस् Acc. sing. अम्	Result. The substitute for both in the vowel of the base lengthened.

Note:— As a result of the action of the Sūtras to be subsequently mentioned, the scope of the rule set out above is considerably restricted.

The following are exceptions (to the above) which restrict the above :—

Exception (1)

S 242. नादिचि । 6-1-104 (S. K. 165) अवर्णा दिचि परे न पूर्वसवर्णदीर्घादेशः ।

The Pratyāhāra इच् excludes only अ. So in :—

Bases ending in अ or आ	Followed by the duals औ of the Nom. and Acc.	Result. No पूर्वसवर्णदीर्घः, but only वृद्धिरचि.

Examples :— राम + औ = रामौ
हाहा + औ = हाहौ

Exception (2)

S 243. दीर्घा ज्जसि च । 6-1-105 (S. K. 239) दीर्घा ज्जसि इचि च परे पूर्वसवर्णदीर्घो न स्यात् ।

When after a long vowel a termination beginning with any vowel except अ or the Nom. plural जस् (अस्) follows, there is not the above change.

Note: Among the 1st five terminations in question, the change of lengthening the base vowel does not take place;

(1) When both the duals औ follow a short अ,

(2) When a long vowel preceds and औ follows,

(3) When a long vowel preceds and the Nom. plural follows.

1. When the base ends in अक् (अ. इ or उ, short or long) there is Pūrvarūpa.

2. When it ends in ऋ short or long, there is guṇa.

3. When it ends in ए, ऐ or औ, एचोऽयवायावः applies.

4. When it ends in ओ, the single substitute is 'आ' by औतोऽम्शसोः.

Introduction :— Whereas there is lengthening by 'पूर्वसवर्णदीर्घ' the स् of शस्, (accu. plural termination) is changed to न by :—

s 248. तस्माच्छसो नः पुंसि । 6-1-103 (S. K. 196) पूर्वसवर्णदीर्घात् परः यः शसः सकारः तस्य नः स्यात्पुंसि ।

(Eg.) रामान्, हरीन्, शंभून्, पितॄन्, for bases ending in short vowels. हाहान्, पपीन्, हूहून्, कॄन्, for bases ending in long vowels.

A summary of the scope of Pūrvasavarṇa Dīrgha :—

The rule that provides for this change is, "प्रथमयोः पूर्वसवर्णः" As this Sūtra is next to "अकस्सवर्णे दीर्घः" the word अकः is introduced from that into this. So this change is only for अक् which excludes ए ऐ ओ and औ. So the base ending in एच् do not undergo this change. Taking the vowels denoted by 'अक्' there are five of them अ, इ, उ, ऋ and ऌ, among which the last may be disregarded as it has no long vowel. Taking the long vowels they do not undergo this change before the nominative plural and accusative and nominative duals by दीर्घाज्जसि च. So they undergo this change only before the plural of the accusative. Taking the short vowels short ऋ takes guṇa before all sarvaāmasthānas by ऋतो ङिसर्वनामस्थानयोः, and so this rule applies to such bases only before the accu. plural (पितॄन्). Among the rest, bases ending in अ, short are long are not covered by this rule, by नादिचि. So only short इ and short उ undergo this change before औ (both duals) and शस् (accu. plural).

The above is not a full statement, as other cases have been noticed under each of the terminations.

Bases ending in short अ

As already stated the terminations in Table II above are applicable in their unmodified form only to nouns ending in consonants. As regard

திருச்சிற்றம்பலம்

(சோமவாரச் சருக்கம்)

அம்புய நாண் மலர்வதனத் தம்பிகைகே தாரநோன் பாற்றி நீண்ட
செம்பவளச் சடைப்பரமன் இடப்பாகஞ் சேர்ந்திருந்த திரமீ தாமால்
இம்பருல குயிரெவைபு மூமதுயிரா மெனக்கருதி யிரங்கி நாளும்
நம்புதவம் புரிமுனிவீர் இனிச்சோம வாரபலன் நயந்து சொல்வாம். (1)

நன்மைதரு மறிவுதவங் கல்வியுஞ்செல் வமுங்கொடுக்கு நாளும் பெற்ற
தன்மையுறு பிறப்பகற்றும் தரணியொடு வானுளத் தருஞ்சீர் செய்யும்
துன்மரணந் தவிர்க்குமடற் பகைதொலைக்கு பரமுத்திச் சுகமு நல்கும்
வின்மதிசூ டியபரமன் மகிழ்சோம வாரமியல் விரதந் தானே. (2)

பொன்னவிருஞ் சுணங்கலர்ந்த புளகமுலை யயிராணி புடையின் மேவ
மின்னனைய நுழைமருங்கின் மேனகையு முருவசியும் விரும்பி யாடக்
கின்னரர்கள் யாழ்முரலக் கிளிமழலை மதிவதனக் கொண்டை நாட்ட
வன்னமுலை யரம்பையர்கள் மணிக்கவரி முறையிரட்ட வசந்தமேவ. (3)

விண்ணவர்கள் மணிமகுட விதமுரிஞ்சிப் பதஞ்சிவப்ப விரைகு லாவும்
தண்ணெனன் மது மழைபொழியுஞ் சந்தான மலர்சொரியச் சலசம் பூத்த
வண்ணமுகி விருந்ததென மடங்கலணை மீதிருந்து வானோர் கோமான்
நண்ணு முனிவர ராசி நவிலவிய னுலகரசு நடத்து நாளில் (4)

விருத்திரனென் றொருநிருதன் மேவலர்தம் முயிர் குடிக்கும் வீரவேலோன்
கருத்திலுறு வெகுளியினற் கனற்பொறிகள் சிதறியசெங்கண்ணனென்னு
தருக்கினுயர் வடவரையைத் தண்டமெனப் பிடித்தெடுக்குந் தறுகணாளன்
உருத்திகழும் வடவனலும் உளநடுங்கிச் சிகையொடுங்கவுரப்புஞ் சொல்லான் (5)

தானவர்தம் குலம்விளங்கச் சனித்தமரர் முதல்வனொடு சமருஞ் செய்ய
வானவுல கெய்துதலும் வாசவனும் வெள்ளைமத மலையி லேறி
யானபடைக் கடல்சூழ வார்ப்பரவந் திசைபோர்ப்ப வணைந்தா ளென்னுர்
ஊனகுவேல் விருத்திரனும் உறுபடையோ டறைகூவி யுருத்து வந்தான். (6)

இருபடையும் படைவழங்கி யெதிர்ந்தபொழு ததிர்ந்ததுல கெழுந்தசோரி
நிருதர்தலை புயங்கரமன் னிலைதடிந்தார் அமராட னிருதர் வானோர்
குருமவுலி சிரங்கரந்தோள் குறைத்தனரப் பொழுதமரர் கோமான் செங்கை
பொருசிலைநா ணெறிந்தசுரர் போர்தொலைந்து பயந்தோடப்புறமுங் கண்டான். (7)

கண்டபொழு தசுரர்சிறை கைச்சிலையை வளைத்துநெடுங் கணை கதுவி
அண்டரிறை யெதிர்வரலும் அவனுமடற் சிலையைவளைத் தநேகவாளி

மண்டுமவ னிரதமிசை மார்பின்மிசை தோளின்மிசை வழங்கி யார்த்தான்
கொண்டசினத் தவுணனுமக் கொடுங்கணையை யடுங்கணைகள்குறித்து விட்டான்.

இம்முறையே விருவர்களும் இகல்புரிய வவுணன்வலிக் குடைந்த வானோர்
செம்மல்பல முறைசமரஞ் செய்தும்வெற்றி யுற்றிலனச் செய்கை யாலே
வெம்முனைவன் றகரெனவே பின்வாங்கி முன்னடந்து பேவி வெல்வான்
அம்மவினிச் செயுஞ்சூழ்ச்சி யாதெனும்போ தருட்குரவ னணைந்து சொல்வான் (9)

சிந்தைசெயும் வரமுதவு மோதனமா புரத்தின்விரிச் சிகமா தத்தில்
வந்துபொருந் திடுசோம வாரவிர தம்புரியும் மரபாற் செய்யின்
அந்தமிலா விருத்திரனைக் கொன்றுமலர்த் தொடைவாகை யணிவா யென்ன
எந்தையிது செய்குவனென் றிந்திரனும் அந்நகரத் தினிது போந்து. (10)

ஆதரவின் மதிவாரத் தலர்கமழுங் காவேரி யாற்றின் மூழ்கி
ஏதமிலா வைந்தெழுத்தைச் செபித்தாரா தனையியற்றி யிரவு தன்னிற்
சீதமதி யணிந்தசிவன் சேவைசெய்து பின்பசனஞ் செய்திவ் வாரம்
மாதமுழு தினும்விரதம் புரிந்துபரன் மலரடியை வழுத்துங் காலை (11)

செஞ்சடையிற் பிறையிலங்கத் திருமுகத்தி னருள்விளங்கத் தேவர் போற்றும்
மஞ்சனமா மிடறிலங்க விடையினெம்மா னெழுந்தருள வமரர் கோமான்
கஞ்சமல ரடிவணங்கி யஞ்சலிசெய் தாயிராங்கண் களித்து நிற்ப
பஞ்சனமெல் லடிப்பாகன் வேண்டும்வரம் பகர்தியெனப்பணிந்து சொல்வான் (12)

வீரமிகு விருத்திரனை வெல்லும்வரம் அருள்கவென விளங்கு சோம
வாரவிர தப்பலனால் அவனைவெல்லும் வலியுனக்கு வழங்கினோமென் (று)
ஈரமதி யணிந்தபரன் பகர்ந்தருள விந்திரன்வா னெய்தி யந்நாட்
கோரவிருத் திரனுயிரைக் குலிசமுணக் கொடுத்துவெற்றி கொண்டா னன்றே.

அளகைநகர்க் கிறைவனிந்த விரதமோ தனபுரத்தி லணைந்து பத்தாண் (டு)
உளமகிழ மன்பினுட னுஞற்றுதலா லோதிமத்தை யுயர்த்து ளானும்
துளவணியு மாதவனும் தொடர்வரிய சங்கரற்குத் தோழ னாகி
வளனுதவு சங்கநிதி பத்மநிதிக் கதிபதியாய் மன்னி னானால் (14)

சிவபக்தி சிரோமணியாய்ச் சகலகுரு வாய்த்தியான சீல னாகி
தவசித்தி சிவபூசை மாதவத்தோ ரெவர்களுக்குந் தலைமை பெற்றோன்
பவமுற்று மகற்றுதுரு வாசமுனி வரனிந்தப் பதியின் மேவி
நவமுற்ற மதிவார விரதமொரு நூறாண்டு நயந்து செய்தான். (15)

இவ்விரத மிவனாற்று முறைநங்கா தரனுளத்தி லெண்ணி வானோர்
பவ்வமொறுத் தோன்றுதிப்பப் பவளவரை மேனிலவு பரந்த தென்ன

செவ்வியமெய்த் திருமேனி நீறிலங்க வுமையுடனே சிறந்து தோன்றி
எவ்வரம்வேண் டுவதென்ருன் முனியரனை வணங்கியெழுந்திதனைச் சொல்வான்

நின்னையருச் சித்துவலம் வந்துதொழ நின்கதையி னேச மாக
உன்னருணு மத்தைபுரைத் தென்னுடைய விருத்தியெல்லாம் உனக்கே யாக்கி
பன்னுசரா சரங்களெல்லாம் நின்வடிவாய்க் கண்டுசிவ பத்தர்க் கென்றும்
அன்னமுத லுபசரிக்க வவர்கடெரி சனந்தினத்தி னன்பு மேவ. (17)

பலகடல்க ளொன்ருய்ப் பரந்திடுபோ தினுமசையாப் பத்தி மேவ
அலகில்வரம் புரிந்தருள்வாய் ஞானவொளி யேயயன்மா லாதி யோர்கள்
குலவுமருச் சனைமகிழ்ந்த கொற்றவனே யென்றுமுனி கூறச் செம்பொன்
இலகுமக மேருவில்லி யிசைத்ததைதந் தனமிதுகே ளென்று கூறும். (18)

அபராத மியற்ருர்பாற் சபதமிசை யேலிசைத்தா யாயி னிந்தச்
சுபமான வரம்பலியா தென்றுமுனி யருண்முறையே துணிகு வோமியான்
உபமான மில்லாய்நான் எவ்வுலகுஞ் சென்றுவரு முரநல் கென்ருன்
தபராச னுரைத்தவரம் கொடுத்திறைவன் மறைந்தனனத் தவனுஞ் சென்று (19)

எல்லார்க்கு மருள்புரிதற் பொருட் டுலகம் யாவையினு மிலங்குகின்ருன்
வல்லார்க்கு முலையிடத்தான் றிருச்சோற்றுத் துறையின்முனிவரர்வா னேர்கள்
நல்லார்க்கும் பொருந்தினர்இவ் விரதத்தாற் கார்த்திகையினண்ணு திங்கள்
அல்லாத திங்களிலிவ் விரதஞ்செய் திடினுமெண்ணில் பொருட் கதிப ராவர்.

(பாட பேதம்) அல்லாத திங்களினேன் பாற்றிடினும் மெண்ணில்பொருட் கதிப ராவர். (20)

ஆகத் திருவிருத்தம் 408

சோமவார விரதச் சருக்க முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

(சிவராத்திரிச் சருக்கம்)

காம மாதி களைந்த முனிவர்காள் !
சோம வார மகிமையைச் சொற்றனம்
வாம மாதினன் மாசிவ ராத்திரி
ஏம மேன்மை யினிதெடுத் தேத்துவாம். (1)

திருந்து பாடற் செழுந்தமி ழுவலர்
இருந்த சங்க மிலங்கிய கூடலிற்

வவ்வு சோரம் புரிதற்கு வாய்த்திடா
தெவ்வ மோடு புறந்தனி லெய்தலும். (18)

கங்கு னீங்கக் கனைகதிர் தோன்றலும்
பொங்கு காவிரி யாடிப் புனிதர்போற்
றங்கு பிச்சையிற் றன்பசி மாற்றியே
மங்க லில்லா(த) மறுநக ரெய்தினன். (19)

பாவ மச்சம் பழிபகைக் கேதுவாய்த்
தாவி லன்னிய(ர்) தாரம் விரும்புறும்
ஓவின் மூட ரொடுதினங் கூடியே
மேவு சோர விருத்தி தவிர்ந்திலன். (20)

எண்ணு நாட்பல விம்முறை செல்வுழி
மண்ணி லங்க மரித்தனன் ஆவியைத்
துண்ணெனச் சமன் றூதுவர் கொண்டுபோய்
நண்ணு நீதி நமன்முன் விடுத்தனர். (21)

சீறு மந்தகன் சித்திர குத்தனைக்
கூறி வன்செய் கொடுமைக ளென்றலும்
தேறி யோதுவன் றேருதி யீங்கிவன்
ஏறு பாவங்க ளெண்ணில செய்தனன். (22)

ஆயி னுங்கள வாசையி னுலுணல்
மேய நித்திரை விட்டுச் சிவநிசித்
தூய சோற்றுத் துறைதனில் மற்றைநாள்
ஏய பிச்சை யெடுத்து நுகர்தலால். (23)

அதுசி றந்த விரதமென் ருனதால்
கதமெ னச்செயும் பாவங் கழிந்ததால்
விதுமு டிப்பவன் வெள்ளி மலைக்கிவன்
சதுர மாய்ச்செல வுய்ப்பது தக்கதே. (24)

என்னும் வேலையி லீச னருளினுல்
நன்மை நந்தி கணத்துட னண்ணினன்
பன்னு கூற்றுப் பயந்தெதிர்ப் போய்ப்பணிந்(து)
இன்ன குற்றம் பொறுத்தரு ளென்றலும். (25)

நாத னேன்பு நயந்தமை யோர்ந்திடா(து)
ஏத நீசெய்த தென்னெனச் சீறியே

காது பூதரிற் காலனைக் கட்டிநீ
போது மென்று புளினை மானமேல். (வேடனை) (26)

ஏற்றி வெள்ளி வரையிலுய்த் தங்கவன்
சாற்று பூதத் தலைமை பெறச்செய்து
கூற்றைப் பார்ப்பதி கொண்கன்முன் விட்டனன்
போற்று கூற்றும் பணிந்து புகலுவான். (27)

நாத சம்பகன் நன்மையை நாடிலர்
தூத ரென்முன் றுனைவிற் கொணர்ந்தனர்
காத னீதிக் கணக்கை வினவிநின்
பாத மேவுறு பத்த னிவனென (28)

கருத்தி லுன்னிக் கயிலையில் உய்ப்பனென்(று)
அருத்தி செய்பொழு தந்நந்தி தேவர்வந்(து)
உருத்தெ னைப்பிடித் தோர்சம் பகனையும்
திருத்த மிக்கவித் திண்வரை யேற்றினர். (29)

தந்த சம்பக னுலருட் சாமிநின்
செந்தி ருப்பதச் சேவையும் பெற்றனன்
நந்தி தேவர் ஒறுத்தலி னுன்செயும்
அந்த மில்பிழை யாவு மகன்றதால். (30)

இன்று காத்தரு ளென்னலு மெம்பிரான்
நன்று நின்பிழை நாம்பொறுத் தோமினித்
துன்று சோற்றுத் துறையிற் சிவநிசி
யன்று புத்தி யபுத்தியோ டாயினும் (31)

சேவை நானஞ் சிவார்ச்சனை செய்பவர்
பாவ ராயினும் பத்தரா வார்நமக்(கு)
ஆவ நாங்கவர்க் கல்லலி யற்றிடேல்
மேவி யின்சொல் விளம்பி வணங்குவாய். (32)

ஒழுக்கந் தன்னை யுயிரென வோம்பிய
வழுக்கி லன்பர்க்கு வந்திடர் நீசெயில்
இழுக்கு தண்டஞ்செய் வோமென் றிறைசொல
வழுக்கில் காலனும் அஞ்சி வணங்கியே. (33)

அண்ண லேயுன் னருண்முறை செய்வனென்(று)
எண்ணு நல்விடை கொண்டபின் இன்னருள்

நண் ணு நந்தியை நாடி வணங்கியே
வண்ண மேவுதன் மாநகர் எய்தினன். (34)

வெம்பு தீவினை வேடனுஞ் சேவையால்
எம்பி ரான்கணத் துக்கிறை யாயினன்
நம்பு நற்சிவ ராத்திரி மேன்மையை
உம்ப ராலு முரைப்பதற் கொண்ணுமோ. (35)

அரிய மாதவத் தந்தணி ரோதன
புரியின் மேன்மையைப் புத்திவைத் தின்புறத்
தெரியு மெய்ச்சிவ பத்தர்க்குச் செப்புமென்(று)
உரிய சூத முனிவர ளோதினன். (36)

ஓது சூதனை யுத்தம மாதவர்
காதல் செய்து புராணக் கனியமு(து)
ஆத ரத்தி னுகர்ந்தன்ன பூரணி
மாது பாகனை வாழ்த்தி மகிழ்ந்தனர். (37)

வேறு

ஓதன மாபுரி மான்மிய நாடொறு மோதி யுரைப்பார்கள்
காதலி னுற்பொருள் ஓதினர் மாகதை காது நிறைப்பார்கள்
பூதல மீதர சாளுவர் வானவர் பூமி புரப்பார்கள்
மேதகு ஞானமு மேவி யுலாச மெய் வீடு பெறற்பாலர். (38)

வேறு

பலங்கொள் மறையா கமங்கள்சிவ பத்தர் மழைபார்த் திபர்வாழி
நலங்கொள் பசுவந் தணர்தரும நாடுந் தானந் தவம்வாழி
துலங்கு மன்ன பூரணிவாழ் தொலையாச் செல்வர் பதம்வாழி
இலங்குஞ் சோற்றுத் துறைமகிமை யியலும் புராணத் தமிழ்வாழி. (39)

ஆகத் திருவிருத்தம் 447

சிவராத்திரிச் சருக்க முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

சுபமஸ்து.

திருச்சோற்றுத்துறை தலப்புராணம் முற்றிற்று.

திருஞான சம்பந்த சுவாமிகள்

அருளிய

திருச்சோற்றுத்துறை பதிகம்.

பண்—தக்கராகம்

(முதற்றிருமுறை)

திருச்சிற்றம்பலம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னு தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே. (1)

பாலு நெய்யுந் தயிரும் பயின்றாடித்
தோலு நூலுந் துதைந்த வரைமார்பர்
மாலுஞ் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே (2)

செய்ய செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தைய லாளோர் பாக மாயவெம்
ஐயர் சோற்றுத் துறைசென் றடைவோமே. (3)

பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேய வார்பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. (4)

பிறையு மரவும் புனலுஞ் சடைவைத்து
மறையு மோதி மயான மிடமாக
உறையுஞ் செல்வ முடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. (5)

துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகள் சோற்றுத் துறைசென் றடைவோமே. (6)

சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்
பாடி யாடிப் பரவு வாரருள்ளத்
தாடி சோற்றுத் துறைசென் றடைவோமே. (7)

பெண்ணோர் பாக முடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகங் கலந்த நுதலினர்
எண்ணா தரக்க னெடுக்க வூன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென் றடைவோமே. (8)

தொழுவா ரிருவர் துயர நீங்கவே
அழலா யோங்கி யருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியான் மிக்கவெம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே. (9)

கோது சாற்றித் திரிவா ரமண்குண்டர்
ஓது மோத்தை யுணரா தெழுநெஞ்சே!
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென் றடைவோமே. (10)

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடிய ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே.
திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச்செய்த

திருச்சோற்றுத்துறை பதிகம்.

திருநேரிசை

(4-திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பொய்விரா மேனிதன்னைப் பொருளெனக் காலம்போக்கி
மெய்விரா மனத்தனல்லேன் வேதியா வேதநாவா
ஐவரா லலைக்கப்பட்ட வாக்கைகொண் டயர்த்துப்போனேன்
செய்வரா லுகளுஞ்செம்மைத் திருச்சோற்றுத் துறையனாரே. (1)

கட்டராய் நின்று நீங்கள் காலத்தைக் கழிக்கவேண்டா
எட்டவாங் கைகள்வீசி யெல்லிநின் றாடுவானே
அட்டமா மலர்கள்கொண்டே யானஞ்சு மாட்டவாடிச்
சிட்டரா யருள்கள் செய்தார் திருச்சோற்றுத் துறையனாரே. (2)

கல்லினாற் புரமூன்றெய்த கடவுளைக் காதலாலே
எல்லியும் பகலுமுள்ளே யேகாந்த மாகவேத்தும்
பல்லில்வெண் டலைகையேந்திப் பல்லிலந் திரியுஞ்செல்வர்
சொல்லுநன் பொருளுமாவார் திருச்சோற்றுத் துறையனாரே. (3)

கறையராய்க் கண்டநெற்றிக் கண்ணராய்ப் பெண்ணோர்பாகம்
இறையரா யினியராகித் தனியராய்ப் பனிவெண்டிங்கள்
பிறையராய்ச் செய்தவெல்லாம் பீடராய்க் கேடில் சோற்றுத்
துறையராய்ப் புகுந்தென் னுள்ளச் சோர்வுகண் டருளினாரே. (4)

பொந்தையைப் பொருளா வெண்ணிப் போருக்கெனக் காலம்போனேன்
எந்தையே யேகமூர்த்தி யென்றுநின் றேத்தமாட்டேன்
பந்தமாய் வீடுமாகிப் பரம்பர மாகிநின்று
சிந்தையுட் டேறல் போலுந் திருச்சோற்றுத் துறையனாரே. (5)

பேர்த்தினிப் பிறவாவண்ணம் பிதற்றுமின் பேதைபங்கன்
பார்த்தனுக் கருள்கள்செய்த பாசுப தன்றிறமே
ஆர்த்துவந் திழிவதொத்த வலைபுனற் கங்கையேற்றுத்
தீர்த்தமாய்ப் போதவிட்டார் திருச்சோற்றுத் துறையனாரே. (6)

கொந்தார்பூங் குழலினாரைக் கூறியே காலம்போன
எந்தையெம் பிரானாய்நின்ற விறைவனை யேத்தாதந்தோ!
முந்தரா வல்குலாளை யுடன்வைத்த வாதிமூர்த்தி
செந்தாது புடைகள்சூழ்ந்த திருச்சோற்றுத் துறையனாரே. (7)

அங்கதி ரோனவனை யண்ணலாக் கருதவேண்டா
வெங்கதி ரோன்வழியே போவதற் கமைந்துகொண்மின்
அங்கதி ரோனவனை யுடன்வைத்த வாதிமூர்த்தி
செங்கதி ரோன்வணங்குந் திருச்சோற்றுத் துறையனாரே. (8)

ஓதியே கழிக்கின்றீர்கள் உலகத்தீர் ஒருவன்றன்னை
நீதியா னினையமாட்டீர் நின்மல னென்றுசொல்லீர்
சாதியா நான்முகனுஞ் சக்கரத் தானுங்காணாச்
சோதியாய்ச் சுடரதானார் திருச்சோற்றுத் துறையனாரே. (9)

மற்றுநீர் மனம்வையாதே மறுமையைக் கழிக்கவேண்டில்
பெற்றதோ ருபாயந்தன்னாற் பிரானையே பிதற்றுமின்கள்
கற்றுவந் தரக்கனோடிக் கயிலாய மலையெடுக்கச்
செற்றுகந் தருளிச்செய்தார் திருச்சோற்றுத் துறையனாரே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்

(4-ந் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

காலை யெழுந்து கடிமலர் தூயன தாங்கொணர்ந்து
மேலை யமரர் விருப்பு மிடம்விரை யான்மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
மாலை மதியமன் றோவெம் பிரானுக் கழகியதே. (1)

வண்டணை கொன்றையும் வன்னியு மத்தமும் வாளரவும்
கொண்டணைந் தேறு முடியுடை யான்குரை சேர்கழற்கே
தொண்டணைந் தாடிய சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
வெண்டலை மாலையன் றோவெம் பிரானுக் கழகியதே. (2)

அளக்கு நெறியின னன்பர்க டம்மனத் தாய்ந்துகொள்வான்
விளக்கு மடியவர் மேல்வினை தீர்த்திடும் விண்ணவர்கோன்
துளக்குங் குழையணி சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
திளைக்கு மதியமன் றோவெம் பிரானுக் கழகியதே. (3)

ஆய்ந்தகை வாளர வத்தொடு மால்விடை யேறியெங்கும்
பேர்ந்தகை மானட மாடுவர் பின்னு சடையிடையே
சேர்ந்தகைம் மாமலர் துன்னிய சோற்றுத் துறையுறைவார்
ஏந்துகைச் சூல மழுவெம் பிரானுக் கழகியதே. (4)

கூற்றைக் கடந்ததுங் கோளர வார்த்ததுங் கோளுழுவை
நீற்றிற் றுதைந்து திரியும் பரிசது நாமறியோம்
ஆற்றிற் கிடந்தங் கலைப்ப வலைப்புண் டசைந்ததொக்கும்
சோற்றுத் துறையுறை வார்சடை மேலதோர் தூமதியே. (5)

வல்லாடி நின்று வலிபேசு வார்கோளர் வல்லசுரர்
கொல்லாடி நின்று குமைக்கிலும் வானவர் வந்திறைஞ்சச்
சொல்லாடி நின்று பயில்கின்ற சோற்றுத்துறை யுறைவார்
வில்லாடி நின்ற நிலையெம் பிரானுக் கழகியதே. (6)

ஆயமுடையது நாமறி யோமர ணத்தவரைக்
காயக் கணைசிலை வாங்கியு மெய்துந் தயக்கறுத்தான்
தூயவெண் ணீற்றினன் சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
பாயும்வெண் ணீர்த்திரைக் கங்கையெம் மானுக் கழகியதே. (7)

அண்ட ரமரர் கடைந்தெழுந் தோடிய நஞ்சதனை
உண்டு மதனை யொடுக்கவல் லான்மிக்க வுப்பர்கள்கோன்
தொண்டு பயில்கின்ற சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
இண்டை மதியமன் றேவெம் பிரானுக் கழகியதே. (8)

கடன்மணி வண்ணன் கருதிய நான்முகன் றானறியா
விடமணி கண்ட முடையவன் றானெனை யாளுடையான்
சுடரணிந் தாடிய சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
படமணி நாகமன் றேவெம் பிரானுக் கழகியதே. (9)

இலங்கைக் கிறைவ னிருபது தோளு முடிநெரியக்
கலங்க விரலினு லூன்றி யவனைக் கருத்தழித்த
துலங்கன் மழுவினன் சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
இலங்கு மதியமன் றேவெம் பிரானுக் கழகியதே. (10)

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை

(5-திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

கொல்லை யேற்றினர் கோளர வத்தினர்
தில்லைச் சிற்றம் பலத்துறை செல்வனார்
தொல்லை யூழியர் சோற்றுத் துறையர்க்கே
வல்லை யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. (1)

முத்தி யாக வொருதவஞ் செய்திலை
அத்தி யாலடி யார்க்கொன் றளித்திலை

தொத்து நின்றலர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. (2)

ஒட்டி நின்ற வுடலுறு நோய்வினை
கட்டி நின்ற கழிந்தவை போயறத்
தொட்டு நின்றுமச் சோற்றுத் துறையர்க்கே
பட்டி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. (3)

ஆதி யானண்ட வாணர்க் கருணல்கும்
நிதி யானென்று நின்மல னேயென்றும்
சோதி யானென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
வாதி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. (4)

ஆட்டி னாயடி யேன்வினை யாயின
ஒட்டி னாயொரு காதி லிலங்குவெண்
தோட்டி னாயென்று சோற்றுத் துறையர்க்கே
நீட்டி நீபணி செய்மட நெஞ்சமே. (5)

பொங்கி நின்றெழுந் தகட னஞ்சினைப்
பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்
தொங்கி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்குத்
தங்கி நீபணி செய்மட நெஞ்சமே. (6)

ஆணி போலநீ யாற்ற வலியைகாண்
ஏணி போலிழிந் தேறியு மேங்கியும்
தோணி யாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே. (7)

பெற்ற மேறிலென் பேய்படை யாகிலென்
புற்றி லாடர வேயது பூணிலென்
சுற்றி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
பற்றி நீபணி செய்மட நெஞ்சமே. (8)

அல்லி யானர வைந்தலை நாகணைப்
பள்ளி யானறி பாத பரிசெலாம்
சொல்லி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
புல்லி நீபணி செய்மட நெஞ்சமே. (9)

மிண்ட ரோடு விரவியும் வீறிலாக்
குண்டர் தம்மைக் கழிந்துய்யப் போந்துநீ

தொண்டு செய்தென்றுஞ் சோற்றுத் துறையர்க்கே
உண்டு நீபணி செய்மட நெஞ்சமே (10)

வாழ்ந்த வன்வலி வாளரக் கன்றனை
ஆழ்ந்து போயல றவ்விர லூன்றினான்
சூழ்ந்த பாரிடஞ் சோற்றுத் துறையர்க்குத்
தாழ்ந்து நீபணி செய்மட நெஞ்சமே. (11)

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்.

(6-திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மூத்தவனா யுலகுக்கு முந்தி னானே
முறைமையா லெல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனா யேழுலகு மாயி னானே
யின்பனாய்த் துன்பங் களைகின் றானே
காத்தவனா யெல்லாந்தான் காண்கின் றானே
கடுவினையேன் றீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயந் தானே. (1)

தலையவனா யுலகுக்கோர் தன்மை யானே
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கின் னமுதா னானே
நிலையவனாய் நின்னொப்பா ரில்லா தானே
நின்றுணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோன்மே லிட்ட
கூற்றுவனே கொடிமதில்கண் மூன்று மெய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயந் தானே. (2)

முற்றாத பான்மதியஞ் சூடி னானே
முளைத்தெழுந்த கற்பகத்தின் கொழுந்தொப் பானே
உற்றாரென் றொருவரையு மில்லா தானே
யுலகோம்பு மொண்சுடரே யோதும் வேதம்

கற்றானே யெல்லாக் கலைஞா னமுங்
கல்லாதேன் தீவினைநோய் கண்டு போகச்
செற்றானே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயந் நானே. (3)

கண்ணவனா யுலகெல்லாங் காக்கின் றானே
காலங்க ளூழிகண் டிருக்கின் றானே
விண்ணவனாய் விண்ணவர்க்கு மருள்செய் வானே
வேதனாய் வேதம் விரித்திட் டானே
எண்ணவனே எண்ணார் புரங்கண் மூன்றும்
இமையாமு னெரிகொளுவ நோக்கி நக்க
திண்ணவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே (4)

நம்பனே நான்மறைக ளாயி னானே
நடமாட வல்லானே ஞானக் கூத்தா
கம்பனே கச்சிமா நகரு ளானே
கடிமதில்கண் மூன்றினையும் பொடியா வெய்த
அம்பனே யளவிலாப் பெருமை யானே
யடியார்கட் காரமுதே யானே றேறும்
செம்போனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே. (5)

ஆர்ந்தவனே யுலகெலா நீயே யாகி
யமைந்தவனே யளவிலாப் பெருமை யானே
கூர்ந்தவனே குற்றால மேய கூத்தா
கொடுமூ விலையதோர் சூல மேந்திப்
பேர்ந்தவனே பிரளயங்க ளெல்லா மாய
பெம்மானென் றெப்போதும் பேசு நெஞ்சில்
சேர்ந்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே. (6)

வானவனாய் வண்மை மனத்தி னானே
மாமணிசேர் வானோர் பெருமா னீயே
கானவனா யேனத்தின் பின்சென் றானே
கடிய வரணங்கண் மூன்றட் டானே
தானவனாய்த் தண்கயிலை மேவி னானே
தன்னொப்பா ரில்லாத மங்கைக் கென்றும்
தேனவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே. (7)

कुचौ गोपय कञ्चुल्या सखि! मानोऽस्ति गोपने ।
पश्य! भानौ स्थिते साक्षा ल्लोका देवालयादराः ॥ ६१ ॥

विद्याः सर्वा न शोभन्ते एकां सुकवितां विना ।
यथा तु सुगुणा स्सर्वे परोपकरणं विना ॥ ६२ ॥

नदीभ्यो जल मायाति जलदैः पीयते सदा ।
न सुखी च न दुःखी च गंभीरः सरितां पतिः ॥ ६३ ॥

नरो न स्तूयतां पद्यैः स्तूयतां परमेश्वरः ।
सरलायाः सुवृत्तायाः कवितायाः फलं त्विदम् ॥ ६४ ॥

इति नीतिपद्धतिः ॥

கொங்கைகளைக் கச்சையினால் மறைத்துக்கொள். தோழீ! மறைத்து வைப்பதில் ஒரு பெருமை உண்டு. பார்! ஆதவன் பிரத்தியக்ஷமாயிருக்கையிலே மக்கள் கோவிலையே விரும்புகின்றனர். (௬௧)

நல்ல கவிதையொன்றில்லாவிடில் கற்ற கல்வியெல்லாம் சிறப்புற்று விளங்காது. இதற்கு ஒருதாகரணம்:-நற்குணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தாலும், பிறருக்கு உதவும் தன்மையில்லாவிடில் அவை பயனற்றவையே. (௬௨)

(சமுத்திரத்தில்) பல ஆறுகளினின்றும் தண்ணீர் பெருகி ஓடி வந்து சேருகின்றது. அதை நித்தமும் மேகங்கள் பருகுகின்றன. ஆனால், கடல், இந் நிகழ்ச்சிகளால் இன்பமும் அடைவதில்லை. துன்பமும் அடைவதில்லை. கம்பீரமாக (ஆழமாக)வே குழப்பமின்றிக்கே இருக்கின்றது. (௬௩)

இனிய கவிகளால் மானிடரைத்துதியாதீர். எல்லாம்வல்ல இறைவனையே துதிப்பீராக. ஸரளமான (எளிதில் பொருள் விளங்குமாறுள்ள)தும், நல்ல விருத்தங்களுடையதுமான (நல்லொழுக்கமுள்ள) கவிதைக்கு இதுவே பயன்.

நீதி பத்ததி முற்றும்.

अथ सज्जनपद्धतिः ॥

जिह्वावत्सज्जनः स्निग्धो द्विजमध्ये वसन् सदा ।
भुंक्ते सर्वरसान् हृद्यान्नैव स्नेहेन लिप्यते ॥ ६५ ॥

चन्दनं सुजनं मन्ये महागोत्रसमुद्भवम् ।
स्वगात्रं पेषयित्वापि परतापनिवारकम् ॥ ६६ ॥

ஸஜ்ஜன (சற்சன) பத்ததி

நல்லவர்கள் நாக்குபோன்றவர். இதற்குக் காரணம் யாதெனில்:— எப்பொழுதும் சிநேகம் (ஸ்நேஹம்) நிறைந்தவராக, த்விஜர்களின் நடுவில் வசிப்பது. மனத்துக்கினியதான ரஸங்கள் யாவற்றையும் அனுபவித்துக்கொண்டேயிருத்தல். அப்படியிருந்தாலும் சிநேகம் (ஸ்நேஹம்) ஒட்டாதவாறிருத்தல்.

குறிப்பு:— இந்த சுலோகத்தில் சிலேடையால் கருத்து உணர்த்தப்படுகின்றது. முதலில் "ஸ்நிக்த:" என்பதற்கு "சிநேகமுள்ளவன் என்று பொருள். இங்கு சிநேகம் எனப்படுவது எப்பொருளையும் ஒட்டிக்கொள்ளும் (ஈரமான) தன்மையையும் நட்பையும் உணர்த்தும். "த்விஜ" என்னும் சொல், பற்களையும் அந்தணர்களையுமுணர்த்தும். "ரஸம்" என்னும் சொல், உப்பு, புளிப்பு-முதலியவற்றையும் ச்ருங்காரம்-வீரம்-முதலிய காவிய ரஸங்களையும் உணர்த்தும். சிநேஹம் ஒட்டாதவாறிருத்தல் என்னுமிடத்தில் சிநேகம்-என்னும் சொல் பசையையும் பற்றுதலையும் குறிக்கும். முறையே முதலில் கூறியதெல்லாம் நாக்குக்கும், இரண்டாவதாகக் கூறியதெல்லாம் நல்லோர்க்கும் பொருந்தும். இவ்வழியில் இதன் கருத்தையுணரவேண்டும். (௬௫)

சந்தனத்தை நல்லவனாக (சற்சனனாக) எண்ணுகிறேன். காரணம்? (1) மஹா கோத்திரத்தில் பிறந்தமை. (2) தன் சரீரத்தைத் தேய்த்துத் தேய்த்து அதன்மூலம் பிறருடைய தாபத்தைத் தீர்த்தல்.

குறிப்பு:— இதிலும் சிலேடை. மஹா கோத்திரம் என்பது பெரிய மலை, உயர்ந்த குலம் என இருபொருளுள்ள சொல். பிறருடைய தாபம் என்பது வெப்பத்தையும், ஏனைய துன்பங்களையும் உணர்த்தும். சந்தனக் கட்டையைத் தேய்த்துப் பிறர் தமது வெப்பத்தைத் தணித்துக்கொள்வர். சற்சனங்கள், தன் உடம்பு தேய உழைத்துப் பிறருடைய துன்பங்களை அகற்றுவர். இங்கும் முதலில் கூறிய பொருள் சந்தனத்துக்கும், இரண்டாவதாகக் கூறப்படும் பொருள் சற்சனங்களுக்கும் அமையும். தான் தேய்ந்துப் பிறர் தாபத்தைத்

ख्यातिं याति कुले कश्चि त्तेजसा यशसा श्रिया ।
दिवाकरस्यान्ववाये राम एव प्रपूज्यते ॥ ६७ ॥

गुणैस्तु पूज्यतां याति जाति रत्र न कारणम् ।
कपिजातौ समुत्पन्नः पूज्यते हनुमान् जनैः ॥ ६८ ॥

नदीनां सज्जनानाञ्च महागोत्रसमुद्भवात् ।
जनाना मुपकाराय जीवनं सकलं सदा ॥ ६९ ॥

सद्वृक्षाणां सज्जनानां श्रिततापापहारिणाम् ।

தணிப்பது சந்தனக்கட்டையின் இயல்பு. அதனால் அது சிறிதும் வருந்துவதில்லை அவ்வாறே சற்சனங்களும் பிறரது துன்பங்களையகற்றுவதற்காகத் தாம் தேய்ந்து போவர். ஆனால் அதனால் சிறிதும் வருந்தமாட்டார்கள். இது அவர்களுடைய பிறவிக் குணம். இயற்கையிலமைந்தது, என்று இதுபோன்றகருத்துக்கள் இங்கு ஊன்றியுணரற்பாலது. (௬௬)

ஒரு குலத்தில் பராக்கிரமத்தாலும், புகழாலும், செல்வத்தினாலும் பிரசித்தமாகிவிடுகின்றான் ஒருவன். (எல்லோரும் அவ்வாறாவதில்லை). சூரியனுடைய வம்சத்தில் பல்லாயிரக்கணக்கான அரசர்கள் பிறந்து நீதி வழுவாமல் பல்லாயிரமாண்டுகள் ஆட்சிபுரியவில்லையா? ஆனால் இராமன் ஒருவனே எல்லோராலும் பூஜிக்கப்படுகிறார் (௬௭)

குணங்களாலேயே ஒருவன் பூஜிக்கத் தகுந்தவனாகின்றான். இதற்கு ஜாதியானது காரணமன்று. குரங்கினத்தில் பிறந்த அனுமான் ஜனங்களால் பூஜிக்கப்படுகிறார். (௬௮)

ஆறுகளும் நன்மக்களும் மஹா கோத்திரங்களிலேயே தோன்றுகின்றமையின், அந்நதிகளினுடையவும் நன்மக்களுடையவும் "ஜீவனம்" முழுவதும் எக்காலமும் மக்களின் உதவிக்காகவே அமைந்தது.

குறிப்பு :— இந்த சுலோகத்தில் 'மஹா கோத்ரம்' என்னும் சொல்லிலும் 'ஜீவனம்' என்னும் சொல்லிலும் சிலேடை. பெரிய மலைகள் — உயர்ந்த குலம் இவ்விரண்டுக்கும் 'மஹா கோத்திரம்' என்பது பெயர். தண்ணீருக்கும் – உயிர் வாழ்வதற்கும் 'ஜீவனம்' என்பது பெயராகும். இங்கும் முறையே முதல் பொருள் ஆறுகளுக்கும், இரண்டாம் பொருள் நன்மக்களுக்கும் பொருந்தும். (௬௯)

(நிழல் நிறைந்ததும் கனிகள் மிகுந்ததுமான) நல்ல மரங்களும் நன்

[1] येषान्तु सफलं जन्म परोपकृतये सदा ॥ ७० ॥

दुर्जनः साधुसंसर्गा दवाप्नोति शुभां मतिम् ।
निंब श्चन्दनतां याति संवासा न्मलयाचले ॥ ७१ ॥

उपकारं करोत्येव सुजनो दुर्बलोऽपि सन् ।
फलाभावा चन्दनस्तु कुरुते गात्रपेषणम् ॥ ७२ ॥

वसन्त! सन्तः सततं प्रार्थयन्ते त्वदागमम् ।
मंगलानां निदानं त्वं फलदः सर्वशाखिनाम् ॥ ७३ ॥

सज्जनः सेव्यतां नित्यं नीचानुसरणं वृथा ।
रसालसेकः सफलः पलाशे सलिलं वृथा ॥ ७४ ॥

மக்களும், தன்னையண்டியவர்களுடைய தாபத்தை அகற்றும் இயல்புள்ளன வாகலின், எப்பொழுதும் பிறருக்குதவி செய்வதற்காகவே அப்பிறவிகள் தோன்றுகின்றன. அவ்வாறான பிறவியே பயனுள்ளது. (எ0)

துர்ஜனனும் நல்லோருடைய சேர்க்கையினால் நன்மதியைப் பெறுகின்றான். வேப்பமரம் மலய மலையில் வளிப்பதனால் சந்தனமரமாகிவிடுகின்றது. (எக)

நன்மக்கள், தாம் சக்தியற்றவராயிருப்பினும் பிறருக்குதவி செய்யாமலிரார். சந்தன மரத்தைப் பாருங்கள். தன்னிடம் கனிகளில்லையே என்னும் குறையினால் தன் உடம்பையே தேய்த்துப் பிறருக்குதவி செய்கின்றது. (எஉ)

இளவேனிற் பருவமே! நல்லோர்கள் உன் வரவை நித்தமும் விரும்புகின்றனர். ஏனெனில்; நீ மங்களங்களுக்கெல்லாம் ஆதிகாரணமாகின்றாய். எல்லா மரங்களும் உன் வரவால் கனிகள் நிறைந்தவைபாகின்றன. (எங)

நித்தமும் நன்மக்களையே ஸேவிக்கவேண்டும். நீசர்களை (தாழ்ந்தவர்களை) அனுஸரிப்பது வீண். மாமரத்துக்குத் தண்ணீர் ஊற்றுவது பயனுள்ள செய்கை. பலாசமரத்துக்குத் தண்ணீர் ஊற்றுவது வீண். (எச)

---

1. ஏர்—என்று பாடமிருந்தால் ஸௌகர்யமாயிருக்கும் இந்த சுலோகம்:—
सद्वृक्षास्सज्जनाश्चैव श्रिततापापहारिणः । येषान्तु सफलं जन्म परोपकृतये सदा ॥
என்று இருக்கலாம். ஆனால் சுவடியில் இவ்வாறில்லை. பொதுவில் கருத்து மட்டும் ஒருவாறாக எழுதப்பட்டது.

स्वेन यद्वर्धितं, तत्तु न मज्जयति सज्जनः ।
काष्ठन्तु पादपा ज्ञात मिति तोयेन धार्यते ॥ ७५ ॥

वास स्त्वां सुजनं मन्ये सर्वलोकोपकारकम् ।
त्वदुत्पत्ति र्गुणमयी सर्वेषां गुह्यगुप्तये ॥ ७६ ॥

सज्जनानां नदीनां च मेघानां फलशाखिनाम् ।
सर्वेषा मुपकाराय जीवनं तापहारकम् ॥ ७७ ॥

खलाः सुमनसां संगात् प्राप्नुवन्ति सतां मतिम् ।
तिलसंस्थापितैः पुष्पै स्तैलै याति सुगंधता ॥ ७८ ॥

நன்மக்கள், தம்மால் வளர்க்கப்பட்ட பொருளை ஒருகாலும் தாழ்விடமாட்டார்கள். மரத்தைத் தண்ணீர்தான் வளரச்செய்கிறது. அதனுல் மரக்கட்டைகளைத் தண்ணீர், தன் மேற்புறத்திலேயே வைத்துத்தாங்குகின்றது.

வஸ்திரமே! (ஆடையே!) உன்னை சற்சனமென்று நினைக்கிறேன். ஏனெனில், நீ எல்லாவுலகத்தினருக்கும் உதவிபுரிகின்ருய். உனது தோற்றமே குணங்களில்தான். எல்லோருடையவும் இரகசிய(மான பாக)த்தைக் காப்பதே உனது தொழில்.

குறிப்பு:— இதிலும் சிலேடை. "குணமயீ" என்னுமிடத்தில் குணம் என்னும் சொல் ஆடை நெசவுக்கான நூல்களையும் நற்குணங்களையும் உணர்த்தும். அவ்வாறே 'குஹ்யம்' என்னும் சொல்லும் ஆண்–பெண் குறிகளையும் அவரவருடைய இரகசியமான வரலாற்றையும் குறிக்கும். முதலில் கூறிய பொருள் ஆடைக்கும், இரண்டாவது பொருள் சற்சனனுக்கும். (எசு)

சற்சனங்களுடையவும், ஆறுகளுடையவும், கார்முகில்களுடையவும், கனி நிறைந்த மரங்களுடையவும், 'ஜீவனம்" எல்லோருடையவும் தாபத்தைத் தொலைத்து உதவிசெய்ய வல்லது.

குறிப்பு:— இங்கும் சிலேடை. "ஜீவனம்" என்னும் ஒரே சொல், மேற்கூறிய நான்கு இனத்துக்கும் ஏற்றவாறு பொருள்படும். சற்சனங்கள் விஷயத்தில், உயிருடன் வாழ்தல் என்றும்; ஆறுகள்–மேகங்கள் இவற்றின் விஷயத்தில் தண்ணீர் என்றும்; கனிகளுள்ள நிழல் மரங்களின் விஷயத்தில் உயிர் வாழுதல் என்றும் தக்கவாறு பொருள்கொள்ளவேண்டும். அவ்வாறே, தாபம் என்னும் சொல்லும் சற்சனங்கள் விஷயத்தில் மனக் குழப்பத்தையும், ஆறுகள்–மேகங்கள்

महान्त एव महतां मानं कुर्वन्ति नेतरे ।
धत्ते शीर्षे शिव श्चन्द्रं राहु र्गलितु मिच्छति ॥ ७९ ॥

सन्मर्त्यानां सुमनसां जनामोदप्रदायिनाम् ।
वासो वा मूर्ध्नि लोकस्य वने वा शोषणं तथा ॥ ८० ॥

भार्या नुकूला तनयाश्च वश्याः
लक्ष्मीः स्थिरा नित्य मरोगता च ।
भक्तिः शिवे धर्मपरा च बुद्धिः
एतत्तु लभ्यं बहुपूर्वपुण्यैः ॥ ८१ ॥

इति सज्जनपद्धतिः ॥

—கனி மரங்கள் இவற்றின் விஷயத்தில் வெப்பம்—விடாய் இவற்றையும் உணர்த்தும். (எஎ)

துற்சனர்களும் நல்லோர்களுடைய சேர்க்கையினால் நல்ல அறிவைப் பெறுகின்றனர். எள்ளின் மேல் வைக்கப்பட்ட மலர்களால் எண்ணை நறுமணம் பெறுகின்றது. (எஅ)

பெரியோர்களைப் பெரியோர்களே போற்றுவர். ஈனர்கள் அல்ல. (ஈனர்கள் பெரியோர்களைப் பழிப்பரேயன்றி, போற்றார்) சந்திரனை, சிவபெருமான் தலையில் தாங்குகிறார். ஆனால் இராகு, விழுங்கிவிட முயற்சிக்கின்றான். (எகூ)

நன்மக்களும் நல்ல மலர்களும், மக்களுக்கு ஆமோதத்தை (மகிழ்ச்சியை—நறுமணத்தை)த் தருபவர்கள். அந்த நன்மக்களுக்கும், நறுமலர்கட்கும் இரண்டு விதமான இயல்பு உண்டு. ஒன்று:- உலகினரால் தலைமேல்தாங்கிப் போற்றப் படுதல். மற்றொன்று காட்டிலேயே உலர்ந்து மடிந்துவிடுதல். (அ0)

ஒற்றுமையான மனமுள்ள மனைவியும், அடக்கமுள்ள பிள்ளைகளும், நிலைபெற்ற செல்வமும், நித்தமும் நோயற்ற வாழ்வும், சிவனிடத்தில் பக்தியும், தருமத்திலேயே ஊன்றிய சிந்தனையும், இவையெல்லாம் முற்பிறவிகளில் சேமித்து வைக்கப்பட்ட மாபெரும் புண்ணியத்தினாலேயே கிடைக்கக்கூடியவை. (அக)

சற்சன பத்ததி முற்றும்.

अथ दुर्जनपद्धतिः ॥

नीचो न मान्यते शश्वद्यावत्कार्यं तु मान्यते ।
गोमयस्य गणेशत्वं वर्तते स्नपनावधि ॥ ८२ ॥

नीचस्य महतो नाम स्थापितं चेत् फलं किमु? ।
भेकस्य वानरस्यापि वर्तते हरिनामता ॥ ८३ ॥

भेक! त्वां दुर्जनं मन्ये सदाजलनिवासिनम् ।
नानारवैः कटुतरैः रटन्तं श्रुतिदुःखदैः ॥ ८४ ॥

वृश्चिकस्य विषं पुच्छे दंष्ट्रायां भुजगस्य च ।
शीर्षे विषं मक्षिकायाः दुर्जनस्य मुखे विषम् ॥ ८५ ॥

शुद्धोऽप्यशुद्धतां याति तत्संपर्कात्क्षणेन तु ।
चंडालभाण्डे गांगन्तु श्वदृतौ तु पयो यथा ॥ ८६ ॥

துர்ஜன (தீயொழுக்கினன்) பத்ததி.

நீசன் எக்காலத்தும் (ஸர்வகாலமும்) கொண்டாடப்படுவதில்லை. (அவனாலாகவேண்டிய) காரியம் கைகூடும் வரையில்தான் மதிக்கப்படுகின்றான். பசுஞ்சாணம் பிள்ளையாராகப் பூஜிக்கப்படுகின்றது ஸ்னபனம் (நீராட்டம்) வரை.

நீசனுக்குப் பெரியோர்களுடைய பெயர் வைக்கப்படுவதனால் பயன் என்ன? தவளைக்கும் குரங்குக்குங்கூட "ஹரி" என்னும் பெயருண்டு! (௮௩)

தவளையே! உன்னை துர்ஜனனாகவே எண்ணுகிறேன். ஏனெனில், நீ எப்பொழுதும் நீரில் (தீயவர்கள் குழாங்களில்) வஸிக்கிறாய். மேலும் செவியைத் துன்புறுத்துகின்ற பலவகைப்பட்ட கடுமையான சத்தங்களைத் தோற்றுவித்துக் கொண்டேயிருக்கின்றாய்.

குறிப்பு:— ஜடம் என்னும் சொல் சிலேடையால் தீயவன்–நீர் இரண்டையும் குறிக்கும். (௮௪)

தேளுக்கு விஷம் வாலில். பாம்புக்குப் பல்லில். ஈக்குத் தலையில் விஷம். துர்ஜனனுக்கு முகத்தில் விஷம். (௮௫)

அவனுடைய (தீய ஒழுக்கினனுடைய) சேர்க்கையால் நல்லொழுக்க

शुद्धः कलंकिसंपर्का दशुद्धिं याति तत्क्षणात् ।
गव्यं पय स्ताम्रपात्रसंयोगा न्मधुतां यथा ॥ ८७ ॥

सर्वदा तु जले वासः स्वीया नत्सि सुदुर्बलान् ।
तस्मा दकरुणं मत्स्य! हन्यसे त्वं जनै स्सदा ॥ ८८ ॥

बर्बूरं दुर्जनं मन्ये सर्वांगावृतकण्टकम् ।
तस्मा न्नास्ति फलप्राप्ती रुणद्धि फलदानपि ॥ ८९ ॥

संभाषणं न कर्तव्यं मद्यपेन बुधैः क्वचित् ।
दुर्गंधः पूर्वमायाति संवासा त्पातकं तथा ॥ ९० ॥

[1]दुर्गुणस्य च संवासात् गुणा दोषा भवन्ति हि ।

முண்டையவனும் ஒரு நொடியில் தீயவனுகிவிடுவான் கங்கை நீர் தூய்மையானது தான். ஆனுல் சண்டாளனுடைய பாத்திரத்தில் வைக்கப்பட்டால்? அவ்வாறே ஆவின்பால் நாய்த்தோல் பையில் வைக்கப்படில்? அதுபோலவே இங்கும் கண்டுகொள்க. (அசு)

தூய்மையானவன் தீயவனுடைய சேர்க்கையினுல் அந்த க்ஷணத்திலேயே கெட்டுப்போய்விடுவான், ஆவின்பால் செம்புப் பாத்திரத்தில் சேர்ந்தவுடன் கள்ளாகுமாறுபோல. (அஎ)

எப்பொழுதும் நீரில் (தீயவர் கூட்டத்தில்) வாசம் செய்கிருய். வலிமை குன்றிய தன் இனத்தவரையே உண்கின்ருய். அதனுல்தான் பச்சமே! நீ இரக்கமின்றி மக்களால் வதைக்கப்படுகிருய். (அஅ)

உடல் முழுதும் முட்களால் (தீமையால்) மூடப்பெற்ற கருவேலமரத்தை (நான்) துர்ஜனனுகவே எண்ணுகிறேன். (ஏனெனில்) அதனின்றும் ஒரு பழத்தை(பயனை)யும் பெற இயலாது. (பயன்) பழம் கொடுக்கும் மற்ற மரங்களையும் (மற்றவர்களையும்) அது தடை செய்கின்றது. (அகூ)

அறிவுள்ளவன் ஒரு காலும் எங்கும் கள் குடிப்பவனேடு உரையாடக் கூடாது. (அவனிடமிருந்து) முதலில் துர்நாற்றம் வருகிறது. சகவாஸத்தால் பாதகமும் வீழ்ச்சியுறச் செய்யும் தீவினையும் தொடர்ந்து வருகிறது. (கூ0)

துர்ஜனனுடைய சகவாஸத்தினுல் குணங்களும் தோஷமாகிவிடுகின்றன.

---

1. இது துர்ஜனபத்ததி ஆகையால் "दुर्जनस्य" என்றே இருத்தல் வேண்டும். "दुर्गुणस्य" என்பது எழுத்துப் பிழையாக இருக்கவேண்டும். ஆதலின் "दुर्जनस्य" என்பதையே வைத்துக்கொண்டு பொருள் எழுதப்பட்டது.

திரிதோஷ ஸங்கிரகம். 140 வரும் வழி

வாதமென் பதனிலொன்றில் வாய்ந்திடுங் குணமும் பித்தம்
ஓதிய பத்துநான்கு வொன்றினிற் குணமுஞ் சேற்பங்
காகிய பதித்துரெண்டி லொன்றுமே கலந்து காணி
லாதியு மீறுமாக வதன்பெய ரறிகுவீரே. (22)

வாதத்தின் குணமே மிஞ்சி மற்றதன் குணமேதாழில்
வாதத்தை யாதியாக வைத்தீராய் வகுக்க ரோகம்
வாதத்தின் குணமே தாழ்ந்து மற்றதின் குணமுயர்ந்தால்
வாதத்தை யீறுயாகி வைப்பது மற்றதாமே (23)

திரிகுணஞ் சேர்க்கையன்றி யிருகுணஞ் சேருமேனும்
வருகுணங் கண்டு ரோகம் வகுப்பது முறைமையாகுந்
திரிகுணஞ் சேறிற் றீரா திருகுணம் நீளத்தீரு
மொருகுண மாகிற்றீரு மெனமுனி யுரைத்தவாறே. (24)

இவற்றின் பொருள்கள் விளங்கவில்லை.

சுர லெட்சணம்.

சுரு திநான் முகத் தோனரு டோன்றலான்
பொரு விலாதப் பொதியப் பொருப்பினு
னுரி யயாயுள் மறை தெரிந் தோதிய
சுர நிதானம் புவிமிசை சொல்லுவாம். (1)

சந்தனப் பொதியத் தடவரை யமர்ந்த
செந்தமிழ் பரமா சாரியர் பதங்கள்
சிரமேற் கொள்வது திகழ்தமிழ் பொருட்டே. (2)

கயிலையங் கிரியில்வாழுங் கரைகண்டர் பண்டோர்கால
மெயிலுடைப் பிரசாபதிதன் னியற்கையை யழித்தஞான்றுந்
துயிலிடை யோகமெய்தித் தூரந்தா ருகுமெவ்வை
அயில்மதன் கணையால் நெற்றி வெடித்தழல் சுரமதாமே. (3)

(இ-ள்) பிரும்மாவின் அருளினால் தோன்றியவரும், பொதிகைமலையில் வாழுபவருமான (அகஸ்தியர்) ஆயுர்வேத முறைகளைக் கற்றுச் சொன்னபடி சுரநிதானத்தைப் பகருவோம்.

சந்தனக் காடுகளடர்ந்த பொதிகைமலைச் சாறலையடைந்த செந்தமிழுக்கு ஆதியான ஆசாரியார் (அகஸ்தியர்) பாதங்களை சிரஸில்வைத்து வணங்குவோம்.

கைலாஸபதியான பரமசிவன் முன்னம் தக்ஷப்பிரஜாபதி செய்த யாகத்தை அழிப்பதற்கும், தான் யோகம் (தபஸ்) செய்கையில் அழிக்கவந்த

மன்மதனின் கணையை எரிப்பதற்கும் காரணமான மூன்ருவது நெற்றிக்கண்ணி லிருந்து தோன்றிய நெருப்பே சுரமாயிற்று.

சுரம் வரக் காரணங்கள்.

பண்டியில் மலத்தினுலும் பழகிய சீதத்தாலும்
உண்டியிற் பொல்லாங்காலு மொண்டொடி வருத்தத்தாலும்
கண்டுயி லிலாமையாலுங் கடுகிய நடையினுலு
மிண்டிய சுவையினுலும் வெதுப்புவந் தணுகுந்தானே. (4)

(இ-ள்) மலச்சிக்கலாலும், குளிர்ச்சியினுலும், ஆகாரக் கோளாறுகளினு லும், ஸ்திரீகளின் வருத்தத்தாலும் (அதாவது போகத்தினுலும்) தூக்கம் இல்லாமையினுலும், அதிகமாக நடப்பதனுலும், நாக்கின் சபலத்தாலும் (கண்டவற்றைச் சாப்பிடுதல்) ஜ்வரம் சம்பவிக்கும்.

இதுவுமது

கடுவெயில் மழைகளாலும் கதறிய குரலினுலும்
விடமது காந்தலாலும் வெருவிய வேகத்தாலும்
முடிமிசை யெண்ணெய் தேய்த்து முழுகியும் போகாதாலுந்
தடியடி படுகையாலும் வெதுப்பது சாருங் காணே. (5)

(இ-ள்) கடுமையான வெய்யில், மழை இவைகளில் சஞ்சரிப்பதனுலும், தொண்டை கிழியக் கத்திப் பேசுவதாலும், விடங்களின் உஷ்ணத்தாலும், தலையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தும் எண்ணெய் போகாததாலும், தடியினுல் அடிபடுவதாலும் சுரம் உண்டாகும்.

சுரத்திற்கு வேறு பெயர்கள்

சுரமதே கனலதாகுஞ் சுரமதே தோஷமாகுஞ்
சுரமதே சோகமாகுஞ் சுரமதே மேகமாகுஞ்
சுரமதே கபமதாகுஞ் சுரமதே சாரமாகுஞ்
சுரமதே தாகமாகுஞ் சுரமதே வரட்சியாமே. (6)

சுரமதே இரத்தமாகுஞ் சுரமதே நீரதாகுஞ்
சுரமதே சீயுமாகுஞ் சுரமதே மச்சையாகுஞ்
சுரமதே கணமதாகுஞ் சுரமதே சீதமாகுஞ்
சுரமதே இருமலாகுஞ் சுரமதே சயமதாமே. (7)

சுரமதே பொருமலாகுஞ் சுரமதே சூலையாகுஞ்
சுரமதே சொரிவதாகுஞ் சுரமதே விரணமாகுஞ்
சுரமதே பித்தமாகுஞ் சுரமதே வாதமாகும்
சுரமதே யீளையாகுஞ் சுரமதே யிளைப்புமாமே. (8)

சுரமதே நடுக்காலத்தில் சுரமதே நாளின் மத்தி
சுரமதே (நடுவில்) நாடி சுரமதே பிறையின் மத்தி
சுரமதே வாதபித்தந் தோன்றிய சிலேத்மத்திற்கு
மூறமதா மென்ன முன்னோர் வோதிய வேதந்தானே. (9)

(இ-ள்) கனல், தோஷம், சோகம், மேகம், கபம், சாரம், தாகம், வறட்சி, இரத்தம், நீர், சீழ், மச்சை, சுணம், சீதம், இருமல், சயம், பொருமல், சூலை, சொறிவு, விரணம், பித்தம், வாதம், ஈளை, இளைப்பு, நடுக்காலம், நாளின் மத்தி, நடுவில் நாடி, பிறையின் மத்தி, வாத பித்த கபங்களுக்கு ஆதி எனப் பலவாருகப் பெயர் பெறும். அதாவது எல்லா நோய்களிலும் ஜ்வரம் முக்யமாகக் காணும் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

4448 வியாதிகளுக்கும் உஷ்ணமே காரணம்.

சொல்லிய வாதபித்தச் சிலேற்பனத் தொகுதியாலே
அல்லல்செய் வியாதிநாலா யிரத்துநா னூறுமப்பால்
எல்லையாம் நாற்பத்தெட்டு வியாதிக்கு மிறையேவெப்பு
நல்லியல் பாகமுன்னோர் நாடியே யுரைத்ததாமே. (10)

(இ-ள்) வாத, பித்தம், கபம் முதலான தோஷங்களினாலுண்டாகும் 4448 வியாதிகட்கும் காரணமாகவுள்ளது உஷ்ணமேயாகும்.

சுரங்களின் பொதுப் பிரிவுகள்.

ஆகுமிச் சுரந்தான் வாத பித்தமை யதன்தோற் றத்தால்
மேவியே யெட்டெட்டாக்கி விரிந்திடு மென்பார் முன்னோர்
வாகட மமைத்துச் சாத்தியா சாத்திய மறுங் குணங்கள்
பாகுடன் மருந்துதானும் பகர்ந்தனர் பரிந்து தானே (11)

(இ-ள்) வாத, பித்த, கபம் இவைகளின் பேதத்தால் எட்டெட்டு வகையாகும். இவைகளின் சாத்தியா சாத்யங்களையும் கூறி மருந்துகளும் வாகடத்தில் கூறியிருக்கின்றனர்.

சுரங்களின் ஸாத்யா ஸாத்யம்.

தானமாம் வாதந்தன்னி லிருபது தழல்சேர் பித்த
மூனமி லறுநான்காகு மறுகப மிருபதாகும்
பானலங் கண்ணாய் கேளாய்! பரிந்துறு வாதந்தன்னி
லீனமா மெட்டுவெப்புச் சாத்திய மென்னலாமே. (12)

என்றிடும் பித்தந்தன்னி லியற்றிரு பத்துநான்கில்
ஒன்றிய பத்து வெப்பு மேவிய சிலேற்பனத்தில்
ஒன்று மொன் பதுவுந்தானே சாத்திய முண்மையென்று
மன்றலங் குழலிக் கீசன் வகுத்துரை செய்தவாறே. (13)

(இ-ள்) வாதத்தில் 20 வகைச் சுரங்களும், பித்த தோஷத்திஞல் 24 வகைச் சுரங்களும், கப தோஷத்திஞல் 20 வகை சுரங்களும் ஏற்படுகின்றன. இவைகளுள் வாதத்தில் 8 வகையும், பித்தத்தில் 10 வகையும், கபத்தில் 9 வகைகளும் சாத்யமாகும். மற்றவை அஸாத்யம்.

சுரம் 64க்கும் பெயர்கள்.

சாற்றுமா யுள்மறையி ருன்றெரிந்து முன்னுரைத்த
போற்றுசுர சங்கை புகல்வதே — தோற்றிய
வாதபித்த சிலேத்மசுரம் வாதப்ப யித்தியசுரந்
தீதறுவா தசிலேத்துமசுர — மோதரிய.
பித்தச்சி லேத்மசுரம் பித்தத்தில் வாதசுரம்
ஒத்தகப வாதச் சுரமுடனே — பத்தியாஞ்
சேற்பன பித்தசுரஞ் சேர்சந்நி வாதசுரம்
மாற்றிய நான் கதீனேடுந் — தோற்றிய
பூதப் பிரேதசுரம் புகலறிய தாகசுர
மாதியி லமர்ந்த ஆசிர்ணசுரஞ் — சீத
வேயர்வையொரு மூன்றுவிர லத்தியிற் சுரமூன்று
வுறுசோக மதிநான்கு — பெயரும்
அதிகாரம் நான்கா மதில்மாற லோர்நான்கு
மானசீத மொரு நான்கும் — விதமான
ஆகீக விரணசுரம் ஆகிய மோகச்சுரம்
வேகசயங் கள்வித நான்கு — மோக.
உதிரியொரு மூன்றுடன் கரபாத தாகம்
பெருகுபிர தரத்தின் பெயர்மூன்று — மருவும்
விடச்சுர மிரண்டு மிகுவாந்தி மேகச்
சுரங்கண்டு தன்னிற் சதுர்விதமாந் — திடப்பெரிய
தோடசுர மாந்த சுரமறுபத் துநான்கு
மேடனைய மூன்றி லியம்பக்கேள் — கொடிய
வாதத்தி நாலைந் தறுநான்கு பித்தத்தி
லோதுகப மைநான்கு ரைத்திடுகிற் — றீதகல.
வாதத்தி ராறுமறு பித்தத்தோர் பத்தஞ்
சாதியசேத் மம்பத்துஞ் சாத்தியமாங் — காதிய
வூதையி லெட்டுமுறு பித்தம் பன் னென்கு
மேதமுறு கபத்தி லீரைந்து — மோதும்
சாத்திய மென்றே யறிந்துணர்ந்து கொண்டால்
விசித்திர மாமாயுள் மறைக்கு. (14)

இதன் பொருள் :—

1.	வாதசுரம்	
2.	பித்தசுரம்	
3.	சிலேத்மசுரம்	
4.	வாதபித்த ஜ்வரம்	
5.	வாதகப ஜ்வரம்	
6.	பித்தகப ஜ்வரம்	
7.	பித்தவாத ஜ்வரம்	
8	கபவாத ஜ்வரம்	
9	கபபித்த ஜ்வரம்	
10–13.	சந்நிபாத ஜ்வரம்	4
14.	பிரேத ஜ்வரம்	
15.	தாக ஜ்வரம்	
16.	அசீர்ண ஜ்வரம்	
17–19.	அத்தி ஜ்வரம்	3
20–23.	சோக ஜ்வரம்	4
24–27.	அதிஸார ஜ்வரம்	4
28–30.	சீத வியர்வை ஜ்வரம்	3
31.	விரண ஜ்வரம்	
32–34.	மோக ஜ்வரம்	3
35.	கரபாத தாக ஜ்வரம்	
36–38.	பிரதர ஜ்வரம்	3
39–40.	விஷ ஜ்வரம்	2
41–44.	வாந்தி மேக ஜ்வரம்	4
45.	தோஷ ஜ்வரம்	
46	மாந்த ஜ்வரம்	
47–50.	மாறல் ஜ்வரம்	4
51–54.	சீத ஜ்வரம்	4
55–58.	சய ஜ்வரம்	4
59–62.	ஆகேகவிரண ஜ்வரம்	4
63	பூத ஜ்வரம்	1

பொதுவாக

வாதத்தினுல்	20	வகைகளும்
பித்தத்தினுல்	24	,,
கபத்தினுல்	20	,,

உண்டு. இவற்றுள்

வாதத்தில்	12ம்
பித்தத்தில்	10ம்
கபத்தில்	10ம்

ஆக 32 வித ஜ்வரங்கள் சாத்யம்.

மற்ற வாதத்தில்	8	வகைகளும்
பித்தம்	14	,,
கபம்	10	,,

அசாத்யமாகும்.

சுரம் 64ன் குணாகுணங்கள்.

வாதஜ்வரக் குறிகள்.

வாதசுரத்தின் குணங்கேளாய் மயிர்க்கூச்செரியு முடல் குளிரும்
போதநடுக்குங் கைகால்கள் பொறுத்துத் தோறு முளைவாகும்
பேதமுகமு மினுமினுக்கும் புறந்தா ழுதைத்து வெளுத்திருக்கு
மூதைமிகுமே மலம்வாயு வுடனே நீருஞ் சிறுத்திடுமே. **(1)**

(இ-ள்) தேகத்தில் மயிர்க்கூச்சலுண்டாகும். குளிரும் உண்டாகும். கைகால்கள் நடுக்கும். மூட்டுகள்தோறும் குடைச்சல் ஏற்படும். முகம் மினுமினுக்கும். புறந்தாள் வீங்கும். வெளுப்புமுண்டாகும். மலம், வாயு, சிறுநீர் இவைகள் குறைந்துபோம்.

வாத பித்தச்சுர லக்ஷணங்கள்.

வாதபித்த ஜ்வரமானல் வருத்துங்குணத்தை மானே கேள்
நாதமடைத்தே இரைச்சலுமாம் நாவுங்கண்ணு மஞ்சணிக்கு
மூதை மிகுந்து விடாச்சுரமா மோங்காரிக்குங் கண்டூங்குஞ்
சீதமிகுந்து பிரமையுமாஞ் செய்யுங் குணத்தைத் தேர்ந்தறியே. **(2)**

(இ-ள்) காதில் இரைச்சலுண்டாகும். நாக்கு, கண்கள் இவை மஞ்சள் நிறமடையும். சுரமும் விடாமல் அடிக்கும். ஓக்காளம் உண்டாகும். கண்கள் தூங்கும். உடம்பில் குளிர்ச்சி ஏற்பட்டு மயக்கமும் உண்டாகும். இவைகள் வாதபித்த ஜ்வர லக்ஷணங்கள்.

சீத வாதஜ்வர லக்ஷணங்கள்.

சீதவாத சுரமானல் செய்யுங் குணத்தைச் செப்புவன் கேள்
மோதி நடுங்கும் விரைவிரைக்கு மூறிவிக்கல் நெட்டியுமாம்
பேதமலமுஞ் சலமடைத்துப் பிதறுமறிவாய்ப் பேசவருங்
காதுஞ்சுரமும் வியர்வையுமா மிந்தக்குணங்கள் கண்டறியே. **(3)**

(இ-ள்) உடலில் நடுக்கமேற்படும். ஆண்குறி எழும்பும், விக்கல் உண்டாகும். அடிக்கடி நெட்டிவாங்குவான். மலமும் மூத்திரமும் அடைத்துப் போம். வாய்க்குவந்தபடி பேசுவான். சுரம் அடிக்கும். வியர்வையும் அதிகமாக வெளியாகும். இவை சீதவாதக் குறிகளாகும்.

வாத அத்திஜ்வர லக்ஷணங்கள்.

அத்தியி லூதைவிம்மி யடிக்கடிசுரங் காயாது
பத்தியஞ் செரியாதாகும் பலபல தாகமுண்டாஞ்

சித்தமு மயங்கிக் கைகா லோய்ந்திடுந் தேய்ந்துகாட்டு
மொத்தவிக் குணங்கள் வாத அத்தியிற் சுரமென்றோதே. (4)

(இ-ள்) எலும்புகளில் சிலுசிலுப்பு உண்டாகும். அடிக்கடி சுரம் அடிக்காது. தாகம் ஏற்படும். அறிவு மயங்கும். கை, கால்களில் ஓச்சலுண் டாகும். இளைத்துப்போம். இவை வாத அஸ்திஜ்வர லக்ஷணங்களாகும்.

ஆகிக வாதஜ்வர லக்ஷணங்கள்.

தாகமாய் மோகமுண்டாய் மலமொடு சலமுந் தங்கித்
தோகையே விரைவிறைத்துத் துரப்புட னிளைப்புமாகி
வேகமாயெழுந்து வீழுஞ் சிரத்திடி மிகவுங் காணும்
ஆகிக வாதந் தன்னிற் சுரமென வறிகுவீரே. (5)

(இ-ள்) தாகம், மயக்கம் இவைகளேற்படும். மலம், மூத்திரம் இவை கள் கட்டிவிடும். ஆண்குறி எழும்பும். தேகம் இளைக்கும். நடமாடுவதற்கு இயலாது. தலைவலியுண்டாகும். இவை ஆகிக வாதஜ்வர லக்ஷணங்களாகும்.

வாத கணச்சுர லக்ஷணங்கள்.

நீரிடுஞ் சுர மென்மேலும் நீரொடு மலமுஞ் சிக்கிக்
கூறிடும் நாக்குத் தொண்டை குதங்களும் விரிந்து புண்ணும்
வேறுநீர்த் தாகந் தாபம் வெப்புறு கழிச்சலுண்டாங்
கூறிய குணங்கள் வாத கணச்சுர மென்று சொல்லே. (6)

(இ-ள்) சுரம் வரவர அதிகரிக்கும். சிறுநீர், மலம் இவை கட்டிவிடும். நாக்கு, தொண்டை, ஆசனவாய் இவைகள் விசாலித்துப் புண்போலவாகும். அதிகமான நாவறட்சி, தேகத்தில் எரிச்சல், இவைகளும் உண்டாகும். சிற்சில சமயங்களில் கழிச்சலும் உண்டாகும்.

4 நாள் மாறல் ஜ்வரம்.

வாதத்திற் சீதஞ் சேர்ந்து குளிர்சுர மதிகமாகித்
தாதித்தே வுடம்பு நொந்து சந்துதா மூளைந்து நைந்து
பேதத்தா லிருமிச் சீறி வாந்தியாய் பிரமையுண்டா
மீதுத்த நாலுநாளை மாறலென் றியம்பலாமே. (7)

(இ-ள்) வாதமும் குளிர்ச்சியும் அதிகரித்துக் குளிருடன் ஜ்வரம் உண்டாகும். உடம்பில் குத்துவலியுண்டாகும். மூட்டுகள், தாள், இவைகளில் குடைச்சலேற்படும். விட்டுப்போவதைப்போன்ற உணர்ச்சியும் உண்டாகும்.

இருமல், வாந்தி, மயக்கம் இவைகளும் ஏற்படும். இவைகள் நாலு நாள் மாறல் ஜ்வரம் என்று தெரிந்துகொள்ளவும்.

குறிப்பு:— இந்த வகை குளிர் ஜ்வரம் நான்கு நாட்களுக்கொருமுறை வீசியடிக்கும். பின்னர் தானாக குறைந்துவிடும்.

மாந்த ஜ்வரக் குறிகள்.

. பொருமியே கழிச்சலுண்டா மலமது புளித்து நாறு
முறுகவே சுரமுங் காயும் வாந்தியு மூச்சுமுண்டாம்
பெருகவே தாகந் தாபம் மயக்குறும் பிரமையுண்டா
முருகவிழ் குழலாய்! மாந்தச் சுரமென மொழியலாமே. (8)

(இ-ள்) வயிறு பொருமும். கழிச்சலும் உண்டாகும். மலம் புளிப்பு வாடையடிக்கும். சுரம் காயும். வாந்தி, மேல்மூச்சுயிவைகளதிகரிக்கும். தீராத தாகம், எரிச்சல், மயக்கம் இவைகளுமுண்டாகும். இவை மாந்த ஜ்வரக் குறிகளாகும்.

மந்த ஜ்வரக் குறிகள்.

அக்கினி மந்தமாகு மலமொடு சலமடைக்கும்
விக்கலு முழலைவாந்தி யுடன்சுரம் விடாமற் காயும்
புக்கிய முகங் கனக்கும் வயிறது பொருமிக் காட்டு
மிக்குணம் வாதமந்தச் சுரமென விசைக்கலாமே. (9)

(இ-ள்) அக்கினி மாந்த்யம் உண்டாகும். மலம் மூத்திரம் இவை போகாது. விக்கல், எரிச்சல், வாந்தி இவைகளுடன் ஜ்வரம் விடாமற்காயும். முகத்தில் பாரவுணர்ச்சி உண்டாகும். வயிற்றுப் பொருமலும் காணும். இவை மந்த ஜ்வரக் குறிகளாம்.

சுரவதிஸாரக் குறிகள்.

பொருமலு மிரைவுமாகி யேப்பமும் புளித்து நாறி
மெரிவுரு சுரமுங்காயு மிருகைகால் குளிர்ந்து காட்டும்
பருகிடுந் தண்ணீர் வாங்கும் வெளுத்திடு முகமும் பாண்டுஞ்
சுரவதி ஸாரமென்று சொல்லலாஞ் சொல்லலாமே (10)

(இ-ள்) வயிறு பொருமல், இரைச்சல், நாற்றத்துடன் புளித்து ஏப்பம், கைகால்களில் குளிர்ச்சி, விடாத ஜ்வரம், அடிக்கடி தண்ணீர் தாகம், முகம், தேகம் முதலானவைகள் வெளுத்துப் போதல் இவை அதிஸார ஜ்வர லக்ஷணங்களாம்.

குறிப்பு:— வயிறுபேதியுடன் கூடிய ஜ்வரத்திற்குத்தான் இப்பெயர். ஆனால் மேற்கூறிய செய்யுளில் அதிஸாரத்தைக் குறிப்பிடவில்லை.

அசீர்ணச்சுரக் குறிகள்.

பசியின்றி மந்தமாகும் உதரமும் பலகால் விம்மும்
வசையறக் கனத்து நிற்கும் மந்தமே பற்றிக் காயுந்
தசையினை யுநக்குமூதை தங்குமிக் குணங்கள் கண்டால்
அசிரணச் சுரமிதென்று சொல்லலா மனங்க ளுளே. (11)

(இ-ள்) பசி இராது. வயிறு மந்தித்துப்போம். வயிற்றுப் பொருமலும் உண்டாகும். பார உணர்ச்சியும் உண்டாகும். உடலில் ஜ்வரம் காணும். தசைகளில் வலியுண்டாகும். இவை அசீர்ணஜ்வர லக்ஷணங்களாம்.

உதிரிவாதச் சுர லக்ஷணங்கள்.

உடம்பது மிகவும் வீங்கு மிடறடைத் தூதை விம்மும்
விடம் படு சுரமுங் காயும் விசிறிடுங் கரணம் போல
முடங்கிடும் பொருத்துத் தோறு மூர்ச்சையோ டிரத்தங்காணுந்
திடப்படு முதிரிவாதச் சுரமிதாமென்று செப்பே. (12)

(இ-ள்) உடம்பு அதிகமாக வீங்கும். விடாத ஜ்வரமடிக்கும். சிற்சில சமயங்களில் ஜ்வரம் அதிகமாகும். மூட்டுகள் தோறும் வலியுண்டாகும். மயக்கம் ஏற்படும். சிற்சில சமயங்களில் இரத்தமும் வெளிவரும்.

அஸாத்யம் எட்டின் குணங்கள்

ஊதையும் கபமும் பொங்கி வாந்தியு மூச்சுமுண்டாய்
பாதமுங் கரமும் வீங்கி யிருமலோ டிளைப்பும் பற்றி
நாதமுமடைத்துக் காது நடுக்கலுஞ் சுரமுமாகில்
வாதை செய் வாதசிலேத்ம சுரமென வகுக்கலாமே. (13)

(இ-ள்) கொழுப்பும், கபமும் அதிகரித்து வாந்தியும், பெருமூச்சும் ஏற்படும். கால்கள், கைகள் முதலான உறுப்புகள் வீங்கும். இருமல், தேக இளைப்பு, காது கேளாமை, நடுக்கல், ஜ்வரம், முதலான குறிகளும் காணும். இவைகள் வாதகபச் சுரத்தின் குறிகளாகும்.

சந்நிபாத ஜ்வரக்குறிகள்.

சிரமுமிடிக்கும் மலங்கடுக்கும் சீறுமிருகும் வாந்திக்குங்
கரமும் காலும் நிலத்தடிக்கும் கண்ணுமுகமு மினுமினுக்கு
முரமுந் துடிக்கும் நாவறளுமோய்வில் ஜ்வரமும் பிரமையுமாஞ்
சரீரம் நடுங்கித் தளர்ச்சி யுண்டாஞ் சன்னிவாதச் சுரமிதுவே (14)

(இ-ள்) தலைவலி, மலம் போகையில் கடுப்பு வலி, இருமல், வாந்தி, கைகால்களை பூமியில் அடிக்கடி அடித்தல், கண்கள், முகம் முதலான உறுப்பு

களில் மினுமினுப்பு, மார்பில் துடிப்பு, நாவறட்சி, ஜ்வரம், மயக்கம், சரீரத்தில் நடுக்கம், சரீரச் சோர்வு முதலான குறிகள் சந்நிபாத ஜ்வரத்தில் காணும்.

பூதஜ்வரத்தின் குணங்கள்,

பூதசுரத்தின் குணங் கேளாய் புலம்புங்கோபித் தேபேசும்
சீதத்துடனே சுரங்காயும் சீறு முகமுமுடல் கனக்கும்
பேதப்படவே வார்த்தையுமாய்ப் பெருமூச்சுடனே தலை நடுக்கு
முதை மிகுந்து சிரமிடிக்கு முணவும் வெறுக்க மயங்கிடுமே. (15)

(இ-ள்) தன்னையறியாமல் புலம்புவான், பேசுவான், குளிர் காய்ச்சல் உண்டாகும். முகம் கோபிக்கும், உடல் கனக்கும், வார்த்தைகள் வித்யாஸமாகப் பேசுவான், அடிக்கடி பெருமூச்சுவிடுவான், தலை நடுங்கும், தலைவலி யுண்டாகும், ஆகாரத்தில் வெறுப்பு உண்டாகும்.

பிரேத ஜ்வரத்தின் குறிகள்.

பிரேத ஜ்வரத்தின் குணந்தன்னைப் பேசக்கேளாய் பேய்வலையே
சீறிச் சுரமாம் வயிறிழியுஞ் சிரமுமிடிக்கும் நடுக்கலுமா
மூறுமுடம்பு கனதண்டா யுளையுங் கைகால் போட்டாப்போல்
மீறு மயக்க முடன்வியர்க்கு மேவுங்குணங்க ளறிவீரே. (16)

(இ-ள்) அதிகமான ஜ்வரம் ஏற்படும். வயிறு கழிச்சலும் இருக்கும் தலைவலி, நடுக்கம், உடம்பில் பார உணர்ச்சி, தேகத்தில் உளைச்சல், கை கால் போட்டது போலாதல், மயக்கம், அதிகமான வியர்வை முதலான குறிகளும் காணப்படில் அது பிரேத ஜ்வரத்தின் குணங்களாகும்.

மாங்கிஷப்பிரதானவாதத்தின் குறிகள்.

கதித்திடுஞ் சுரமென்மேலுங் காந்திடு முகமுங் கண்ணும்
பிதிர்த்திடக் குத்தி நோவாம் பின்பிட்டி சந்து மட்டுங்
கொதித்திடுஞ் சதைதிரண்டு குருதியு மேகங் காலும்
விதிர்த்ததிமாங் கிஷப்பிரதா னவாதச் சுரமா மென்னே. (17)

(இ-ள்) ஜ்வரம் மேலும் மேலும் அதிகமாகும். முகமும் கண்ணும் எரியும். உடலில் குத்துவலி உண்டாகும். மூட்டுகளிலும் வலியுண்டாகும். சதை திரண்டு, இரத்தமும் அதிகரிக்கும். இவை மாங்கிஷப் பிரதான வாதத்தின் குறிகள்.

வைசூரி ஜ்வரத்தின் குறிகள்.

குரலடைத் திருமலுண்டாங் குவளையு மிகுந்து காட்டுஞ்
சிரபத மட்டும்வீங்கித் தினவுறுங் துவரைக்காய் போ

லரமென வசடு (சேர்ந்து) யதுவுரிந் தூரிந்து வீழும்
சுரமுறு மாங்கிஷ ரோக வைசூரியாஞ் சுரமிதென்னே. (18)

(இ-ள்) குரல் கம்மும். இருமலேற்படும். குவளை வீங்கிப்போம் முகம் வீங்கும். அரிப்பு ஏற்படும். துவரங்காயைப்போன்ற தடிப்புகள் உடலில் காணும். சிறிது நாட்களில் அது உரிந்துபோம். இவை மாங்கிஷரோக வைசூரி ஜ்வரமாகும்.

சோகஜ்வர லக்ஷணங்கள்.

தாகமுந் தாபமுண்டாய் மலமொடு சலமுங் கட்டி
ஏகுநீர் சிவந்து வீழுஞ் சுரமிடை விடாமற்காயு
மோகமாய் புறந்தாள் வீங்கு முபாதியே காணும் வாதஞ்
சோகமாஞ் சுரமிதென்று சொல்லலாஞ் சொல்லலாமே. (19)

(இ-ள்) நாவறட்சி, உஷ்ணம் இவைகளேற்படும். மலமும், மூத்திரமும் போகாது. சிறுநீர் இறங்கினும் சிவந்து வீழும். ஜ்வரம் இடைவிடாமற் காயும். புறந்தாள் வீங்கும். மயக்கமுண்டாகும். மிகவும் வேதனையளிக்கும். இவை சோக ஜ்வர லக்ஷணங்களாகும்.

விரணவாத ஜ்வரக் குறிகள்.

பாரொரு விடங்களாலும் படுவனும் பருவினாலும்
மீறிடுஞ் சுர மென்சோலும் யெடுபிடியென்று வீழு
மாறிடா திடிக்கும் நெற்றி சுரம் பிடர்வளைய வாங்குங்
கூறிய விரண வாதச் சுரமிதா மென்று கூறே. (20)

(இ-ள்) விஷங்கள் தேகத்தைத் தாக்குவதனுலும், படுவன், பரு, முதலியவைகள் உண்டாவதனுலும், ஜ்வரம் மேன்மேலும் அதிகரித்து "எடு, பிடி" என்று கூக்குரலிடுவான். இடைவிடாமல் பொட்டில் வலியுண்டாகும். ஜ்வரம், பிடரிவலி, இவைகளும் காணும். இவை விரணவாதச் சுரக் குறிகள்.

பித்த ஜ்வரம் 24ல் சாத்யம் 14ன் குணம்

பித்த ஜ்வரத்தின் குணங் கேளாய் பிதற்றிப் பேசும் வாய் வெருவு
மொத்த நயனஞ் சிவந்திருக்கு மூடேவயிறு கழிந்து வரு
மெத்தத் தண்ணீர் தாகிக்கும் வெதும்பிநாவு தடுமாறுஞ்
சுத்தியடங்கு முகங் கறுக்குஞ் சொல்வாய் மிணரு புண்ணுமே. (21)

(இ-ள்) சுரவேகத்தினுல் பிதற்றுவான். வாயைக் காரணமின்றி மெல்லு வான். கண்கள் சிவந்துபோம். வயிறு கழிச்சலேற்படும். அதிகமான நாவறட்சி

யுண்டாகும். நாக்கில் வேக்காளமுண்டாகும். பேச்சு தடுமாறும், முகம் கறு நிறமாகும். இவை பித்த ஜ்வரக் குறிகள்.

பித்தகபச் சுரத்தின் குணங்கள்.

பித்தச் சிலேற்பனத்தின் குணந்தன்னைப் பேசக்கேளாய்
புத்திமா ருட்டம்பண்ணிப் புகைந்திடு மிருமல் மென்மேற்
சத்திடை விடாமறகாயுஞ் சலமல மஞ்சணிக்கும்
நித்திரை தானும் வாரா உழலையும் நெருக்கமாமே. (22)

(இ-ள்) புத்தி மாருட்டம் உண்டாகும். புகைச்சலுடன் இருமலுண்டாகும். சுரம் இடைவிடாமற் காயும். மலமும், மூத்திரமும் மஞ்சள் நிறமாகும். தூக்கம் வாராது. உடலில் எரிச்சலுண்டாகும்.

பித்தவாத ஜ்வரக் குறிகள்.

அந்தப் பித்த மதுரண்டும் வாதமொன்றுஞ் சுரமானால்
முந்தக் காயும் பொருமலுமாய் மூக்கு மிகவு மஞ்சணிக்கும்
நொந்தக் குலையும் வாந்தி செய்யும் நோக்கிற் கண்ணும் வெளுத்திருக்கும்
மந்தம் பற்று மூதை மிகு வருத்துங் குணங்க ளறிவீரே. (23)

(இ-ள்) காய்ச்சலுடன் வயிறு பொருமலுண்டாகும். மூககு, முகம் இவை மஞ்சள் நிறமாகும். வாந்தி எடுக்கும். கண்கள் வெளிறிப்போம். மந்தம் உண்டாகும். இவை பித்தவாத ஜ்வரத்தின் குறிகள். (பித்தம் 2+வாதம் 1)

பித்தஜ்வர லக்ஷணம்.

நாவது உலர்ந்து மேன்மேல் நையவே தண்ணீர் வாங்குங்
கோபமாய்ச் சுரமுங் காயுங் கூப்பிடிற் போதமில்லை
பாவையே மலசலங்கள் வெதும்பிடும் பரிதாபிக்கும்
காவியங் கண்ணாய்! பித்தத் தாகுமாஞ் சுரமாங்காணே. (24)

(இ-ள்) நாக்கு உலர்ந்துபோம். அடிக்கடி தண்ணீர் உட்கொள்வான் சுரம் விடாமற் அடிக்கும். மலம் மூத்திரம் இவைகள் சிக்கலாகும். இவை. பித்த ஜ்வரக் குறிகள்.

விடமஜ்வர லக்ஷணம்.

விடமச்சுரத்தின் குணங்கேளாய் வெதும்பு மோர்பால் வியர்வையுமா
முடலை நடக்குஞ் சிரமிடிக்கு மூதைமிகுந்து வாய்வறளுங்
குடலுள் ளிறையுங் கழிச்சலுமாங் கொள்ளானந்தல் பரதாக
மிடரேசெய்யு மிக்குணங்க ளுமையாள் குரைத்தா ரிறையவனே. (25)

(இ-ள்) மோர், பால் இவைகளில் இச்சையுண்டாகும். வியர்வை யதிகரிக்கும் தேகம் நடுங்கும். தலைவலியுண்டாகும். வாயில் வறட்சியேற்படும். குடலில் இரைச்சலுடன் கழிச்சலும் உண்டாகும். அனத்தல் ஏற்படும்.

அத்திச் சுரக் குறிகள்.

பித்தமே கதித்துநின்று பலத்தையுங் குறைத்துக் கைகால்
குத்தி நொந்துறக்க மின்றிக் கொதித்திடு முதலெண்சாணும்
நித்திய முலர்ந்து நாவு நீரன்றித் தண்ணீர் வாங்குஞ்
சித்தமு மயங்கு மத்திச் சுரமெனச் செப்பலாமே. (26)

(இ-ள்) தேகத்தில் பித்தம் அதிகரித்துப் பலம் குன்றும். கைகால்களில் குடைச்சல் வலியுண்டாகும் தூக்கம் இராது. உடல் முழுவதும் அனத்தும். நாக்கு உலரும். அடிக்கடி தண்ணீர் பருகுவான். மனம் மயங்கும், இவை அத்தி ஜ்வர (அஸ்தி ஜ்வரக் குறிகளாகும்.

இதுவுமது

காந்திடு முகங்கண் ணுள்ளங் காலொடு கையு மெய்யுஞ்
சோர்ந்திடு நீர்சிவந்து சுறுக்கென வெரிந்து வீழு
ஏந்திள முலையாய்! கேளாய் இசைந்த வாய் கசக்குந் தேகம்
நோர்ந்திட நீருமத்திச் சுரமென நிகழ்த்தலாமே. (27)

(இ-ள்) முகம் அனத்தும், கண்கள், மனது இவைகளில் எரிச்சலேற்படும் கைகளும், உடலும் சோர்ந்துபோம். சிறுநீர் சிவந்து எரிச்சலுடன் வெளியாகும். வாயில் கைப்புச் சுவையுண்டாகும். தேகம் இளைக்கும். இவை அஸ்தி ஜ்வரக் குறிகளாகும்.

இதுவுமது

சாமத்தி லுவருநாவு தாகிக்கு முகங்கண் கைகால்
வேமிக்கக் கனல்போல் நெஞ்சுக் கரித்துமே லேப்பமுண்டாம்
ஆமிக்கத் தாதுநாச மாகிடும் வியர்வை சோப
நோமிக்கக் குன்மங் காச முடன் கய நோவுண்டாமே. (28)

(இ-ள்) இரவில் நாவறட்சியேற்பட்டுத் தாகமெடுக்கும். முகம், கண் கை, கால் இவைகள் நெருப்பைப்போல் தகிக்கும். நெஞ்சுக் கரிக்கும். ஏப்ப முண்டாகும். தாது க்ஷீணமுண்டாகும். அதிகமான வியர்வை, வீக்கம், வயிற்று வலி, இருமல், க்ஷயம் முதலான நோய்களை நாளடைவில் உண்டாக்கும்.

பித்தசோக ஜ்வரக் குணம்

புறங்கைகால் முகமும் வீங்கும் பெருமூச்சோ டிளைப்புவிக்க
லரைந்திடுந் தமரகம்போல் நெஞ்சொடு விலாவடிக்கும்

பிறந்திடுஞ் சுரமென் மேலும் பிதற்றிடுந் தண்ணீர் வாங்குஞ்
சிறந்த விக் குணங்கள் பித்த சோகத்தின் சுரமாம் செப்பே. (29)

(இ-ள்) புறங்கை, புறங்கால், முகம் இவைகள் வீங்கும். பெருமூச்சுடன் இளைப்பும், விக்கலும் உண்டாகும். டமாரம் அடிப்பதுபோல் நெஞ்சுடன் விலாப்பக்கங்களும் "படபட" என்றடித்துக்கொள்ளும். ஜ்வரம் இருக்கவிருக்க அதிகமாகும். பிதற்றுவான். தண்ணீர்த்தாக முண்டாகும். இவை பித்த சோகச் சுரக் குணங்களாகும்.

பித்தச்சுர லக்ஷணம்.

கொதித்தெழுச் சுரத்தின் மேலே கொண்டிடும் புசிப்பருதே
சதித்திட மந்தமாகித் தாகம்நா வரட்சி யுண்டாய்
விதித்திடு கரமும் பாதம் வெச்சன்றிக் குளிர்ந்திருக்கும்
கதித்ததி சாரபித்தச் சுரகுணங் கண்டிடாயே. (30)

(இ-ள்) ஆகாரம் சீரணியாது, மந்தம் ஏற்பட்டுத் தாகம், நாவறட்சி, இவைகளுண்டாகும். கையும் காலும் சில்லிட்டுப்போம். சுரமும் அடிக்கும். (வயிற்றுப்போக்கும் ஏற்படும்). இவை அதிஸார பித்தச்சுரக் குறிகள் ஆகும்.

பித்த மாறல் ஜ்வரக் குறிகள்.

ஒன்றைவிட் டொருநாள்சீத மெழுந்திடு முந்தக்காயுந்
துன்றிடு மிருமலூதை துரப்பொடு வாந்தி விக்கல்
மன்றினி யெழுந்து வீழ்தல் மயக்கமும் புலப்பங்காணல்
துன்றிள முலையாய் பித்த மாறலின் சுரமிதாமே. (31)

(இ-ள்) ஒரு நாள் விட்டொருநாள் குளிருடன் காய்ச்சல் வரும். இருமல், கோழையுடன் வாந்தி, விக்கல் முதலியவைகளுண்டாகும். படுக்கையிலிருந்து தூக்கித்தூக்கிப்போடும். மயக்கம், உளரல் இவைகளும் ஏற்படும். இவை பித்த மாறல் ஜ்வர லக்ஷணங்கள்.

அசீர்ணச் சுர லக்ஷணங்கள்.

கொண்டதோ ரசனம் நின்று குமட்டியே மந்தமாகி
மண்டியே சுரமுங் காயும் வயிறாதுங் கழிந்திருக்கும்
விண்டிட வலியுமுண்டாய்த் தாகமும் தாபம் விக்கல்
உண்டெனில் குணங்கள் பித்த வசீரணச் சுரமென்றோதே. (32)

(இ-ள்) ஆகாரத்தில் வெறுப்பேற்படும். குமட்டும். மந்தம் உண்டாகும்.

ஜ்வரம் அடிக்கும். வயிறு ஊதும். வயிறு கழிச்சலேற்படும் வயிற்றுவலி, தாகம், காங்கை, விக்கல் இவைகளும் காணும். இவை அசீர்ண ஜ்வர லக்ஷணங்களாகும்.

இரத்த பித்த ஜ்வரத்தின் குறிகள்.

உரத்திடுஞ் சுரத்தின் மேலே யூதையு மிருந்து விம்மும்
நெரித்திடக் குத்தி நோவாம் மேனியும் நெலிவு காட்டும்
இரத்தமா யிறங்கும் நீரும் மலஞ்சிவர் திளந்து நாறுஞ்
சுரப்பிர தரத்தின்ரத்தப் பித்தத்தின் சுரங்கள் தானே. (33)

(இ-ள்) சுரத்துடன் நெஞ்சில் கோளழை சட்டும். உடலில் குத்தல் வலி யுண்டாகும். உடலும் சோர்ந்துபோம். சிறுநீர் சிவந்து இறங்கும். மலமும் சிவப்பாக வெளியாகும். நாற்றமுமடிக்கும். இவைகள் ரத்த பித்த ஜ்வர லக்ஷணங்களாகும்.

அஸாத்ய குணங்கள்.

பித்தசீத ஜ்வர லக்ஷணங்கள்.

மத்தமே கொண்டுமெத்த மயங்கியே குளிர்ந்து காயும்
பத்தியாய் தாகந் தாபம் பயித்திய மோக மூர்ச்சை
நித்திரை யன்றிக் கைகால் நீட்டிடும் பிரமையாகும்
பித்தமேற் சீதஞ் சேருஞ் சுரமெனப் பேசலாமே (34)

(இ-ள்) மயக்கமுண்டாகும் உடல் சில்விடும். ஆனல் உள்ளூற ஜ்வரம் அடிக்கும். தாகம், எரிச்சல், மயக்கம், மூர்ச்சை, தூக்கமின்மை. கைகால்களை நீட்டிவிடுதல், தலைக் கிறுகிறுப்பு முதலான குறிகளும் காணும். இவை பித்தசீத ஜ்வர லக்ஷணங்களாகும்.

பித்தகப ஜ்வர லக்ஷணங்கள்.

சேர்ந்திடும் பித்தசேற்பச் சுரத்தினிற் குணத்தைச் செப்பிற்
காந்திடுஞ் சுரமுந் தொண்டை கட்டியே யிருமலுண்டா
மாந்திடு மிளைப்பு நாவு வெளுப்புடன் வறட்சியாகும்
பாய்ந்திடும் வியர்வை மென்மேற் பகர்ந்தவிக் குணங்கள் தானே (35)

(இ-ள்) உடல் காந்தும், தொண்டைக் கட்டுடன் இருமலுண்டாகும் தேகம் இளைக்கும். நாக்கு வெண்மையாகும். நாவறட்சியுமேற்படும். வியர்வை அதிகமாகப் பொழியும். இவை பித்தகப ஜ்வரக் குறிகளாகும்

பித்த சந்நி ஜ்வரக் குறிகள்

முகந்துறு குளிரும் பித்த மூர்ச்சையு மூமைபோல
மிகுந்துநா வறட்சி வெப்பு மேனிபுண் போலநோவாம்
பகுந்தநீர் மலஞ்சிவக்கும் பயித்தியம் பிரகோ பிக்கும்
சுகங்கெடும் பித்த சந்நிச் சுரமெனச் செப்பலாமே. (36)

(இ-ள்) முகத்தில் சிலுசிலுப்புக் காணும். மூர்ச்சையுண்டாகும். ஊமை போல் பேச முடியாது. நாவறட்சியுண்டாகும். காங்கையுடன், உடல் புண் போல் வலிக்கும். சிறுநீரும், மலமும் செந்நிறமாக வெளிப்படும். பித்தம் அதிகரிக்கும். தீங்கு விளைவிக்கும். இவை பித்தசந்நிச் சுரக் குறிகளாகும்.

சயச்சுர லக்ஷணங்கள்

சுரமுட னிருமலுண்டாந் தொண்டையும் புகைந்து காட்டிக்
கரமொடு முகமுங் கண்ணும் வெளுத்ததிற் கருத்திருக்கு
மரமென விரிந்து நாவும் வெளுத்ததிலசடு நாறும்
புரமன லெரித்தோன் சொன்ன சயச்சுர மாகும் சொன்னேன். (37)

(இ-ள்) விடாமல் ஜ்வரம் அடிக்கும். இருமலும் தொண்டைப் புகைச்சலும் ஏற்படும். கைகள், முகம், கண்கள் இவைகள் வெண்மையாகும் அல்லது கருநிறமடையும். நாக்கு மறமறத்துப்போய், வெண்ணிறமான ஆசடும் உண்டாகி நாற்றமெடுக்கும். இவை க்ஷயச்சுர லக்ஷணங்களாகும்.

வைசூரிச் சுர லக்ஷணங்கள்.

வாந்தியுஞ் சுரமு முண்டாய் மயக்கமோ டிருமலாகிப்
போந்தநல் லுடம்பு வீங்கி வயிறது பொருமிக்கொள்ளும்
மாந்தியே கிடக்கு மிக்க மலமொடு சலமுங் கட்டு
மாய்ந்து நீ யறிவாய் ரத்த வைசூரியின் சுரமிதாமே. (38)

(இ-ள்) வாந்தி, ஜ்வரம், மயக்கம், இருமல் இவைகளுடன் உடம்பு வீங்கும். வயிற்றுப் பொருமலுண்டாகும். மலம், சிறுநீர் இவை கட்டிப்போம். இவை ரத்த வைசூரி லக்ஷணங்களாகும். (வைசூரி வருவதற்கு முன்னேற்படும் குறிகள்)

கரபாதச்சுர லக்ஷணங்கள்.

எரித்திடுங் கையுங் காலு மிதழ் வெடித் தசடுகாலும்
வருந்திட வனல்போல் காயும் வாந்தியு மூச்சுமுண்டாந்

परि ज्या कवित्वांत कांहीं ॥   कवन लक्षण गंध नाहीं ॥
अन्य येक सांगतों नवायी ॥   सादर होयीं श्रवणार्थी ॥ ७१ ॥

पश्चिमे उगवेल तपन ॥   सीतत्व धरील अग्नि आपण ॥
परि एक श्लोकहीं अबद्धावीण ॥   ज्याग्रंथीं प्रवीण न देखती ॥ ७२ ॥

किंबहुना पदोपदीं ॥   अपशब्दयुक्तचि अगदी ॥
छंदो भंगा नसे अवधी ॥   नाडळे कधीं अक्षरमैत्री ॥ ७३ ॥

परंतु प्रतिश्लोकाचे ठायीं ॥   अनंत जो कैवल्यदायी ॥
पूर्ण त्याचीं नामें पाहीं ॥   न गणितांहीं पौनुरुक्त्य ॥ ७४ ॥

श्रीराम कृष्ण गोविंद ॥   वैदेहीवल्लभ नित्यानंद ॥
अरविंदनाभ मुकुंद ॥   माधव मुचुकुंद वरदमूर्ति ॥ ७५ ॥

ऐसें विमल यशें अंकित ॥   ज्यांत देवाचीं नावें भरलीं अगणित ॥
कोण्हीं वक्ता असिल्यां पंडित ॥   जें नामें अखंडित आइकती साधु ॥ ७६ ॥

आईकणार भेटल्यां सुमती ॥   आदरें श्रवण करविती ॥
उभयता नसल्यां स्वयेंचि गाती ॥   अत्यंत धाती प्रेमरसें ॥ ७७ ॥

पूर्वोक्त काकतीर्थी मज्जन ॥   जे कां न करिती सज्जन ॥
ते या हरिकथा गंगेंत आपण ॥   मांडिती स्नपन निरंतर ॥ ७८ ॥

या तेंचि मानिती पुष्कर ॥   हेंचि प्रयाग गया क्षेत्र दुष्कर ॥
हेंचि मानस सरोवर ॥   विरजे बरोबर शुद्ध अती ॥ ७९ ॥

ज्या नामकीर्त्तन नदीचे पाट ॥   विश्वतो मुख पसरोनि अफाट ॥
करिती त्रितापाचें सपाट ॥   उघडिती कपाट मोक्ष पुरीचें ॥ ८० ॥

सांचित क्रियमाण पापें दुस्तर ॥   तेचि कांठींचे तरुवर ॥
उन्मळोनि टाकिती येकंदर ॥   जे मेरुमंदर तुल्य मोटे ॥ ८१ ॥

असो साधु भोग्य नाम रत्नावली ॥   ज्या पद्यमालिकेंत गोविली ॥
तेचि धन्य कवनामृतवल्ली ॥   जन्हीं वेडदुल्ली कर्त्ता तीचा ॥ ८२ ॥

एवं देवता नामानुविद्ध ।। कविता असिल्यांहीं शताबद्ध ।।
तेचि श्राव्य परिशुद्ध ।। इतर निषिद्ध नरकदायी ८३ ।।

ज्ञान कर्माची हेचि गती ।। सांगतों आइक महामती ।।
निष्कर्म ब्रह्म परंज्योति ।। कर्माची न होती ठाणें जेथें ।। ८४ ।।

निस्तरंग समुद्रासमान ।। जे अखंड दंडायमान ।।
जेथें प्रत्यक्षादि प्रमाण ।। अणुप्रमाण न चालेचि ।। ८५ ।।

चित्तवृत्ति जे तदेकाकार ।। तें ज्ञान जाण निष्प्रकार ।।
जऱ्हीं अविद्येची मोटी थोर ।। तऱ्हीं शोभा फार नपवेचि ।। ८६ ।।

येथें म्हणसी निमित्त कायी ।। तरि अच्युत जो अमृताब्धिशायी ।।
सद्भाव नसल्यां त्याचे ठायीं ।। नव्हे ते काहीं अपरोक्ष हेतु ।। ८७ ।।

केल्यां कपिला क्षीर प्राशन ।। घडे सर्व पाप नाशन ।।
सुरापात्रस्थ तें शिवतांपण ।। ब्राम्हणपण सद्या जाय ।। ८८ ।।

कीं फलप्रद विश्वासा समान ।। जगत्रयीं नसे आन ।।
अमित्रीं योजिल्यां तो जाण ।। तत्काळ प्राण घेवोनि सोडी ।। ८९ ।।

ते विज्ञान जाल्यांही स्वयें पूत ।। हरिभक्तिवीण व्यर्थी भूत ।।
बुडवी पुन्हा मोहडोहांत ।। कोण्ही हात देणार नमिळे ।। ९० ।।

ज्ञानाची जाली जैं हे गती ।। तैं आद्यंती दुःखरूप कर्मजे अती ।।
तें हीं ईश्वराचेठायीं निगुती ।। निःसंग मती न अर्पिल्यां ।। ९१ ।।

केसें तारील सांग नरा ।। हे स्वयें मोचक नव्हे मुनिवरा ।।
परंपरेनेंचि तूं शुद्धिद्वारा ।। ज्ञानोत्पत्ति प्रकारा साधन पैं ।। ९२ ।।

ईश्वरीं न अर्पिल्यास्तव ।। सत्वशुद्धि नव्हे तिळलव ।।
मग चुकणें तुनर्भव ।। गोष्टी ते तंवं न घडेचि ।। ९३ ।।

एवं भक्तिरहित आत्मज्ञान ।। वाक्चातुर्य कर्मकोशल जाण ।।
ते वंध्यावृक्षपालना समान ।। फळ अणुप्रमाण यांचेनि नसे ।। ९४ ।।

यास्तव भगवच्चरित्रचि वर्णावें ॥ आणि श्रवणीं आकर्णावें ॥
आदरातिशयें तेंचि गावें ॥ अन्यासहीं सांगावें हेचि गुज ॥ ९५ ॥

तूं तरि महाभाग महर्षी ॥ शुद्धयशोदाम तत्वदर्शी ॥
सत्यरत नित्य होसी ॥ सर्व व्रतांसि अनुष्ठिलें ॥ ९६ ॥

तरि एकाग्र चित्तें अत्यंत ॥ उरुक्रम जो भगवंत ॥
त्याच्या दिव्यलीला अनंत ॥ आठवीं आद्यंत मनोधार्मी ॥ ९७ ॥

चित्तीं स्फुरतांचि त्या गूढ ॥ करीं दिव्य प्रबंधारूढ ॥
तेणें मुक्त होतील सर्व जड ॥ तुटोनि दृढ बंधनाचें ॥ ९८ ॥

असो लोकोद्धारास्तव ॥ वर्णीं भगवंताचें गुण वैभव ॥
ऐसें न करितां सुखाचा लव ॥ न लाभे ध्रुव तेंचि आईक ॥ ९९ ॥

देवाचा महिमा मनोरम ॥ न गुंफितां पद्यांत सुगम ॥
त्यावीण वन दुर्ग असम ॥ यांवरी उद्दाम रचाया काव्य ॥ १०० ॥

उत्कंठा धरिसी मनीं जरी ॥ तत्प्रयुक्त त्यांचीं नाम रूपें बरीं ॥
आठवल्याहीं चित्ता भीतरी ॥ सुख तिळभरी नोहे तेणें ॥ १ ॥

अनवस्थित पुन्हा बुद्धि ॥ न पावेल विश्रांति विशुद्धि ॥
येके स्थानीं स्थिर न बैसेल कधीं ॥ असेल जधीं तधि डोलायमान ॥ २ ॥

आजि केलें नर वर्णन ॥ उद्यां वाखाणावें वन ॥
तेथेंचि वरिवरी गुंतेल मन ॥ काय प्रयोजन सांग तेणें ॥ ३ ॥

जेंवि समुद्रामाजि जाण ॥ बडवता वारें तुफान ॥
तेणें नौका डोलायमान ॥ न पवे ठिकाण एकहीं कदा ॥ ४ ॥

तूं नारायणांश यथार्थ ॥ सर्वदां असती कृतार्थ ॥
परि तें नव्हे लोक हितार्थ ॥ तद्व्रणें व्यर्थ जायील वय ॥ ५ ॥

उतराया भूमीचा भार ॥ देवें धरिला कृष्णावतार ॥
ज्ञानद्वारा करूं लोकोद्धार ॥ त्वद्रूपें साचार नटला प्रभु ॥

यास्तव ऐसें न करीं बापा ॥ हरावया त्रिविध तापा ॥
संसारसिंधु तराया सोपा ॥ हरिभक्ति ताफा निर्माण करीं ॥ ७ ॥

म्हणसी पापाब्धीची पैल थडी ॥ पावावया पामरें साबडी ॥
म्या भारतरूपें सांगडी ॥ केली चोखडी लोकातीत ॥ ८ ॥

परि जनासि नसे बुद्धि सूक्ष्म ॥ तुवां त्रिविध कर्म क्रम ॥
तेथें वर्णिल्यास्तव निभ्रम ॥ पडेल भ्रम त्यांसी मोटा ॥ ९ ॥

पूर्ववासनास्वभावें उत्कट ॥ लोक हा मोटा विषय लंपट ॥
त्यासि कर्म कर्तव्यता बोधिल्यां नीट ॥ न मानील वीट कदां तेथें ॥ १० ॥

पिशाचा हातीं दिल्यां कोलित ॥ तें जैसें उठे धरें जाळित ॥
तेविं विषय भोगणें जालिया विध्युक्त ॥ तेथेंचि आसक्त होईल जग ॥ ११ ॥

आत्मा चपळ मर्कट अधींच ॥ त्यासि पाजिल्या सुरा ऊंच ॥
आणि विंचूही फणकावितां साच ॥ त्यामधेंहीं पिशाच संचरल्यां ॥ १२ ॥

मग तें असंख्य प्रकार ॥ काय काय न करी विकार ॥
कर्मानुशासनें साचार ॥ तैसा विचार घडेल जना ॥ १३ ॥

गुरूवीण जे विद्या बरवी ॥ त्यासहीं बोधेक मीनल्यां कवी ॥
मग त्याची चर्या नलगे पुसावी ॥ स्वामि गोसांवी व्यास देवा ॥ १४ ॥

निंद्य कर्म तां स्थापिलें परम ॥ हाचि मोटा तुझा अतिक्रम ॥
कां तरि त्वद्वाक्याधारें जन अधम ॥ जाला परम कर्मठचि ॥ १५ ॥

साक्षात व्यास पुरुषोत्तम ॥ तेणें कर्म कथिला प्रथम ॥
यास्तव तोचि मुख्य धर्म ॥ परत्र धर्म येणेंचि जोडे ॥ १६ ॥

तत्वज्ञ जे कां थोर थोर ॥ तैसींच वेदांत वाक्यें वैराग्यसार ॥
तेहीं काम्य कर्माचें वारंवार ॥ केल्याहीं फार निवारण ॥ १७ ॥

परि मानुनि तुझें वचन ॥ कर्ममार्गाचि थोर सनातन ॥
इतरोपदेश नव्हे प्रमाण ॥ भ्रमतील जाण सर्व ऐसे ॥ १८ ॥

एवं उपाया मूळें अपाय ॥ घडोनि आला पर्याय ॥
यास्तव तुजवरी स्थापिला अन्याय ॥ गूढाभिप्राय नेणतां नीट ॥ १९ ॥

प्रवृत्तिमार्ग निंद्य जाला तरी ॥ टाकोनि सर्व क्रियेची भरोवरी ॥
ज्ञाननिष्टाच धरावी बरी ॥ किमर्थ तरी पाहिजे भक्ति ॥ १२० ॥

ऐसें म्हणसील आपण ॥ तरि कोटींत येकचि निपुण ॥
सर्वकर्म त्यागें परिछिन्न ॥ हरिरूप स्वाभिन्न जाणूंसके ॥ २१ ॥

जें पूर्णानंद बोधाकार ॥ ज्यासी न स्पर्शे येकही प्रकार ॥
सर्वव्यापक निरंतर ॥ तें प्राकृत इतर केविं समजे ॥ २२ ॥

जें निर्विकल्प सुखात्मक ॥ वीतराग जे सनकादिक ॥
तैसेची वामदेव प्रमुख ॥ तें रूप नेमक जाणाया योग्य ॥ २३ ॥

परंतु जो देहाभिमानी ॥ सत्वादिक त्रिगुणानी ॥
संसारीं भ्रमणार अनुदिनी ॥ ब्रम्हरूप निशानी नेणेचि तो ॥ २४ ॥

यास्तव अगा स्वामिया ॥ बाळीं भोळीं उद्धरावया ॥
दिव्य भगवंताची चर्या ॥ पाराशर्या वाखाणिजे ॥ २५ ॥

अनर्थ हेतु काम्य कर्म संगती ॥ तेन प्रतिपादितां महामती ॥
भगवल्लीलाचि वर्णिजे प्रीती ॥ पूर्वी हे रीति सांगीतली ॥ २६ ॥

आतां धर्म नित्य नैमित्तिक ॥ अव्हेरूनियां सकळिक ॥
हरि चरित्रचि वर्णी येक ॥ विधि कुमारक सांगे ऐसे ॥ २७ ॥

कीं टाकोनि वर्णाश्रम धर्महीं ॥ श्री हरीचे पदांबुज द्वयीं ॥
सद्भक्ति आदरिल्यां पुरे पाहीं ॥ गरज नाहीं इतरांची ॥ २८ ॥

म्हणसी टाकोनि स्वधर्म पायरी ॥ भक्ति आदरिल्यां बरी ॥
ते पूर्ण साधल्यां निर्धारीं ॥ घडेल संसारी मुक्तचि तो ॥ २९ ॥

तेव्हां चिंता नसे काहीं ॥ पूर्ण भक्त न पावतां पाहीं ॥
देहावसान घडल्यां तइं ॥ लाभेल निश्चयीं अनिष्ट अती ॥ १३० ॥

तरावें ज्या भक्तीच्या आधारें ॥ ते पक्व न घडली निर्धारें ॥
त्यागिल्यास्तव नित्य कर्म सारें ॥ झोंबेल वारें प्रत्यावायाचें ॥ ३१ ॥

तरि जेकां कर्मठ असती ॥ त्यांचीच कर्म त्यागें सुमती ॥
अनिष्ट लाभ घडेल निश्चिती ॥ भक्तासि प्रसक्ति नाहींच त्याचि ॥ ३२ ॥

यजन याजन दानादिक ॥ जरि न करी परिव्राजक ॥
तत्प्रयुक्त त्यासि पातक ॥ लागेल सम्यक काय ताता ॥ ३३ ॥

अथवा नीचयोनीगतहीं ॥ भक्ति रसिक जो दृढनिश्चयी ॥
त्यासि अकल्याण कोठें तऱ्हींहीं ॥ जालें कायी निवेदितें ॥ ३४ ॥

सर्वत्र कर्म फळ दाता ॥ ईश्वरचि येक ताता ॥
तो अनुकूळ असतां ॥ दुःखकथा कैंची त्यासी ॥ ३५ ॥

जो पंक्तीस सेवटीं नर ॥ बैसला अत्यंतचि दूर ॥
जरि आन्न मिळे वाढणार ॥ न्यूनता साचार काय त्यासी ॥ ३६ ॥

परि जो भगवद्भक्ति भ्रष्ट ॥ केवळ वर्णाश्रमधर्मनिष्ट ॥
तेणें काय पाविजेलें इष्ट ॥ सांगिजे स्पष्ट मजलागी ॥ ३७ ॥

जातीनें निकृष्ट ही शबरी ॥ उच्छिष्टफळें भक्तिभरी ॥
अर्पूनि श्री रामासि बरी ॥ योग्यां बरोबरी लाभली गती ॥ ३८ ॥

तिर्यग्योनी ही गजांचा शक्र ॥ सत्राणें आक्रमितां नक्र ॥
स्मरतां देवाभावें अवक्र ॥ धांवला चक्रधर धावण्या ॥ ३९ ॥

एवं भक्तिमार्गनिष्ट जो कां ॥ तो कोठें तऱ्हीं जन्मो कां ॥
त्यासी न स्पर्शे धोका ॥ काळही बोका वंदी पाय ॥ ४० ॥

म्हणसी स्वधर्ममात्रानुष्टानें ॥ पाविजे पितृलोकिचें ठाणें ॥
तरि तो न लाभे सुखाचें केणें ॥ हें तुज कोणें सांगीतलें ॥ ४१ ॥

याचें आइक प्रत्युत्तर ॥ जो बुद्धीनें बलवत्तर ॥
तेणें त्यासाटींच निरंतर ॥ करावा सत्वर यत्न बापा ॥ ४२ ॥

भूलोकापासाव ब्रह्मलोकवरी ॥ फेरे घेतांही वरीच्यावरी ॥
जें सुख जनानीं संसारीं ॥ गतजन्मामाझारीं नलाभिजेलें ॥ ४३ ॥

तें सुख म्हणसी कवण ॥ तरि आत्मसुख सनातन ॥
दुजा लाभ नसे ज्या लाभाहुन ॥ परिक्षि कीं पाहुन सोडियेले ॥ ४४ ॥

काम्य कर्मानुष्टानें भलें ॥ विषय सुख जें पावणें सगळें ॥
तें प्राक्तन कर्माचिया बळें ॥ स्वतएव लागलें जनाचे पाठीं ॥ ४५ ॥

नरकप्राय ज्याचीच योनी ॥ तेथेंहीं संचरणार प्राणी ॥
विषय सुखाची घेती धणी ॥ अनुभव जनीं सर्वांसी येतो ॥ ४६ ॥

जैसें अप्रार्थित दुःख ॥ येऊनि पडे प्राणिया देख ॥
तेणेंपरीच विषय सुख ॥ परि दैन्य येकमात्र उरे ॥ ४७ ॥

फिरतां अनादि कालचक्र ॥ होऊं येकदा चित्र शक्र ॥
आणि रंभादि अप्सरा चक्र ॥ भोगूंये अवक्र कर्म बळें ॥ ४८ ॥

परि सरतां पुण्य सिदोरी ॥ पुन्हा पडणें लागे मही पाठारीं ॥
एवं तें सुखें दुःखरूप सारीं ॥ प्राज्ञ निर्धारीं नरमे तेथें ॥ ४९ ॥

परि मुकुंद सेवापर जो जन ॥ तो कदाचित दैवें करून ॥
कुयोनींत पावल्यांही जनन ॥ न फिरे आपण संसार चक्रीं ॥ १५० ॥

अगाये वाशिष्ठकुल केसरी ॥ केवळ कर्म निष्ट ज्यापरी ॥
पुनः पुन्हा येरझारा करी ॥ ते दशा बरी नपवे भक्त ॥ ५१ ॥

कांतरि मुकुंद पदारविंद ॥ जेणें चित्तीं आळंगिले निर्द्वंद ॥
त्यासी पुन्हा तोचि लागे छंद ॥ तत्यागीं मद अत्यंत घडे ॥ ५२ ॥

जेवि सांपडल्यां शर्कराची पांटी ॥ पांगुळे तेथें मक्षिका थाटी ॥
निवारितांही करें सेवटी ॥ बैसे नेहटीं येवोनि पुन्हा ॥ ५३ ॥

कांतरी माधुर्याचि मधुरिमा ॥ एकवटोनि मुनि सत्तमा ॥
सांटवली माजि हरि पदपद्मा ॥ लोधली पद्मा त्यास्तव जेथें ॥ ५४ ॥

त्या रसाळ भगवच्चरणीं ॥ ज्यांसी आग्रह फार अंतःकरणीं ॥
त्या पूर्वाभ्यासें करूनी ॥ फिरफिरोनि तेथेंचि रते ॥ ५५ ॥

दैवें घडल्यांहीं पुनर्भव ॥ जन्मांतर संस्कारें अभिनव ॥
न सोडी देवाचे पदपल्लव ॥ कैवल्य वैभव देणार जे ॥ ५६ ॥

तस्मात भगवंताचें चरित्र ॥ प्राधान्यें वाखाणिजे पवित्र ॥
म्हणसी कोण देव तो दिव्यगात्र ॥ तल्लीला विचित्र कोणती तऱ्हीं ॥ ५७ ॥

तरि हें विश्व भगवंतचि स्वयें ॥ इतरापरी जो दिसोनि ये ॥
तो जीवात्माही जाण तन्मय ॥ तद्भिन्न निश्चयें कांहीं नसे ॥ ५८ ॥

कांतरी यापासाव विश्वमाळा हें ॥ निपजे आणी येथेंचि राहे ॥
सेखीं येथेंचि लय पावताहे ॥ तन्मयत्व साहे त्यास्तव यासी ॥ ५९ ॥

जेविं सुवर्णी जन्मणें नगा ॥ तेथेंचि राहणें अनघा ॥
सेखी तेथेंचि होणें लीनगा ॥ तेवि या जगा भगवद्रूपी ॥ १६० ॥

कार्यकारणा नसे भेद ॥ ऐसें गर्जतसे वेद ॥
म्हणोनि जडाजड प्रपंच विविध ॥ वदती शास्त्रविद विष्णुमय ॥ ६१ ॥

एवं सर्वात्मक जो सर्वाधिष्ठान ॥ तोचि जाणिजे भगवान ॥
हे घडामोडी करणें जाण ॥ लीला आपण समस्त त्याच्या ॥ ६२ ॥

तें आपणचि तूं जाणसी ॥ तऱ्हीं तन्महिमा थोडसी ॥
म्या निरूपिली तुज पासीं ॥ पुण्यराशी सूचना रूपें ॥ ६३ ॥

कांतरि गुरूपदेशेंवीण ॥ नुमजे आत्मतत्व गहन ॥
यास्तव स्वल्प प्रदर्शन ॥ कीजेलें आपण द्वैपायना ॥ ६४ ॥

अगा ये अमोघ दर्शना ॥ कल्याण व्हावया त्रिभुवना ॥
अजन्माहीं तूं पावलासि जनना ॥ जाण हें विवंचना स्वबुद्धीनें ॥ ६५ ॥

कांतरी परमात्मा परम पुरुष ॥ जो भगवंत अकलुष ॥
तयाचा तूं होसी दिव्यांश ॥ हा सारांश निरूपिला ॥ ६६ ॥

தேறிய சாத்தி விராசத தாமத மென்று செப்பு
மூறியல் முக்குண மொத்தவை மூன்று முயர்விழிவற்
றேறியக் காற்புத்தி தத்துவ மாகுமென் றெண்ணுவரே. (36)

எண்ணிய புத்தியில் முக்குணஞ் சீரியல் பாற்கரந்து
நண்ணிய வாங்கார மூன்றுரு வாமவை நாட்டியபேர்
தண்ணிய தைசத வைகாரி யந்தரு பூதாதி யென்
றண்ணல் வகுத்த முதனூ னெறிமுறை யாய்ந்துகொள்ளே. (37)

கொள்ளுமத் தத்துவம் முற்கூற திற்செவி யாதிமன(ம்)
எள்ளிய கன்மேந் திரியம்பின் னீனு மிரண்டினிற்பின்
தெள்ளிய தன்மாத் திரைவருஞ் சேர்ந்ததன் மாத்திரையில்
ஒள்ளிய பூதங்க ளைந்துக்கு மாமென்ப ருற்பவமே (38)

பவந்தரு மம்மனம் பண்பிச்சை பாரிப் பதாம்விகற்பம்
கவர்ந்தெழு மிந்திரி யங்கள்கண் டோல்செவி மூக்கொடுநா
வயந்தரு ஞானேந் திரியங்கன் மேந்திரியங்கள் கைகால்
அவந்தரு வாயொடு பாயு ருபத்தமென் றுங்கவையே (39)

ஆங்கவை தன்னில் மனம்புத்தி யாங்கார சித்தமொன்றே
யீங்கிவை யுட்கர ணமொரு நான்குமற் றேனையவாந்
தீங்குவை இன்றன வீரைந்துந் தேரிற் புறக்கரண
மோங்கிய போகத் திவையாங் கருவியென் றுன்னுமினே. (40)

உன்னிய சொல்லுச் செவிக்குக்கண் ணுக்குரு வம்பரிச
மன்னிய தோலுக்கு மூக்குக்கு நாற்ற பிரதமென்ப
வின்னிய நாவுக் கியம்பல் நடத்தல் கொடை விடுதல்
பன்னிய வானந்தம் கன்மேந் திரியம்பயின்றனவே. (41)

பயல்வுறு சத்தப் பரிச முருவ மிரதங் கந்தம்
இயல்வுறு தன்மாத் திரையைந்து மாவன வீங்கிவற்றிற்
புயலுறு வான்வளி பொன்று வனல்பொரு நீரொடுமண்
வியலுறு பூத மைந்து முறைபாக விளைந்தனவே. (42)

விளையுங் குணமொன் றுக் கோரொன்று மேற்படும் விண்முதலாய்
விளையுந் தனையும் இடங்கொடுக் குங்கூட்டும் வெப்மைதரும்
இளகும் பொறுக்கும் அடைவே யவையுயர் வான் முதலாய்
வளையுங் கடற்புவிக் கஞ்சு மெஞ்சாமல் வருந்தொழிலே. (43)

தொழிலுறு மாயைத் துவக்குண்ட சீவனைத் தொக்குநின் றங்
கெழிலுறு மேனி யிருபாற் கரணங் குணமொரு மூன்
றொழிவில வாகிச் சுகதுக்க மோக முடன் கொடுத்துக்
கழிதரு துன்பங் களின்பய னாரக் கவர்விக்குமே. (44)

கவரும் பொருளொன்றைக் கண்முத லாய காரணங்கண் ணுற்(று)
இவரு மனம்விகற் பிக்குமெஞ் சாதவாங்காரமுந்தான்
பவரும் படியென தியானென்று—பாவிக்கும் பற்றுமுற்றும்
தவரு மதிமிகத் தேறுமிப் பாலிதன் றன்மையென்றே. (45)

என்றுடன் றேறிய புத்திக் கிசைந்த பொருணயந்து
சென்றுந் திரிந்தும் பயில்வுறுஞ் சேதனன் சேதமின்றி
நின்றுண்ட போகத்தை நீக்குமற் றுண்பன நேடியின்னே
பொன்றும் பிறக்கும் புனற்சுழிப் பட்டதோர் புல்லெனவே. (46)

புல்லிய பாசங்க ளுய்த்திடப் போகம்பு மானுகர்ந்து
சொல்லிய காலத் துறுஞ்செலல் நீங்கிச் சிரபுரக்கோன்
சொல்லிய மண்முத லாயின மாயையி லேதொகுத்தங்(கு)
எல்லியில் நித்திரை போலிளைப் பாற்று மணுக்களையே. (47)

களைகண்ண தாஞ்சுத்த தத்துவங் காழியர் கோனருளால்
விளைபுல னுஞ்சத்தி யுள்ளே யொடுங்கிடு மேதகுநூல்
தளைகெழு சத்தி சிவதத்து வந்தன்னி லேயொடுங்கும்
கிளைதரு மாயை சிவந்தோ டணுவுக்குங் கேடில்லையே. (48)

இல்லா தனபிறந் துள்ளன மாயுமென் றிம்மயக்கம்
நல்லா கமமறி ஞர்க்கில்லை நாட்டிய தத்துவங்கள்
எல்லா மியய்பு முறையே பிறக்கு மிறக்குமுத்த
ரல்லா வணுக்கட் கநுபவ காரிய மாகின்றே. (49)

ஆகுத லாவது தோற்ற மடக்க மழிதலென்றே
நீகுறி யாயெள்ளு மெண்ணையும் போல்நினை நீண்டகொம்பிற்
கோகில மார்பொழிற் கொச்சைப் பிரான்கழற் கூடுதற்கே
யாகுமன் றேயணுக் கட்கியல் பாகு மநுபவமே. (50)

பவமே வியநெறிப் பந்திக்கு மீசன் பசுக்க டம்மை
யவமே வியநெறிப் போகங் களால்முற்ற வன்னிலையே
தவமே வியநெறி சத்திகண் ணுச்சென்று சார்ந்து பின்னைச்
சிவமே வுவரென்று காண்கொச்சைக் காவலன் சித்திரிப்பே. (51)

தத்துவ விளக்கமுற்றுப் பெற்றது.

திருநெறி விளக்கமூலம்.

கணபதி வணக்கம்.

காயமெனுங் கூடத்து மோகக் கம்பங்
கற்பனையாங் கணையமவை முறித்துக் காலின்
மாயவிலங் கினையொடித்துக் கருமப் பேராய்
வரும்பரிக் காரரைத் துரந்து வளைந்து நிற்குந்
தீயகுணக் காரணமாம் பாகர் சற்றுஞ்
சேராத வகைவீசிச் சிவவே கத்தாற்
பாயுமருண் ஞானமத வேழத்தின்பொற்
பாதமுற வேதமுறும் பவங்கள் போமே. (1)

நடராசப்பெருமான் றுதி

பேரொளியாய் அளவில்பே ரின்ப மாகிப்
பேதமற வெவ்வுயிர்க்கும் போத மாகி
யாரறிவு மறிவறியா வகண்ட வுண்மை
யநுபவமே தனுவாகி யம்மை காணப்
பாருலவு பிறப்பகலப் பொதுவி னின்று
பரஞான வானந்தப் பாத நல்குஞ்
சீரொளிய செங்கமலப் பாத மென்றன்
சிந்தையினி லுறவணங்கிச் சென்னி வைப்பாம். (2)

(சிவகாமசுந்தரியம்மை துதி)

மேவுபரை திரோதமுட னிச்சை ஞானம்
வியின்கிரியை யானந்த வீடு நல்குந்
தாவிலரு ளுருவாகி மாமாயை மாயை
தனுகரணு திகடமைப்பத் தலமா யுள்ள
மூவகைய வுபாதானம் பொருந்தி யேக
முதலுமா யைந்தொழிற்கு மூல மாகிப்

பாவனையிற் பொதுவினடங் காண வல்ல
பைந்தொடியாள் பாடகத்தாள் புந்தி வைப்பாம். (3)

(திருஞான சம்பந்தர்)

பொய்யுடைய பரசமயத் திமிரம் போக்கும்
பொங்குகதிர் அங்கமொரு பூவை யாகி
மெய்யுடைய மறைத்தமிழ்நூற் பாட வல்ல
வெங்குருவாழ் எங்குருவாம் விமல மூர்த்தி
பையுடைய வரவல்குல் உமையாள் கொங்கைப்
பரஞானப் பாலருந்திப் பரனைக் காட்டுங்
கையுடைய கற்பகத்தின் செம்பொற் றண்டைக்
காலிரண்டு மென்னிரண்டு கண்ண தன்றே. (4)

(திருநாவுக்கரசர்)

பாழமணர் சிறைநீங்கி யதிகை மேவும்
பரஞ்சுடரைப் பணிந்துதமிழ் மாலை பாடிச்
சூழமழ னீற்றறையை வென்று குண்டர்
துய்ப்பிக்கு நஞ்சமமு தாகத் துய்த்து
வேடிமது பணிவித்து வையமீதில்
வெண்ணீறு மஞ்செழுத்துய் விளங்கி யோங்க
வாழிமிசைக் கன்மிதப்பில் வந்த நாவுக்
கரசினடி பரசமல மகலுமன்றே. (5)

(திருநாவலூரர்)

மறைமுதல்வன் வழுத்தமறை யவனாய் வந்து
மணம்விலக்கி யாவணத்தால் வலிய வாண்ட
நிறைபுகழோன் ஆரூரிற் பரவை தன்பால்
நின்மலனைத் தூதுவிடு நேசனையார்
றிறையவனை யழைப்பளவில் ஆறு நீங்கு(ம்)
ஏழிசையான் கமலமலர் வெள்நீர் வாவித்
துறைமுதலை மதலையுமி ழென்ன வல்ல
சுந்தரனற் சேவடியே சிந்தை செய்வாம். (6)

திருவாத வூரடிகள்.

அருவிசொரி விழியிணையும் புளகக் காடும்
ஆராத பெருங்காத லவிழ்ந்த வுள்ள

முருகு தொறுஞ் சிவமயமா வோது முண்மை
யுலவாத வாசகமும் ஓருநீ ராகி
யிருவகையும் இறந்தபே ரின்ப முத்திக்
கிதுவடிவே யெனும்வடிவும் உடைய ஞானப்
பெருகொளிசேர் நடராசன் கோயில் வாய்தற்
பிச்சன் மலர்த் தாளிணையே யிச்சை செய்வாம் (7)

நாயன்மார்கள் துதி.

நீருலவு சடைதாழ நிமலை காண
நின்றிறைவ னடப்புரியு நிருத்தா னந்த
வாரமுத நுகர்தில்லை வாழு மெய்ம்மை
யந்தணரே முதலாக வாரூர் தன்னில்
ஏரிலகு பரவைபா லெந்தை தன்னை
யிரவிருகா னடப்பித்தோ னீறு தாகச்
சீருலவு திருத்தொண்டத் தொகையி லுள்ள
சிவனடியார் பதமலரே சென்னி வைப்பாம் (8)

(சம்பந்த சரணலயர் துதி)

எம்பந்த பாசமறக் காழி வந்த
என்றுணைவன் எழுதுமறை எழுதும் பேறு
நம்பன்ற னருளதனாற் பெற்ற ஞான
நன்முனித்த் துவவிளக்க நவின்ற நாவன்
வம்பின்கட் கதறிவரும் புத்த நந்தி
மௌலியினி லிடிவீழ வண்டமிழ்நூல் பாடும்
சம்பந்த சரணால யன்றன் பாதம்
சந்ததமும் நைந்துருகிச் சிந்தை செய்வாம். (9)

(தொண்டர் சீர்பரவுவார்)

பத்திநிறை கடல்குன்றைப் பதியில் வந்த
பரமமுனி பாரிலறு பத்து மூவர்
சுத்தநெறித் தொண்டவர்தம் பேறு தொண்டத்
தொகை யடைவிற் றுதித்துலகு துன்பந் தீர
வைத்தவிறை வன்றொண்டர் பாதம் போற்ற
வந்தபிறப் பிணைவணங்க லுற்றே னென்னுஞ்
சித்தமுடைத் தொண்டர்சீர் பரவ வல்லான்
செய்யமலர்ச் சேவடியென் சென்னி வைப்பாம் (10)

சிவாலய முனிவர்

அன்புநிறை குருவுருவு நீறு முண்மை
யஞ்செழுத்து மாலயமு மறிவுக் கெட்டா,
வின்பமிகுஞ் சிவனுருவுஞ் சென்னி மீதே
யிருத்துமலர்ச் சேவடியு மிறைவன் றன்னைத்
துன்பமற வர்ச்சிக்குந் தொழிலுந் தொண்டர்
தொண்டரடித் தொண்டனெனுந் தொண்டில் வீடுந்
தென்பொதியிற் றிருமுனிபால் பெற்ற வெங்கள்
சிவாலய மா முனிபாதஞ் சிந்தை செய்வாம். (11)

நூற்பயன்

மருளினிலை கெடவழுத காழி வேந்தர்
வாகீசர் வன்றொண்டர் வாத வூரர்
தெருளுநிலைச் செந்தமிழ்ப்பின் செல்வ தாகச்
சிவாகமத்தின் கருத்துகலாச் செய்தி யாக
இருளுமலம் இரிக்குமருள் உண்மை யென்றும்
இன்பமலி பொருளுண்மை யென்று நோக்கி
யருளின்வழி தரவுரைப்பன் இதன்பேர் முத்திக்
கானதிரு நெறிவிளக்க மாகு மன்றே. (12)

(அவைஅடக்கம்)

சொன்மையொடு பொருண்மைபெறத் துணிந்தோர் போல
யானுமொரு நூல்வகுத்துச் சொல்வே னென்றல்
புன்மொழிக ளன்றியிதி னன்மை தானும்
பொருந்தியிடு மாகருதி புடவி தன்னைப்
பன்முறையின் மணலொழியக் கழுவு வான்போல் (பேர்)
பண்டிதர்க டமையீர்க்கும் பரிசுண் டாகில்
என்மனமே யெனக்குநகை தருமா லிந்நூற்
கவையடக்க மறந்துநான் இயம்பிட் டேனே (13)

அருளிலர்பா லிருளாகி யருளுடையோர்க் கொளியாம்
ஆடகமும் பணியும்போ லபேத மின்றி
இருள்வெளிபோற் பேதமறப் பலசொலொரு பொருள்சொல்
எண்ணில்பொருள் போலப்பே தாபேத மின்றி
உருவுயிர்நோக் கிரவியறி வொளிபோல வேறற்
றொன்றல்லா வத்துவித மாயுயர்வே தாந்தத்

தெரிபொருளாய்ச் சிவதருமத் தால்வினையுஞ் சைவ
சித்தாந்த வுண்மையினைச் செப்ப லுற்றும். (14)

ஆருயிர்மூ வகைமூல மலத்தார் கன்ம
வாணவத்தார் மும்மலத்தார் அநாதி யாகப்
பார்வையெனப் பரனுருவாய் வந்து தெய்வப்
பார்வையினாற் பரிசத்தாற் பரம வாக்கால்
ஓர்வரிய பாவனையால் ஓதுதலா லியோகத்
... ...
சாரிவுதரு நிருவாண மிருவகையா மிதுநற்
சத்தியமோட் சத்தியமாய்ச் சாற்று நூலே. (15)

மருவுமனு வர்ச்சனையோ கஞ்சமய விசேடம்
வருமுண்மை நிருவாணம் மந்திரங்கள் பதங்கள்
வருணமிது புவனங்கள் தத்துவங்கள் கலைகண்
மன்னுதொகை வகைபதினொன் றெண்பத்தொன் றைம் பத்
திருசதமோ டிருபத்து நாலாறைந்தின் னெய்து [தொன்
நெறியறுவ கையுமிழித் தொழிலின்பப் பொருளில்
பொருளிலுயிர் இருமையா வொருமையில்தற் போக்கில்
புதுமைய ருவநுபோ கம்புணர்க்கு மன்றே. (16)

மன்னுசரி தாகிரி யையோக ஞானம்
வாய்ப்பதனுக் கேது வதன்வழிநின் றோர்க்குத்
தன்னுலகு தன்னருகு தற்போ லீசன்
றநுஞான மிருஞான மாகச் சாற்றும்
பன்னரிய பரஞானம் பரம ஞானப்
பற்றொழியப் பரம்பொருளாம் பரிசோன் றென்று
சொன்னபொரு டனைவிளங்கச் சொல்லா நிற்குஞ்
சுருதிசிவா கமமென்னச் சொல்வ ரன்றே. (17)

முற்சுருதி மிருதிசிவா கமமெதினு மிதைய
முதன்மூன் றுந் தெரித்ததின் முதுபதிதான் முடிவில்
தற்பரமா யருவுருவு தவிர்ந்துகுணங் குறிகள்
தாக்கின்றி யமலமாய்த் தனக்குநிக ரின்றி
யொற்கமறு பொருளாகி யுயிர்க்குயிராய் ஒன்றாய்
உணர்வரிதாய்ச் சுகாதீத வுண்மையதாய் ஒழிவற்
றற்புதமா யபேதருடன் பேதந்தமக் கரிதாய்
அத்துவிதற் கெளிதாகி யணுவாகி மகத்தாம். (18)

நண்ணுபரை யிச்சைதொழில் ஞான நல்க
நானதுத னையுற்று நற்கருணை யுருவாய்
எண்ணருநா தாதியினை யெழுப்பியிட வந்த
வெழிற்குடிலை யதோமாயை தனையேந்து வினையார்
பண்ணியிடு தனுகரண புவன போகம்
பாவித்தங் கவையொடுக்கி மூர்த்திதனைப் பகரிற்
றிண்ணமுற நற்சகள நிட்களமென் றிதனைத்
தெளிந்துரைப்பர் சிவாகமநூல் தெரிந்து ளோரே (19)

சுட்டறிவுக் கெட்டரிய தொன்மை யானுஞ்
சொல்லுமடி நடுமுடிவு துடைத்த லானும்
மட்டறுசின் மயனாகி வளர்த லானும்
மதித்திடுவோர் வரமதிப்பின் மறைத லானும்
எட்டனையுஞ் சுகதுக்க மிலாமை யானும்
எவ்வுயிர்க்கு முயிராகி யிருத்த லானும்
வெட்டெனவே தனதிச்சை யான மேனி
விரும்பிவேண்டும் பெருங்கருணை விமலன் றானே. (20)

செங்கமலத் தயன்படைக்கு முலக மெல்லாந்
திருமாலங் களிக்குமது தன்னைத் தீர
வெங்களரன் அழித்திடுவன் அதனா லந்த
இருவருமற் றிறைவனரு ளேவ லாகுஞ்
சங்கரன்றான் சங்கரிக்கு முலகம் யாவுந்
தானடத்தும் விகாரமறத் தவனன் முன்னர்ப்
பங்கயங்க ளலர்ந்துமுகை துலர்ந்து வெல்லும்
பான்மையென மேன்மையதாப் பகர்வ ரன்றே. (21)

வையமெலா மாண்பெண்வி யென்று தோன்றி
வல்வினைமா லுழன்றா ...... ருமலத்தாற் பின்னும்
மெய்யணையும் வெகுவிதரு பங்கண் மாறி
விடுவதுபற் றுவதாகி விரிதலானும்
பொய்ய ...... சடமாத லானும் (போகமுரு)
வறிந்து பொருந் தாமை யானும்
செய்வினை செய் துயிருருவி னம லானுஞ்
செகமுழுது நின்றுசிவன் செய்வன் றானே. (22)

நாட்டியவைந் தொழிலிறைவன் அருள்விளையாட் டாக
நவின்றிடுயிர் பிறப்பினணு காமல் ஞான

வீட்டையருள் புரிவதற்குக் காரணமா மென்று
விளம்பிடுவ ரிறுதியினைப் பாற்றன் மெய்யிற்
கூட்டல்வினை தொலைத்தற்குத் திதிபோக மருத்தல்
கூறுமறைப் பினிதாக்கல் அருள்கழற்கே கூட்டி
வாட்டமற வநுபோகம் வளர்வித்தல் முன்னே
வகுத்தவையு மநுக்கிரக மெனவுரைப்பர் மதித்தே. (23)

அகணிதமாய் அழிவிலதாய் ஆணவத்தான் மறைப்புண்
டருவினைக்கா முருவெடுத்தங் கதுவதுவாய்க் கன்ம
வெகுவிதமுன் னுகர்வழியா லிருவினைகள் புரிந்து
மீள்வதுபோ வதுவாகி மேவுமல பாகத்
தகுதியினிற் றூரகமா மருளொளியான் முன்னைத்
தமமகற்றித் தானுவினற் றுணிழல்சார்ந் தின்ப
மிகுதிபெறு மாருயிரின் றொகுதிகளென் றென்றே
வேதமுமா கமந்தானும் விளம்பும் மன்றே. (24)

ஒன்றாகி யொன்றுமிலாக் கேவலத்தின் மீளு
முலவாத சேட்டைகளா யிருளையொளி யாக்குங்
குன்றாத கூரிருளாய்ச் செம்பகலாக் களிம்பின்
கொள்கையதா மக்கட் செவிக்(குக்) கொடுவிடமே போன்று
பொன்றாத தனிமூல மலமாகி யுயிரின்
போதமெலாந் தானாகிப் போதமற மறைத்து
நின்றாலு மிருபொருட்கு நிலையின்றி யருட்பால்
நீங்கிடுமா ணவமென்று நிகழ்த்து நூலே. (25)

வெந்துரைநோ யாள னுடல் வெங்கனற்கோல் கொண்டு
வெதுப்புறுமக் காலையினில் மிகுபரிவா லுன்னை
முந்தியவன் கண்புதைக்கு நெறிநிகர்த்து விழிப்பால்
மூடியவெண் டூசிருளா திருளளிக்கு முறைபோற்
சந்ததமும் பாகம்வர வுயிர்க்குமலஞ் செலுத்துஞ்
சார்பின்மல மென்றிடினும் தானலவாய் மறைத்து
வந்தநிலை யதுமாறித் திருவருளா ஞலு
மறைப்பொழியா துயிர்க்காதி வாழ்வுதரு மிகவே. (26)

ஓங்குபரா பரனருளாற் குடிலையிலே நாத
முளவாகு மறிந்துவதி லுற்பவிக்கும் விந்துப்
பாங்கருநற் சதாசிவராஞ் சதாசிவர்பான் மகேசர்
பாலிப்ப ரவர்வித்தை மயங்கிடுவ ரியைந்திட்

டங்கிவர்க ளெவருமுண் டாயிவர்க்கு முன்னே
    யெழுமென்ற விந்துவிலே சூக்குமைபை சந்தி
நீங்கலரு மத்திமைவை கரிவருமென் றருளான்
    நிகழ்த்திடுவர் பாசவலை நெகிழ்த்து ளோரே. (27)

மெய்யாதி நால்வகையா யொன்றுக்கொன் றெவ்வா
    வெருவிதமா யேகமா யவிதவிதன் றருவாய்
எய்யாமல் வினையிலுழ லாருயிர்க ளெவைக்கும்
    இருப்பாதி யசேதன மாய்ச் சலிப்பிலதாய்த் தனது
பொய்யாய நிலையளவும் பூரணமா யாவும்
    போந்தவடை வேபுரிந்து பொருந்திவினை யென்றும்
செய்யாத விறுகாலைச் சேதனங்கட் கெல்லாஞ்
    சேர்விடமா மாயையெனச் செப்பு நூலே. (28)

சொல்லியவிம் மாயையெதற் கென்றுரைக்கில் வையந்
    தோற்றுவதற் கிடமின்றாந் துணைவனிட மென்றாற்
புல்லியபொய்ச் சடஞ்சித்தி லுற்பவியா தென்றும்
    பொருந்தியுள தேலிறையேன் புகன்றவசத் துருவாய்ச்
செல்லுநெறி யிதுவாகுஞ் சிவனுமது வன்றிச்
    செயும்வகையொன் றிலதாவன் சிவனசத்த னுகில்
அல்லல்தரு மாயையுமற் றவன்போல்வ னுதி
    யனைநடத்தி டுந்தலைமை யதுகொடுத்த தன்றே. (29)

அனையவுரு வொருவகை யாகாமன் மக்கள்
    அமரர்பசுக் காதியென வாக்கியதென் னுக்கம்
வினையின்வழி யென்னில்வினை யுளதாகி லிறையேன்
    வினையசித்தா மதுதன்னை விளம்பிலுயிர் நுகர்ச்சி
யெனையவினை தருமுருவும் பிற்பெறுமாற் றுனே
    யெய்தும் வினைக்கானவுரு வென்றுரைக்கிற் சடமாந்
தனுவகையுந் தனக்கென வொன்றறியா தானுஞ்
    சாரும்வகை யிலதென்று சாற்று நூலே. (30)

அளவிலிருண் மாயையினும்) பரனுயிர்ப்பா லணைதல்
    ஆருயிர்கள் வினையருந்தற் காகிலதோ வினையோ
உளதெதுமுன் னுயிர்க்கென்னில் உயிரதுமுற் சுத்தம்
    உறையலவென் றயிருளவன் றேயிவையு முளவாம்
வினையுமிரு வினைமாயை விடுவது பற்றுவதாம்
    விடாதுமல மிதுமுதலா மும்மலமு நெற்கு

முனையினொடு தவிடுமிபோ லிபல்புயிர்கட் கென்று
 மொழிந்திடுவர் பாசமயக் கொழிந்துளோரே. (31)

மேவியவிம் மாயையினிற் கலைகால நியதி
 வித்தையுட னராசமிவை விளங்கியிடு மென்றத்
தேவர்தம்மா லுருத்திரரிற் றிசழ்கலையிற் பகுதி
 திரிகுணமா மாங்காரம் புத்தியினிற் செனித்து
மூவகையாந் தைசதவை கிரியொடுபூ தாதி
 மொழிதரு சாத் துவிதகுண முயங்கியிடு மனமுந்
தாவில்செவி யாதியெனச் சாற்றினானேந் திரியம்
 தானுமிகு தைசதத்திற் சாரு மன்றே. (32)

எண்ணியகன் மேந்திரிய மென்றுசொலப் பட்ட
 விராசதமா வாக்காதி யெய்திடும்வை கரியின்
நண்ணிடுபூ தாதிதா மதத்தின்மாத் திரையின்
 நவில்வுறுசத் தாதியினை நல்கியிடுஞ் சத்தக்
கண்ணதனில் வெளிப்பரிசங் காலுருவந் தன்னில்
 கனலிரதத் தேபுனலிற் கந்தத்தே தரையாம்
மண்ணிறுதிக் கலைமுதலா வந்தனமபோலொடுங்கும்
 ... ... (33)

தொல்தரம்பைக் காரணமாய்த் தொகையளவு படாத
 துன்பமுட னின்பமாய்த் தோற்றமுட னீறும்
மல்கியிடும் வழியதனு னித்த மாகி
 மன்னுயிர்க டொறுமறுவிப் பின்ன மற்றுப்
பல்விதமா யுணர்நினைவு தொழிலாற் செய்யும்
 பண்ணதாய்ப் புந்தியில்வந் தடையும் பான்மை
நல்வினைதீ வினையாகிக் கடைநாண் மாயை
 நண்ணியுறு மிதுகன்ம நாட்டி லன்றே. (34)

சாற்றியவிக் கன்மவழிக் குலமாயுப் போகத்
 தன்மையதா மிம்மூன்றுந் தொன்மையதா முயிர்க்குத்
தேற்றமுற முற்செய்வினை யன்றியுரு ததுவுஞ்
 செய்தவடை வீற்செறியா சேருமுறை மாறித்
தோற்றருதெய் விகத்தினொடு பவுதிகமான் மிகமாஞ்
 சுட்டருமொன் றவைதாமும் சுட்டுசட சித்தினிலார்
மாற்றலுறு மசேதனம்போற் சேதனமு மாகில்
 அகலும்வினை யன்றாகி லருதுவினை யுனக்கே. (35)

எய்தியிடு மறுமையினுக் கேதுவினை யென்னில்
ஏதுவினி லிதமகித மென்றகொணீ யதுவுஞ்
செய்திபெற விருளதமுற் றிகழிலறு நீமுற்
றிகழில்வினை பெருகியிடு மெனவுரைப்பர் தெளிந்தோர்
மெய்தகமற் றிருவினையாம் வினைகளது நினைவின்
மேவாத வினைமேவும் வினையாக விளைந்திட்
டுய்தலா விதமகித மாகிவிடு மிவற்றால்
ஒற்கமற விருவினைதா னுற்பவிக்கு முனக்கே. (36)

வாக்குமனங் காயமெனு மூவகையால் வினைகள்
வருமொன்றி லொன்றொழியா மாறாது நுகர்ச்சி
போக்கலுறு பாவமிகு புண்ணியத்தா லென்று
புகன்றிடும்வே தாகமநூல் புகன்றமுறை யீற்றில்
மீக்கொளலின் மிகுதிகெடும் விடத்தடைபோ லந்த
மெய்யிலுறா தழிவின்றி மேலைக்கு வித்தாய்
ஆக்கலுறு மநம்பொருளாற் கோடலுமா மென்றே
யறைந்திடுவர் சிவஞான நிறைந்துளோரே (37)

வஞ்சமுறு மாருயிர்கட் கிரண்டறவே நின்று
மயக்கியிடு மாணவ மந்தமயக் கினுக்குத்
தஞ்சமிக வாகுதி ரோதாயி மாயை
தாவிலிரு வகைகருமந் தனுவாதி செலுத்து
மெஞ்சலிலா மாமாயை யென்னுமிவை தன்னை
யிழித்தலரி தாமென்று மிவையருளா மென்றும்
பஞ்சமல மென்னுமர னருளா னோக்கிப்
பகர்ந்திடுவர் பாசமெலா மகன்றுளோரே (38)

தொகுதிமிகு முயிரதுகே வலசகள சுத்தஞ்
சொல்லிடும்வ கையவத்தைப் புல்லியிடு மூலப்
பகுதிமுதல் பாரளவு சார்வகன்று கலாதி
பற்றாது மாமாயை படராது குணங்கள்
தருகுறிகன் வடிவகன்று தனதுண்மை யிழந்து
தம்மிழிபோன் றதுவாகித் தனிமலமாய் மோக
மிகுதியினில் வியாபகமாய் ஒழிவறவந் நிலையில்
மேவிருள்கே வலமென்று விளப்பு நூலே. (39)

காணாத வாணவநீர் கட்டுரைக்க வேண்டா
கண்டது நான்மாயை கன்மமெனு மிரண்டே

யாணான வாருயிர்முன் செய்வினைகட் கீடா
வவ்வுயிர்க்கு மெய்யாதி யளித்திடுவ னவற்றான்
நாணாது வினைகள்புரிந் தருந்திவினை யொப்பின்
நணியிடு மலமகல நல்லருளா லவையின்
பூணாது முன்புதனக் குள்ளவிம லதையைப்
பொருந்தியிடு மென்றவுரை பொருந்தாது நமக்கே. (40)

ஆர்ந்தவினை யாதியென வறைதன்முன மாயை
வையமிக வின்றளவு மறுதிபெறா துனக்குப்
பேர்ந்தவுரை போவதில விதைபோலு (விமலம்) மலம்
போதானம பொருந்தாது பொருந்தியதென் முத்தி
சேர்ந்திடினு நிலையிலை நீ செப்பியது நிற்கச்
சேர்கருவி கலாதிசிவ தத்துவமொன் றற்றாற்
சார்ந்தவுணர் வின்மையவ னறியாமை யென்றல்
தானேகாண் வையகத்தின் றன்மை தானே. (41)

மெய்புணர்வைப் பாழ்படுத்திப் பொய்யுணர்வை மெய்யாய்
விளைவித்து நின்றிடுத லரனும்மை யருள்வந்
துய்யுநெறி யெய்திலவன் யாவையுமா யெங்கும்
ஒழிவறவே நின்றநிலை யுற்றுணர்த லானும்
மையலுறு மலத்தின்மலஞ் சிவத்தினுமச் சிவமே
மாறாதமூலமல மாறிவரு மாயை (வினை)
யையனருள் பெறிலந்த வாணவத்தி னுண்மை
யறியவெளி தரிதுனது போதமதற் கெனவே. (42)

ஓதுமிருண் மூலமல மொழிப்பதற்கு மாயா
உபாதிசெறிந் திடுமருளா லிருளிலொளி யொப்ப
போதமெழும் போகநுகர் பொருட்டாக முன்னர்ப்
புகன்றமல முயிர்ப்பொருளைப் பொருந்தாமன் மறைக்கும்
பேதமுறு மிவையிருளும் வெளியுமெனும் பெற்றி
பெறுமிறைவன் மலமலத்தான் அன்றிகட் கலையின்
மீதிலுவர் சாணிமலி வித்ததற்த வெண்மை
விரவுவித்தல் போலுமென விதித்துரைப்பர் மதித்தே. (43)

நாடரிய வுணர்வாகி யொளியாய் விந்து
நண்ணியுள மகலாத நாத மாகி
நீடுமது சூக்குமைபை சந்திவரு ணங்கள்
நிகழுநெறி யுள்ளொடுக்கி மயிலண்ட நீர்போற்

கூடியிடு முணர்வாகிச் சிந்தைசெயு முயிர்கட்
குய்க்குமுருத் தெரித்துணர்வாய்க் குமிறுதன்மத் திமைதான்
கேடதற உதானனொடு கெழுமியசொற் பொருள்சேர்
கேள்வியுமாய்ப் பிறர்செவிக்குக் கேட்பதுவை கரியே. (44)

ஈங்கிவைமற் றுயிர்போக நுகர்வதற்குத் தக்க (வறி)
வெய்தியிடும் வித்தாதியை வாதமா லென்பர் (இனி)
யோங்குமலஞ் சிறிதொதுக்கித் தொழில்விளைக்கு மாயை
யுற்றகலை வித்தைவிடை யங்களிலே யுயிருக்
காங்கறிவு விளங்கும்வகை யெழுப்பியிடு மராகம்
ஆசையினை யளவுபடா தடைந்தாலு மடையாய்
பாங்குபெற வமையாத பண்பளிக்கு மிதனுற்
பயின்றிருமூ வகையுருவு பரனருளால் உயிர்க்கே. (45)

நீணிலமீ தினிலரச ஞணையெனக் கன்ம
நிச்சயித்துத் தனதளவி னிறுத்துவிக்கு நியதி
காணலருங் கழிகால நிகழ்கால மெதிருங்
காலமெனு மிவையெல்லாம் பலபுதுமை காட்டும்
பூணமுறு பொறிகடொறு மிறையிலொரு நிலையே
போல்வருதல் புருடனெனப் பகன்றிடுவ ரிதற்குப்
பேணவரும் பஞ்ச கலா சொ ... ... லன்றி
பிறிவிலதென் றுகம நூல்பேசுந் தானே. (46)

முக்குணத்தின் சேர்வாய பகுதிதிரி குணமா
மொழியிலவை சாத்துவித ராசததா மதமாம்
அக்குணங்க ளோரொன்றி லிரண்டிரண்டு குணங்கள்
ஆகியவை யொன்பானு மாருயிர்ப்பா லணைந்திட் (டு)
ஒக்கவரு புலன்களிடத் துறுபயன்க ளெல்லாம்
உற்றிடுதற் கிடமாகி யுணர்விலொளி யாகுந்
தொக்கவிட யங்கடொறு மொருமைபல விதமாய்த்
துணிவுதரு மதுபுந்தி யெனவுரைப்பர் துணிந்தோர். (47)

இல்லாத தனைப்பண்ணி யானெனதிங் கெழுப்பி.
யெனையொப்பர் புவியின்கண் யாருமிலை யென்றே
பொல்லாத வாங்காரம் புணர்ந்தயிரி னிற்கும்
புலன்கடொறு மிந்திரியம் பொருந்துமுன முந்திச்
செல்லாநின் றிடுமிச்சை வடிவாகி யென்றுஞ்
செலலாகிப் பரவையினிற் செறியுமனஞ் சிந்தை

நில்லாத பொருளின்கட் டுணர்வாகி மைய
நீடியிடு மென்றுமிக நிகழ்த்து நூலே. (48)

சாற்றுசெவி துவக்குவிழி நாக்கு மூக்குத்
தன்னிலடை விடயவிடை யுன்னியிடி லவைதாம்
மாற்றருஞ்சத் தப்பரிச ரூபரத கெந்தம்
மன்னியிடு முறைமுறையே வாக்குப் பாதம்
மாற்றரிய பாணிதரு பாயுவினோ டுபத்தம்
மன்னியிடு மஞ்சுக்கும் பகர்வசன கெமனம்
ஊற்றமிகு தானவிசர்த் தானந்த மைந்தும்
உறுதொழிலென் றறிபெற வுணர்த்து நூலே. (49)

மேதகுமைம் பூதவயி னைப்பொறிக ணின்று
விடயங்கள் மேவுநெறி விண்ணதனிற் செவியின்
வாதமுறுந் துவக்கெரியில் விழிபுனலி னுமண்
மருவியிடு நாசியினில் வருபுலன்கொள் வகையாற்
போதமுறப் பொருந்தியிடும் வழுமாமன் முன்னர்ப்
பூதங்கள் ஐந்துமுறப் புணரிந்து யிரி னிற்றல்
ஓதியிடிற் கடினமுத லாகமுறு மென்றிட்
டுணர்ந்திடுவ ருபாதியெலாந் தணந்து ளோரே. (50)

புறத்துநிரந் தரமாகி யிடங்கொடுக்கும் வானம்
பொற்பறுகால் சலிப்பினையுற் றெப்பொருளுந் திரட்டும்
நிறத்தின்மிகுந் தழலதுசுட் டொன்றுவித்து நிற்கும்
நீர்குளிர்ந்து நெகிழ்ச்சிதரும் நிலனுரத்துத் தரிக்கும்
திறத்தவிதன் றொகையுரைக்கி லஞ்சேமெனா மூன்றுஞ்
செப்பலருஞ் சுத்தஞ்சுத் தாசுத்த மசுத்தம்
பிறத்தலகன் றவர்முப்பத் தாறெனவே விதனைப்
பேசிடுவர் மயக்கமறப் பிறித்தருளி னின்றே. (51)

பகர்ந்திடுமிக் கருவிகளி லுயிர்மயங்கின் கன்மப்
பயனருந்தி வருமுருவம் பாறிடும் போதரவு
திசழ்ந்திடு மண்டசங்கள் பரகாயச் சேறல்
செற்றியதொன் றுடல்விட் டகலுஞ்செயல் போல
அகந்திகழும் கலாதிதரு மறிவுதொழி லிச்சை
யாகியசூக் குமவடிவில் அருமிரயந் துறக்கம்
புகுந்துவினை நுகர்ந்து பரனருளான் மண்ணிற்
பொருந்தியிடு மெனமறைகள் புகலு மன்றே. (52)

யோனிவகை யெண்பத்து நான்குநூ றென்று
ஓதிலவை யண்டசநற் சுவேதசமுற் பீசம்
ஆனசரா யுசநான்கிற் றுபரப்பத் தொன்பான்
அமரர்பதி னொன்றாரும் அவைபதி னைந்தா
வானமுறும் பரவைநீர் வாழ்வன நாற்காலி
வகைபடுத்தா மனிதர்வகுப் புரைக்கி லொன்பான்
ஈனமற முன்னுரைத்த தொகைவகையீ தெனநீ
யேற்றியுனக் கிசையவறி யிவையனைத்து மன்றே (53)

தொல்லையவிப் பிறவிகளில் இறந்துபிறந் தளவில்
துன்பமுட னின்பங்க டுய்த்ததனாற் கன்ம
வெல்லையற வீட்டியதற் கீடான வாக்கை
யெடுத்தெடுத்த வாக்கைதோய மிரண்டறவே நின்று
ஒல்லையுறு கருவிதொறு மொருநிலைபோற் றெநமந்(து)
உறுபயன்கள் நுகர்ந்தொழிவில் இதமகித முருவாய்ச்
செல்லுமது சகலமெனப் புதல்வரருட் கடல்வாய்ச்
சேர்ந்துசிவா னந்தவமு தார்ந்துளோரே. (54)

இருவினைகள் புரிந்தருந்தி யெண்ணில்வினை யீட்டி
யின்பமொடு துன்பமுறு மெல்லையினி லுளதாம்
பெருவினைகள் இரண்டுமொரு காலமுறு திசைப்பிற்
பெய்தவினை யெய்தும்வினை செய்திவர்பி றந்திட்(டு)
ஓருவியிடு நிலையதனால் வினைகள்துலை யொப்ப
வொன்றுபடக் கெடுப்பதுபோ னின்றதி ரோதாயி
கருணைதர வன்னிலய இதமகித மாசக்
காட்டிடுசத் திநிபாத நீட்டு மன்றே. (55)

கூறியசத் திநிபாத நான்கு மெய்திற்
குறைவிலறை யருட்குருவாய்க் குறுகி ஞானப்
பேறுபெற்ற பொருட்டிருட்கே வுளசகலம் பிறித்துப்
பிறித்தநிலை நிகழாமற் பெருகருளி னிறுத்தி
லாறுமே லச்செலவி னித்தம் வழாவகையால்
வாழ்வாவுயிர்க்குமலம் வாட்டிடுதல் சுத்தந்
தேறும்வகை யிவையுணர்த்தற் காவதெவர்க் கென்னிற்
தீவிரருக் கென்றுமறை செப்புமன்றே (56)

பாவையர்கட் படும்வீடு பஞ்ச கந்தம்
பாழ்படும்வீ டிருவினைகள் பாறும் வீடு

மேவுகுணங் கெடும்வீடு விவேக வீடு
மேனிசிலை வீடுமலம் வீயும் வீடு
ஓவிலுயிர் கெடும்வீடு சித்தி வீடு
உடல்கேடு பாடாண முற்றிடும்வீ டென்ற
யாவுமிருள் செறிவீடு சிவன்ரு ளெய்தி
யிரண்டறும்வீ டது வீடென் றிபம்பு நூலே. (57)

வேறு.

சொற்றன னருளி னுண்மை சொல்லுவ னுயிரின் றன்மை
யுற்றிடு மைபவத்தை யுணர்த்துதல் ஞான வாய்மை
தற்றெரி சனந்தற் சுத்தி சாற்றரு மான்ம லாபம்
அற்றமி லைஞ்செ மூத்தோ டணைந்தவர் தன்மை தானே. (58)

அவையவ மதனு ளெய்தி யைம்புலன் பொறியாற் பற்றி
யவையவை யாகவுற்றுற் றறியினு மறியுஞ் செய்தி
யெவையுமற் றவத்தை யெய்து மெய்தினு மதீத முண்மை
நவையறு முயிருக் கென்று நாட்டுவர் வீட்டி னின்றோர். (59)

புரமறி விலாமை யானும் புலன்றெறு மறித லானும்
கரணநான் கதனி லுற்ற வவனது கவர்த லானும்
சரமுறு பிராண வாயுத் தான்சட மாத லானும்
உருவுறு சேத னன்ருன் உணர்விணு லுணரு மன்றே. (60)

போதமேற் பொறியென் போத மன்றெனிற் புலன்க ளார்க்குப்
போதமின் றுதவு மென்னிற் புன்றவை சடங்க ளாகு
மாதியிங் குயிர்க்குப் போத மளிப்பனென் றறையி லாவி
சேதன மன்ரு மண்ணல் செடத்திணுக் கறிவி யானே. (61)

போதமே தறிந்தவந்தப் பொருள்சட மாதல் திண்ணம்
போதமெய் யறியா தாகிற் பெறுபொருள் பொய்புகன்ற
போதமே யருளைமுந்திப் பொய்யினை மெய்யாக் காணும்
போதமெய் யசத்து மற்றப் போதமிற் புலப்ப டாதே. (62)

ஏதசத் தறிந்த போத மென்றிட லுயிரன் றெங்கோ
ளுதியிற்ருன் சடங்கட் கறிவில திவையு மற்றைச்
சேதனன் ருனுஞ் சேரிற் றெரியாசிற் சத்தி காணு
ஆதியுஞ் சடமு மென்னில் அருக்கனு மிருளுங் கூடா. (63)

சித்தினை யசித்துக் காணு சித்தினுக் கறிய வேண்டா
சித்தையு மசித்தை யுந்தே ... ...
... ... நம்மு மல்லா வான்விழி போலும் வாய்மை
சித்தினி னின்ற சித்தைத் தேர்தலாற் சிதசித் தாமே. (64)

நோக்கொளி தீப மாகில் நோக்கினுக் கொளிமுன் பில்லை
நோக்கொடு தீபபேத நுவன்றிடிற் பிறந்து காணு
நோக்கொளி சென்றுதீப நுடங்கொளி யடங்கி னாலு
நோக்கொளி காணுந்தீப நுடல்கொளி காட்டுமன்றே. (65)

தங்கிய வேக தேசந் தனுவெலா நிறைந்து நீற்றல்
எங்கு மாயிருத்த ருனை யாவையு மாத லெல்லாம்
அங்கசித் துணர்த்த லென்ப தறைந்திடா மறைக ளான்மாப்
பங்கற வுணர்த்தல் பஞ்ச நிறமகல் படிகம் போல (66)

கரிபரி தேரோ டாளாற் காவலன் பவனி போந்திட்
உரியமா ளிகையின் வாயில் தொறுந்தொறு முற்ற காவல்
புரியவந் தப்புரத்துட் புகுதல்போற் பிராண காவல்
திரியவை யவத்தை மெய்யிற் படுமுயிர் சிவன்ற னாலே. (67)

நனவினில் முப்பத் தைஞ்சு நண்ணிடு நெற்றி தன்னிற்
கனவினில் இருபத் தைஞ்சு களத்தினிற் சித்தந் தன்னில்
நினைவுறு சுழுத்தி மூன்று நீடிய துரிய நாபி
தனிலிரண் டதீதந் தன்னிற் சாற்றிமூ லத்தி லொன்றே. (68)

எண்ணுசாக் கிராதி சொல்லி லிந்திற மாகுங் கீழ்மேல்
நண்ணுசாக் கிராதி யாக நவிலுமுற் பவத்தை யொன்று
பண்ணுமொன் றருளி லுய்க்கும் பரமசாக் கிராதி யாலே
யண்ணுவர் பிறப்பை நீக்கி யரனடி யடைய லுற்றார். (69)

சாக்கிர நிலைமையின் கட் சார்தரும் அவத்தை யைந்து
நோக்கிடி லதீத மாகி யாகவே நோக்கி யங்சண்
போக்ககுங் (கருவி) யோடே புகுதருங் கருவிப் பொற்பை
நீக்கமில் பரமந் தன்னில் நிலைதொறு நின்று பார்நீ (70)

இருடரு மதீத மொன்றில் இரண்டினிற் றுரிய மூன்றில்
தெரிதரு சுழுத்தி நான்கிற் றிகழ்தருங் கனவ தஞ்சில்
விரிதரு சாக்கி ரம்பின் விளங்கிடு மென்பர் மிக்கோர்
இரிதருங் கீழ்மே லாக விரண்டையும் புந்தி செய்யே (71)

கருவியில் விடயந் தானும் காண்பவன் றானு மந்தக்
கருவியு மற்று நிற்றல் கேவலஞ் சகலங் காட்டும்
கருவியில் விடையந் துய்த்தல் சுத்தம தென்று கண்ணிற்
கருவியி லின்மை யான கேவல சகலங் காண்டல். (72)

சத்திய போத மாய்த்தற் காண்டல்சாக் கிரம தாகுஞ்
சுத்தமெய்ப் பரையைக் காண்டல் சுவனமா ஞ் சுழுத்தி சொல்லில்
மெய்த்தத பரையாய் மேவல் துரியமே யின்ப மாதல்
அத்தகு மின்ப மேவி டதீதமென் றறிந்து கொள்ளே. (73)

பொறிகளி லொன்று பஞ்ச பூதங்க டன்னி லொன்று
மறிதரு கரண நான்கு மறிவிக்கும் கலாதி யேழுங்
குறிதரு சுத்த மைந்துங் கூடியோர் புலனை யுண்பன்
அறிவுறு னிவனு லொன்றை யிவனுழிந் தவையு மாங்கே. (74)

சிற்றறி வறியான் றானுய்ச் செடங்களை யறிந்து சேரான்
சிற்றறி வறியான் கண்ணிற் செடத்திற னறிந்து சேரா
சிற்றறி வறியான் றன்மை சேர்ந்ததே வடிவாய் நிற்றல்
சிற்றறி வறியான் றன்னுல் சேர்புல னுர்வ னன்றே. (75)

இறைய வ னறிவு கொண்டே யிவனறி வுறுவ னென்னில்
இறையவன் முதலி யன்ருய் இவன்பெரு முதலி யாவன்
இறையவன் இவனுக் காய்சின்(று) யாவையு மறிவ னென்னில்
இறையவ னிருக்க மற்றிங் கிவன்பிறந் திறந்த லென்னே. (76)

வெய்யவ னன்றி யொன்றும் விளங்கிடா விழிகள் போல
வையன தருளையன்றி யாருயி ரறியா தொன்றும்
பையுள்செய் யிருளைப் பாற்றி பரிந்துயிர் பற்ருய் நிற்குந்
துய்யமெய் யருளை யின்றி வேறுயிர்த் துணை யொன் றின்ரும். (77)

அறிவினுற் பொறிக ளந்தக் கரணமற் றறிந்திட் டாலும்
அறிவினு லறியுஞ் செய்தி யவற்றினுக் கின்மைபோல
வறிவுதா னவன்ற னுலே யறியினு மறியா தண்ணல்
அறிவுதான் வினைகள் யாவும் அறிந்துயிர்க் கருத்து மன்றே. (78)

ஒன்றிடுங் கரண மின்றே லொன்றையு முணரொ ணுதாம்
ஒன்றிய விவற்ரு லண்ணல் உண்மையை யுணர வொண்ணு
ஒன்றுமி லவனே யுன்போல் உருவெடுத் தருளால் வந்திட்(டு)
ஒன்றுநன் னிலையி லுய்க்கு முபாதியை யொழித்தல் செய்தே. (79)

பற்றிய நிறங்க ளாகும் பளிங்கின தொளியும் பற்றி
நிற்றலைப் பளிங்கும் வெய்யோன் நீடொளி யதுவும் போல
முற்றல கதற்குச் சார்வாய் முற்றிலும் முந்நீர் விண்போற்
சிற்றனிற் சடங்க டோயா தென்பர் சிற்சத்தி தேர்ந்தோர். (80)

இருளுயி ரான காலை யாவையு மிருளாய் நின்ற
பொருளது புரைய வெங்கும் புரைவற நிறைந்த வுண்மை
யருளுயிர் விரவி யெல்லாம் அருளொளி யாகி நிற்கும்
மருடெரு ளிரண்டி னுக்கும் மருடெரு ளிரண்டு மின்றே (81)

சாற்றுதற் றெரிச னந்தற், சுதத்தன் ளி லாப மென்னப்
போற்றுமூ வகையே தென்று புகன்றிடில் பாச நீங்கத்
தோற்றரு ஞானம் வந்து தோற்றலைந் தொழிறு டைத்தல்
மாற்றின்றே யத்த மூந்தல் என்று நூல் வகுக்கு மன்றே (82)

சுட்டறி வறிவி னுண்மைச் சொரூபமென் றுலும் போயச்
சுட்டறி வறிவாய்க் கொண்டு துன்பமோ டின்பந் துய்க்கஞ்
சுட்டறி வறியு முண்மைச் சுத்தபோ தத்தாற் றன்னைச்
சுட்டறி வறியு மந்தச் சுட்டறும் அறிவாய் நின்றே (83)

சார்வறி வதனைக் காட்டஞ் சத்திய வறிவி னின்று
சார்வறி வதுவாய் நின்ற தன்னையும் தானாய் நிற்கும்
சார்வறி வினையுங் கண்ட தன்மையும் இறந்து போதஞ்
சார்வறு பரையே யாதி .... (84)

என்றவிப் பரையே யன்றி யாதன்மு னிகழ்த்த லென்று (ன்)
என்றிடில் இதுபே ரின்ப விறைவன தருளா மென்றின்
றுன்னொளி தனிரு லாபோற் றுணைவனிங் கிதற்கு மூலம்
ஒன்றுமில் பரன்றன் சத்தி யீதென வுணர்த்து நூலே. (85)

சின்மய மான வுண்மைச் சிவைசிவ மின்றி யுண்மை
பன்மறை பகரும் வெய்யோன் பாயொளி யிருளைப் பாற்றி
தன்முத லதனைக் காட்டுந் தன்மையின் மலம சற்றி
நின்மல முதலை யாவிக் கருளுமந் நிமலை தானே. (86)

பூசுரர்க் கடிய சத்தின் றன்னிடை பொருந்தல் போல
வீசன தருளு யிர்ப்பால் எய்தலால் இவனே யாவும்
ஆசற வறியு மென்றும் ஐந்தொழில் புரியு மென்றும்
பேசுதல் உண்மை ஞானம் அன்றிது பிராந்தி ஞானம் (87)

மூங்கையாய்க் கொத்தை யாகி முடவனு யிடுமொ ருத்தன்
பாங்கொரு கழுது நண்ணிற் பகர்ந்திடல் பார்த்த லேகல்
ஆங்கதற் குளதா னுலும் யவையவன் பெறுவதுபோல்
ஈங்குயிர்க் குளது நல்கு மிறைதொழி லியற்று மன்றே. (88)

நிலாவிய கலாதி தன்னால் நிகழ்தரு போத மென்றும்
புலனறி வுறுவ தன்றிப் புலன்களி னுண்மை காணா
மலவிரு டுரந்த சுத்த வாய்மையே வடிவா யங்கண்
அலைவறை நிற்க வின்ன வநுபவ முதிக்கு மன்றே. (89)

சுகமுத லுதிக்கு மென்றல் சோர்வுடைத் துண்மை சேர்ந்தோன்
சுகமுத லாவ தின்றித் தோன்றுவ தின்மை யென்னின்
அசமித நிலையிற் றன்னை யறிவுறா னருளினுந்தற்
றிகழ்வில தென்னிற் பெத்த முத்திக டெரித்த லின்றே (90)

தத்துவ சால மொய்த்த சகலமுஞ் சார்வின் றன்மை
யொத்தகே வலமு நீக்கு மொழிவற நிறைந்து நின்ற
சுத்தபோ தத்தாற் றன்னைத் துறந்திடத் தோன்று முண்மை
யத்தொடத் துவித மாதல் அநுபவ நிலைய தன்றே. (91)

நேதிகள் கருவி பண்ணு நின்மல ஞானத் தாக
நேதிகள் கருவி சாரின் நின்றது நேதி யாகா
நேதியோ டதுவு நாச மென்றிடின் ஞேய மார்க்கு
நேதிசெய் போத மாறி நின்றிடின் நிகழு ஞேயம். (92)

நேதிகள் கருவி பண்ணு நின்மல ஞானத் தாலே
நேதிகள் கருவி சாரின் நின்றது நேதியாகா
நேதியோ டதுவு நாச மென்றிடின் ஞேய மார்க்கு
நேதிசெய் போத மாறி நின்றிடின் நிகழு ஞேயம். (93)

ஓரியல் பற்ற போத முபாதிகட் குணவ தாகி
சாருமந் நிலைமை மாறித் தமநிலை விளங்குந் தீபஞ்
சூரியன் முன்பு நிற்ற லொத்திடச் சுத்தா னந்த
வாருதி நிறைந்து விம்மி வரம்பறப் பெருகு மன்றே. (94)

சென்றுறு கேள்வி யோடு சிந்தனை தெளிதல் நிட்டை
யென்றுநான் கிவற்றி னிட்டை யெய்துமா றியம்பின் மூன்றால்
முன்றிகழ்ந் தின்ப மாகு முழுமுத லின்மையாகி
நின்றது போல மாறி நின்றிடில் ஞான நிட்டை. (95)

கேள்விசேர் பாச ஞானங் கிளர்பசு ஞானந் தன்னால்
தாழ்விலா வுண்மை ஞானத் தன்முதல் சார வைத்தற்
பாழிலே பரமா னந்தப் பயிர்விளைத் துளவு காணு
வாழ்விலா வாழ்வே நிட்டை மென்னுமா மறைக டானே. (96)

ஏலவிந் நிட்டை மாறு செய்துழற் கரிதே லிங்கு
மேலிடுங் கருவி தன்னை வேறுசெய் தருளி னிற்றல்
சாலமுன் புகலு நிட்டை தருமிரண் டினையுஞ் சாற்றில்
மூலதே வலமு மானய முயங்குதே வலமும் போலும். (97)

கருதிடிற் கரண முண்டாங் கருத்தறின் மரண மெய்துங்
கருதிடா ததுநா னென்று கருதுவ னென்னி னீதான்
கருதிட வேண்டா வென்றுங் கருத்தினுக் கப்பா லானைக்
கருதிடா ருண்மை ஞானக் கண்டி றந் தவர்க டாமே. (98)

சென்றுறு நிறைவு குன்றுஞ் சிவனுனைச் சேரா நிற்பன்
என்றிடி லுள்ள தன்றாய் இறைவன்வந் தணுக னீபோய்
ஒன்றுத லிரண்டு மன்றி யுன்செல வவன்வ ரத்தாய்
நின்றிடா நிலையே ஞான நிட்டையாய் நிகழ்த்து நூலே. (99)

மாறற மயக்கி வந்த மலச்செல வதனின் வந்த
வேறறு மின்ப வெள்ள வேதகந் தன்னி லுண்மைப்
பேறொடு பெறுதி சென்ற பெருமையா மொழிவை வாணுட்
காறிலை சண்க டந்தா னெனுமுரை தடுக்கு மன்றே. (100)

ஏகமா யிரண்டா யேக மாகுமே லியாவு மேக
மேகமன் றிரண்டா யேக மாமெனி லேக மின்றி
யேகமற் றிநமை யேயாம் என்னிலத் துவித மெய்தா
தேகமே யிரண்டி லாமைக் காணவ மிசையு மன்றே. (101)

மோசனம் பாச மென்னில் நித்தமுன் மொழித லின்று
மோசன மின்மை யாகின் முத்தியு மின்மை யாகும்
மோசனம் அடைத தீபம் முன்னிரு ளிருமை போலும்
மோசன நித்தமென்று மொழிகுவர் முத்தி சித்தர். (102)

அவுத்திரி யதனி னுச முன்வினை யாகத் தோடே
தவிர்ப்புறு நின்ற கன்மஞ் சார்தரும் வினையுண் டேலுற்
பவித்திடா தருளின் மாளும் பான்மையே தென்னில் வன்னிச்
சுவர்க்கணி லேழு தாக்குத் தூரியத் தொழில தாமே. (103)

உடற்றிரி கின்ற திங்கு னுறைவிட மெரியின் வெந்த
படமடி கும்ப கர்ண பணியறு திகிரிப் பான்மை
விடுதிசெய் வருண மைந்தும் விதிப் படி யருளான் மாறி
நடுநிலை விளங்க நிற்க நின்றது நசிக்கு மன்றே. (104)

இருள்வலி யிருளதீசன் அருளுயி ரென்னு மைந்தின்(னை)
பொருடெரி காலை யொன்று போய்வினை விக்கு மற்றொன்(று)
அருள்செறி சிவமுன் னுக்கி யாதியோ டிருள்கீ ழிட்டுத்
தெருளுயிர் பொதுவி லாக்கிச் சிவம்வினை விக்கு மன்றே. (105)

நமவினை யத்த னுப்ப ... ...
... ...
... ...
... ... (106)

செலவறு சி(ய்) யதாகுஞ் செலவறு சேர்வாய்ச் சேறல்
நிலவிய வாயவ் வின்பின் நிறைவது நிறைவுக் கன்மை
யிலதென விரண்டு மற்ற வின்னவா மினிய மேன்மே
லுலைவற லம்ம வென்றே யுணர்த்துவ தெழுத்தி னுண்மை. (107)

சிய்யது சிருட்டி வாவே திதிவவ்வே யழிவு நவ்வே
யையமில் திரோத பவ்வே யருள து பவந டத்தில்
துய்யவஞ் செழுத்தி னுண்மைத் தொழில்களைந் தினையு மாறு (து)
உய்யுமா றுயிர்க்குச் செய்த லீதென வுணர்ந்து கொள்ளே. (108)

பொறிபுல னுதி போக்கிப் போக்குடன் வினையைப் பாற்றிச்
செறியிருட் கிடைய கன்று சிற்பரை யாகி ஞேயத் (து)
அறிவெலா மின்பமாக வின்பெலா மறிவாய் நிற்பர்
பிறிவிலத் துவித வுண்மை பேறுபெற் றவர்க டாமே. (109)

ஆசனஞ் செபந்த வம்மாம் அர்ச்சனை விரதங் காலந்
தேசமோ ரிடங்கு றித்தல் திக்கொடு தான மியாவும்
நாசமோ டியற்ற லற்று ஞாதுரு ஞேய மாதல்
பேசிடி லுறங்கு வோர்கைப் பொருளொழி பெற்றி யாமே. (110)

உள்ளொடு புறம்பே தென்ன வுற்றபூ சனையி ரண்டும்
மெள்ளவே நழுவ வங்கண் மலமிலா வேதத் தார்த்திட்(டு)
எள்ளுமா றிலாத ஞேய மாகவே யின்ப மான
நள்ளொடு கீழ்மேல் விம்மி நவையில ராவ ரன்றே. (111)

மங்குலின் மன்ன யாவும் யாவையும் மங்கு மன்னி
யெங்குமாய் நிற்றல் போல விறையருள் ஞானமெங்கும்

பங்கற நிறைத லன்மெய்ப் பார்வையிற் பார்த்த வெல்லாஞ்
சங்கர னுருவ மாக்கித் தாமற வளர்வ ரன்றே. (112)

தரைமுதற் கருவி யாவுஞ் சடமென வுணர்ந்து ஞானம்
பரையினின் றெவைபு முண்மைப் பார்வையா லழித்துப் பஞ்ச
(வரையு ம தருளான் மாறி வரையறு சிவமே யாகுங்
கரையிலா ஞான பூசை கைவிடார் மெய்வி டாதார். (113)

கண்டது சடமாக் காணும் கருத்தினை யதம மாகக்
கொண்டது கழன்ற காணுக் காட்சிமத் திமத்திற் கூட்டி
யுண்டெனு மிவை யி றந்த வுத்தம நிலைய தான
தொண்டிலத் துவித மாவர் தொலைவறு துகளி லோரே. (114)

ஈசனு மீச னன்பர் வேடமு மிருமை நல்குந்
தேசிக னுருவு முண்மைச் சிவமென வுருகி நெக்குப்
பேசுதல் குழற லன்பு பெருகிட விழிநீர் பொங்க
வாசற வழிவரின்ப வநுபவ மளவி லோரே. (115)

பெத்தமு முத்தி தானும் பேசிடின் முன்னும் பின்னும்
ஒத்தல காயு தாதி யுணர்கி.........ன்று மித்தை
(வித்தக)ர் நாலுக் கெட்டா விமலவே தாந்த மாகி
நித்தமா யுளதா மொன்றை நிமழ்ந்திடு மிந்நூ லன்றே (116)

இந்தநூ லுணர்த்து மெல்லை யருளளித் தேது நாடி
முந்திய வுவமை நான்கு முறைமையிற் கண்டு முன்பின்
வந்தவா றெருக்க நோக்கி மலைவற மயக்கந் தீரச்
சிந்தைவைப் பவர்பா லுண்மைத் தெளிதரத் தெருட்ட லாமே. (117)

திருநெறி விளக்க மென்னச் சிவாகமத் தெய்வ நூலின்
பெருமையைச் சிறுமை யாக்கிப் பிழைப்பு வாய்ப்பறியா நாயேன்
அருளெனும் பித்து மேலிட் டறைந்தன னங்கணக்கன்
வருபகீ ரதிபோ லிந்நூல் மதிப்பர்நன் மதிபெற் றோரே. (118)

வாழ்த்து

வாழிபுகழ்க் காழிநகர் வாழிதிருத் தண்டைக்கால்
வாழிதிருக் கண்ணுடைய வள்ளல்தாள்—வாழி
சுருதி தொடர்ந்தபெருந் தோணியிறை வாழி
திருநெறிச்சந் தானத் திரள். (119)

திருச்சிற்றம்பலம்.

திருநெறிவிளக்கம் முற்றிற்று.

OUR EXCHANGES.

1. The Divine Life, Sivanandanagar, Rishikesh, U. P.
2. Mysore Information Bulletin, Government of Mysore.
3. Madras Information, Govt. of Madras, Madras.
4. The Journal of the Oriental Research, Madras.
5. Bulletin of the Govt. Oriental Manuscripts Library, Madras-5.
6. The Journal of University of Bombay.
7. American Newsfile of the U. S. Information Service.
8. The Journal of the Kerala University Oriental Mss. Library, Trivandrum.
9. Agra University Journal of Research, Agra.
10. Tirumalai Tirupati Devasthanam - Monthly Bulletin, Tirupati.
11. The Adyar Library Bulletin, Adyar, Madras-20.
12. Journal of Sri Venkateswara University Oriental Institute, Tirupati.
13. Journal of the Oriental Institute, Baroda.
14. Annals of the B. O. R. Institute, Poona-4.
15. Sentamil (Tamil) Madurai Tamil Sangam, Madurai.
16. Gnanasambandam (Tamil) Dharmapuram.
17. Tamil Pozhil (Tamil) Karanthai Tamil Sangam, Karanthai, Tanjore.
18. Vaidya Chandrika, (Tamil) Teppakulam, Tiruchy.
19. Eelanadu (Tamil) Jaffna, Ceylon.
20. American Reporter - Tamil Edition.
21. Vijayavani (Telugu) Buckinghampet P. O., Vijayawada-2.
22. Traimasik, Bharat Ithihasa Samshodhak Mandal, Poona.
23. Samshodhak, Rajwade Samshodhak Mandal, Dhulia.
24. Quarterly Journal of Mythic Society, Bangalore.
25. Jain Siddhanta Bhaskar & Antiquary, Arrah, (Bihar).
26. Udayana Patrika, Tiruvaiyaru, Tanjore Dt.
27. UNESCO Bulletin for Libraries, 19, Avenue Klēbar, Paris-16e-France.
28. Sutantiran, (Tamil Weekly) Colombo.
29. Bulletin of Ramakrishna Mission Institute of Culture, Calcutta.
30. The Indo-Asian Culture, Pataudi House, New Delhi-1.
31. Dharma Chakram, Sri Ramakrishna Tapōvanam, Tiruparaiturai, Trichy Dt.
32. Sri Ramakrishna Vijayam, Sri Ramakrishna Matam, Madras-4.
33. News Bulletin Embassy of the People's Republic of China, New Delhi.
34. News from Yugoslovia, Yugoslav Embassy, 12, Sundaranagar, New Delhi.
35. SOCIĒTIĒ ASATIQUE, 1, Rue de Siene, Paries IVe.
36. Devasthana Patrika, Srirangam.
37. Astrological Magazine, "Sri Rajeswari", Bangalore-3.
38. Kurukshetra, The Publication Division, Old Secretariat, Delhi-8.
39. Sivaji, Teppakulam P. O., Tiruchirapalli.

40. Sārasvatī Sushamā, Benares.
41 Kumaraguruparan, Srivaikuntam.
42. Sri Vaishnava Sudarsanam, 3, Puthur Agraharam, Tiruchirapalli.
43. Abhyudaya, Progressive Writer's Association, Vijayawada-2.
44. Sri Sajjanatoshini Patrika, 3-A/80, W. E. A. Koral Bagh, New Delhi.
45. Annals of Oriental Research, University of Madras, University Buildings, Madras-5.
46. Indian Philosophy and Culture, Vaishnava Research Institute, V. T. University, Vrindaban, U. P.
47. American Labour Review, American Embassy, New Delhi.
48. Soviet Land (English and Tamil Editions) Information Department of the USSR Embassy in India, 25, Barakhamba Road, New Delhi.
49. Journal of the Ganganath Jha Research Institute, Allahabad.
50. China Today (English and Hindi Editions) Embassy of the People's Republic of China in India, New Delhi.
51. Neetee (A Non-party English Weekly) 35, Stephen House, 4, Dalhousie Square East, Calcutta-1.
52. Journal of the Annamalai University, Annamalainagar, Chidambaram.
53. Indian Archives, National Archives of India, Queensway, New Delhi.
54. Sarvodaya (English and Tamil Editions) 24, Srinivasapuram, Tanjore.
55. Bulletin of the Chunilal Gandhi Vidyabhavan, The Sarvajanik Education Society, Surat.
56. The Journal of Family Welfare, 272, Dadabhoy Navroji Road, Bombay-1.
57. Indian Publisher and Book-seller, C/o. Popular Book Depot, Bombay-7.
58. Naya Sahitya, Kashmiri Gate, Delhi-6.
59. Book-Lover, 44, Cowasji Patel Street, Bombay-1.
60. The Short-hand Writer, A. I. I. S. 15-A/29, W. E. Area, Koral Bagh, P. B. No. 702, New Delhi.
61. Sangeet, Musical Monthly Magazine, Sangeet Karyalaya, Hathras, Madhya Pradesh.
62. Marathi Samshodan Patrika, A Quarterly Journal of the Marathi Post-Graduate and Research Institute, Mumbai Marati Granthasangrahalaya Thakurdwar, Bombay-2.
63. Santi Samachar, Akhila Bharatiya Santi Parishad, 14, Munshi Niketan, Asuf Ali Road, New Delhi.
64. Bharati, Tamil Writer's Association, Crescent Society Buildings, Madras-2.
65. Vēdavāṇi - Ajmath Gadh, Palace P. O., Benares-6.
66. Girama Nalam, The Director of Information and Publicity, Govt. of Madras.
67. Sri Nṛsimhapriya, Sri Ahobila Mutt, Tiruvallur.
68. UNIVERSITAS, BIRKENWALDSTR, 44, STUTTGART (Western Germany).
69. Self-Realization Magazine, 3880 San Rafael Avenue, Los Angeles 65, CALIFORNIA, U. S. A.
70. Sri Sankara Kṛpā, Tennur, Tiruchy.